Registered as a News Paper



உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

**சிறி கருமாரி நகையகம்**

177-D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு
வந்த எமது நிறுவனம் தற்போது பெயர்
மாற்றத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.
(சி-7411)

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி -15 | 01-11-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 256



## வன்னியிலிருந்து தாய்லாந்துக்கு விடுதலைப் புலிகள் புறப்பட்ட போது ....







ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 01.11.2002

## இயல்பு வாழ்க்கை ஒரு தொலை தூரக்கனவு

புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசும் விடுதலைப்புலிகளும் இணக்கம் காணப்பட்ட பல்வேறு முக்கிய விடயங்களில் - மிக முக்கியமான சில அம்சங்களை நடைமுறைப்படுத்துவதற்கு படைத்தரப்பினர் தொடர்ந்தும் முட்டுக்கட்டை போடுபவர்களாகவே உள்ளனர். இன்னமும் தெளிவாகக் கூறுவதானால் மக்களின் பாதுகாப்பு என்ற அம்சத்தை விடவும் படைத்தரப்பினர் தமது சுயபாதுகாப்பு என்ற விடயத்திற்கே அதிக முன்னுரிமைகொடுப்பதாகத் தெரிகிறது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையிலான சமாதான நகர்வுகள் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை நிலையினை எட்டியுள்ள இந்த நிலைமையிலும் போர்நிறுத்தம் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சூழலிலும் கூட, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான உத்தரவாதத்தினை அரசாங்கத்தினால், படையினரின் ஒத்துழைப்பின்றி இன்னமும் வழங்கமுடியாத நிலைமைகளே தொடர்வதாக உள்ளது.

இது ஒரு நம்பிக்கை தரும் விடயமல்ல.

அமைதிப்பேச்சுக்களின் ஆதாரமே மக்களின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகியவற்றினை உள்ளடக்கியதான இயல்பு வாழ்க்கைக்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதில் தான் தங்கியுள்ளது. இந்த இயல்பு வாழ்க்கை என்பது தமிழ் மக்களின் பாதுகாப்புடன் ஒன்றிணைந்ததாகும்.

சுற்றிலும் இராணுவச்சூழல் என்பதும், வாழ்விடங்களை விழுங்கி வைத்துள்ள பாதுகாப்பு வலயங்கள் என்பதும் மக்களின்இயல்பான வாழ்வின் பிரதான அம்சமான 'அச்சுறுத்தல்களற்ற அமைதி' என்பதை முற்றிலும் நிராகரிக்கும் விடயமேயாகும்.

இந்த அச்சுறுத்தல்களற்ற அமைதி என்பது இராணுவ சூழலுக்குள் - பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் என்றுமே ஏற்படப்போவதில்லை.

இராணுவம் என்பது எந்தக்காலத்திலுமே தமிழ் மக்களின் பாதுகாவலனாக இருந்ததாக வரலாறு இல்லை. அது சிங்களப் பேரினவாத ஆட்சியில் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிந்து இயங்கும் ஒன்றாகவும், தமிழ்பேசும் மக்களை காலம்காலமாக அழித்தொழித்து அச்சுறுத்தி வந்துள்ள ஒன்றாகவுமே இருந்துள்ளது.

ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் சுய பாதுகாப்பினை பலப்படுத்துவதை மட்டுமே இலக்காகக்கொண்டியங்கும் மனிதநேயமற்ற அமைப்பாகும். அதற்கு ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்பினுள் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கையின் அர்த்தம் புரியாது.

இதற்கு உதாரணமாக சில தினங்களின் முன் யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'பாதுகாப்பு வலயத்தை நீக்கமுடியாது.... நிரந்தர அமைதியின் பின்னரே தளர்வுகளை மேற்கொள்வது பற்றி யோசிக்கலாம்' என படையதிகாரிகள் கூறியதைச் சொல்லமுடியும்.

இதற்கு அவர்கள் கூறும் காரணம் 'தமது பாதுகாப்பு காரணங்களை' எந்த வகையிலும் விட்டுக் கொடுக்க முடியாது என்பதேயாகும்.

இங்கே தான் 'பாதுகாப்புப்படை' என்ற சொல்லின் அர்த்தமே விளங்குகிறது. இது தேசிய பாதுகாப்புப்படையோ, மக்களின் பாதுகாப்புப்படையோ அல்ல, தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான படைதான் என்றே உணரக்கூடியதாக உள்ளது.

'அதாவது தங்களால் எதனைச் செய்யமுடியுமோ அதனை மட்டும் தான் தங்களால் செய்யமுடியும்' என அவர்கள் ஒரேயடியாக தெரிவித்திருப்பதானது புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்தோ, சமாதான முன்னெடுப்புகள் குறித்தோ தமக்கு எந்தவிதமான அக்கறையோ பொறுப்போ கிடையாது என்ற அவர்களின் கருத்தையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.


மக்களின் மீள்குடியேற்றத்திற்காகவோ, இயல்பு வாழ்க்கைக்காகவோ, தங்களது பாதுகாப்பு அக்கறைகளை புறக்கணித்து முடிவெடுக்கக்கூடிய நிலையில் இராணுவத்தினர் செயற்படமுடியாதென யாழ்மாவட்ட பிரதிக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி திட்டவட்டமாக தெரிவித்திருப்பதானது அரசின் உத்தரவாதங்கள் குறித்து தமக்கு எந்தவித உடன்பாடும் கிடையாது என்பதையே வலியுறுத்துகிறது.



ஆக... தமிழ்மக்களின் இயல்பு வாழ்வு என்பதை சிறிலங்கா அரசு ஏற்படுத்த முனைந்தாலும் கூட (அப்படிச்சொன்னாலும் கூட) இராணுவம் அதனை அனுசரித்து நடக்கத்தயாரில்லை என்றே தெரிகிறது. இதற்கு இராணுவத்தினர் பின்னால் சில அதீத அதிகார சக்திகளின் செயற்பாடும் இருக்கிறது என்ற சந்தேகமும் எழவே செய்கிறது.

ரணிலின் ஆதரவு இராணுவம் சம்மதித்தாலும் முப்படைத்தளபதி சந்திரிகாவின் இராணுவம் சம்மதிக்காது என்பது உறுதியானதாகும்.

இந்த நிலையில் தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது தொலைதூரக்கனவாவே உள்ளது. ❑



## தூரனின் பார்வையில்...

யாழ்குடா நாட்டை விட்டு தமிழ் மக்கள் முற்றிலுமாக ஒரு இரவோடு இரவாக 'சூரியகதிர்' இராணுவ நடவடிக்கையிலிருந்து உயிர்தப்பவும், இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கிவிடாதிருக்கவும், வெளியேறிய அந்த வரலாற்று துயர்மிக்க இடப்பெயர்வு நடைபெற்று ஏழுவருடங்கள் நிறைவு பெற்றுவிட்டன.

வேர் ஊரோடு ஆழப்பதிந்திருக்க செடி ஒரு பக்கம் கிளை ஒருபக்கம், பூ ஒருபக்கம், பிஞ்சொருபக்கமென வன்னிப் பெருநிலப்பரப்பின் காடுகளிலும், வெளிகளிலும் வதிவிடம் என்ற பெயரில் ஏதோவொன்றை அமைத்து உயிர்தப்புதலுக்கான ஒரு வாழ்வை முன்னெடுக்கத் தொடங்கிய வேளை, மீளவும் ஊர்திரும்பல் என்பது இலகுவில் சாத்தியமாகும் என எவருமே நினைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தால் விடுதலைப் ஊர் நோக்கிய நேர்நோக்குடன் எமது மக்கள் பயணிக்கும் வரலாற்றுத் திருப்பம் நிகழ்ந்துள்ளது.

வன்னி மண்ணோ தொடர்ந்தும் வரலாற்றை படைக்கும் தனது செயற்பாடுகளை எத்தனையோ பரபரப்புக்கும் உலகத்தின் பிரமிப்புக்கும் மத்தியில் மௌனமாக மேற்கொண்டு வருகின்றது.

ஒரு பெயர் குறிப்பிட விரும்பாத சிங்களப் பத்திரிகையாளர் 'சிறிலங்காவின் தலைவிதியை வன்னிப் பெருநிலம் தீர்மானிக்கிறது.' என்று அண்மையில் யாழ் நகரில் வைத்து தன் சக நண்பர்களுக்கு கூறியதை இங்கு குறிப்பிடவே வேண்டியுள்ளது.

சர்வதேச நாடுகளின் ராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள் சுற்றுலாப்பயணிகள், வரலாற்றாசிரியர்கள், அரசியல் ஆய்வாளர்கள் இன்று

# துயரம் கவிந்த இடப்பெயர்வும் வீரம் நிறைந்த மீள் வருகையும்...

புலிகளை அழித்ததற்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முற்றாக முறியடித்ததற்கும் சமனாகும் என சிறிலங்கா அரசும் அதன் இராணுவமும், அவர்களின் எடுபிடிகளான தேசவிரோத தமிழ்க்குழுக்களும் போட்ட கணக்கு முழு முட்டாள் தனமானது என்பதை வரலாற்று வரிகளாய் பதிவு செய்ய வன்னி மண்ணில் ஓயாத அலைகளாய் எழுந்த பெருவீரம் வழிவகுத்தது.

சூரியக்கதிரின் கொடுமையால் தமிழ் மக்களை ஓட ஓட விரட்டிய சிங்கள இராணுவம், ஓயாத அலைகளின் எழுச்சியின் முன் கதிகலங்கிப்போய் சகலதிக்குகளிலும் பார்த்துப்பார்த்து ஓடியதை வரலாறு மிகத்தெளிவாக பதிவு செய்தேயுள்ளது.

வெற்றி நிச்சயம் என மார்தட்டி பிரகடனம் செய்தவர்கள், தமக்கான தோல்வி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும் என நினைத்துக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள்.

அடங்காப்பற்று வன்னி மண்ணின் சரித்திரம்அறியாதவர்கள் வெறும் காடென்று நினைத்து தம் ஆக்கிரமிப்புச் சுவடுகளை அழுத்தமாகப் பதித்த வேளையில் அதுவே அவர்களுக்கான சுடகாடாக மாறும் எனக் கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்கள்.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து 'யாப்பாப்பட்டுண' என சிங்களத்தில் பெயரிட்டு, சிங்கக் கொடியேற்றி வெற்றி ஆரவாரம் செய்த அந்தப் போலி - அரசியல் ஜெனரலான அநுருத்த ரத்வத்தை ஏ-9 யாழ் கண்டி வீதியை - யாழ்குடா மக்கள்அழுதழுது, மனம்வெதும்பி, ஏக்கமும் விரக்தியும் மட்டும் சுமந்தவர்களாக கால்நடையாகக் கடந்து இடம்பெயர்ந்து வந்த வீதியை - கைப்பற்றி எமது தேசியத்தலைவர் பிரபாகரனுடன் கைகுலுக்கி தனது வெற்றியைப் பிரகடனம்செய்து கொண்டாடுவேன் என்று முழங்கிய, ரத்வத்தை தனதுமுகவரியே சிதையுமளவிற்கு 'வரலாற்றுச் சிறப்புமிக்க தோல்வி' யொன்றினையேதான் வெகுமதியாகப் பெறுவார் எனக் கற்பனை கூடச் செய்திருக்கமாட்டார்.

கடந்த ஏழாண்டுக்குள் விடுதலைப்புலிகளும், தமிழீழ மக்களும், வன்னி மண் படைத்த சாதனைகளும் குறித்த வெற்றிகளும்தடைமேல் தடைவரினும் அவற்றை வெகு நுட்பமாகக் கையாண்டு மேலெழுந்து கம்பீரம் காட்டிய விதமும், சிங்கள அரசை மட்டுமல்ல முழு உலகையுமே வியக்க வைத்தது.

'போர் மூலம் சமாதானம்' என அறைகூவல் விடுத்த தத்துவ வித்தகியான சந்திரிகாவின் அரசை சிங்கள மக்களே தூக்கியெறிய வைத்த அரசியல் வெற்றியும், விடுதலைப் புலிகளின் அரசியல் சாதுரிய நகர்வுகளுக்கு கிடைத்த பெரும் அங்கீகாரமாகியது. புதிய ரணிலின் அரசு பதவியேற்கு முன்னரே போர்நிறுத்தம்செய்து அமைதிக்கான சமிக்ஞையை வெளியிட்டது. முதல் இப்போது தாய்லாந்தில் இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தை நிலைவரை நடைபெற்ற இந்த 10 மாதகால, ராஜதந்திர போராட்டம் என வர்ணிக்கப்படும் சமாதான நடவடிக் கைகள் எமது மக்களையும் குறிப்பாக சிறிலங்காவின் மக்களையும் நிம்மதிப் பெருமூச்சு விடவைத்துள்ளது.

சூரியகதிரில் தொடங்கி அக்கினிச்சுவாலை வரை நீண்ட பல சர்வதேச நாடுகளின் ஆலோசனைகள்-அனுசரணைகளுடன் கூடிய இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் பல்வேறு தந்திரோபாயங்களையும் பிரமிக்க வைக்கும் மூலோபாயங்களையும் கையாண்டு எமது தேசியத் தலைவரின் போரியல் ஆற்றலை முறியடித்து வெற்றி கண்ட பெருமிதத்துடன் வரலாற்றில் புதிய அத்தியாம் ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

யாழ்- கண்டி வீதி அதுவும் ஆனையிறவுத் தடைமுகாமின் -இராணுவத்தளத்தின் சுவடுகளேயற்ற - ஏ-9 என எப்போது நாகரீகமாக குறிப்பிடப்படும் வீதி திறக்கப்பட்டுவிட்டது. எந்த வீதியால் ஒரே இரவில் கைதடி வரவேற்பு வளைவைத்தாண்டி கண்ணீரும், கம்பலையுமாக, கால்கள் தள்ளாட இயற்கையின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் குடும்பம் குடும்பமாய் வன்னி நோக்கி மக்கள் இடம்பெயர்ந்து வந்தார்களோ அதே பாதையில் இன்று எவ்வித அச்சமோ, பீதியோ இன்றி, வெற்றி பெற்ற மனிதர்களாய் தமது மக்களின் வீரவரலாற்றுச் செய்தியைச் சுமந்தவர்களாய் பூக்கள், பிஞ்சுகள்,கிளைகள்,செடிகள் என மீளிணைப்புச் செய்துகொண்டும் வேர்களைத் தேடிச் சென்று கொண்டுமிருக்கிறார்கள்.

எந்த இராணுவத்திற்கு பயந்து, அஞ்சி,ஓடினார்களோ அவர்கள் பார்த்திருக்க அவர்களுக்கு முன்னால் தமது வன்னி நோக்கிய தமது பார்வையை விசாலப்படுத்தி வருகிறார்கள். இந்த வயற்பரப்புகளும் காடுகளும், உருச்சிதைந்த சிறு நகரங்களும், இப்படியொரு போர் வரலாற்றின் வீரம்செறிந்த, தியாகம் உறைந்த பதிவுகளை கொண்டிருப்பதை துருவி ஆராய்கிறார்கள் பதிவு செய்கிறார்கள்.

கொழும்பிலிருந்தும் ஏனைய தென்பகுதிகளிலிருந்தும், விரைந்து வரும்வாகனத் தொடர்களில் வந்து சொரியும் மக்களின் மனதில் ஏக்கம், வியப்பு, பரபரப்பு, எல்லாவற்றிற்கும் மேலாக உண்மைகளை நேரில்பார்த்தறியும் ஆர்வம் என பல்வேறு உணர்ச்சிகள் கொப்பளிப்பதை அவர்களின் முகங்களில் பிரதிபலிக்கின்றன.

தங்களின் நம்பிக்கைக்குரிய அரசியல்வாதிகளும் தாங்கள் தேர்வு செய்திருந்த அரசும், தமிழ் மக்கள் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் பற்றியும், அவர்களின் போராட்டம் சம்பந்தமாகவும் இதுவரைகாலமும் கூறிவந்த கருத்துக்களின் திணிப்பால் தத்தம் மனங்களில் உருவாக்கியிருந்த பொய்மைத் தோற்றங்கள் முற்றும் முழுதாக நொருங்கிபோய்விட்டதை அவர்களே மனந்திறந்து கூறுகிறார்கள்.

சமாதானத்தையும், அமைதியையும் தமது அரசியல் அபிலாசைகளுக்காக ஆகுதியாக்கி, போரின் பேரால் தமது சுயவளங்களை மட்டும் பெருக்கிக்கொண்டு தங்களை இதுவரை காலமும் ஏமாற்றிய தங்களின்அரசியல் தலைவர்களை அருவருப்புடன் மறந்துவிடவே அவர்களில் பெரும்பாலானோர் நினைக்கிறார்கள்.

வடக்கும்-கிழக்கும்- குறிப்பாக வன்னி மண்ணும் ஒரு கண்காட்சித்திடலாக இருக்குமென கற்பனைபண்ணி வருபவர்கள் அது சிங்களப் பேரினவாதத்தின் ஆட்சியாளர்களின் வெங்கொடுமைச் சாக்காடாக இருக்குமென கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்கள்.

அவர்களுக்கு எல்லாமே இங்கு அதியசமாக மட்டுமல்ல அதிர்ச்சியூட்டுவதாகவும் உள்ளதாகக் கூறுகிறார்.

இத்தனை இராணுவ அட்டூழியங்களையும் அரசியல் காட்டுமிராண்டித்தனங்களையும் தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொண்டு முறியடித்தார்கள்.? இவ்வளவு நடந்ததன் பின்னரும் எந்த நம்பிக்கையுடன் சிறிலங்கா அரசுடன் சமாதானம் பேச நேசக்கரம் நீட்டும் மனப்பக்குவம் இவர்களுக்கு எப்படிவந்தது? என்பது அவர்களுக்கு விடைகாண இயலாத கேள்விகளாகவே உள்ளன.

எனினும் போர்நிறுத்தமும் சமாதான முன்னெடுப்பும் தமிழ்மக்களை விடவும் தென்னிலங்கை மக்களையே பெரிதும் நிம்மதிப்பெருமூச்சு விடவைத்துள்ளது.

போர்நிறுத்தத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை என்பதே இதன் அர்த்தமாகும். ஆனாலும் எம் மக்கள் தங்களின் இருப்பினைத்தேடி நம்பிக்கையுடனும் துணிவுடனும் தங்கள் தங்கள் பாரம்பரிய வாழ்விடங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். பேரினவாத இராணுவ அரசியல் ஒடுக்கு முறைகள் அடக்கு முறைகள் அனைத்தையும் எமது போராளிகளின் அளப்பரிய தியாகங்களினாலும்வியத்தகு போரியல் மூலோபாயங்களின் மூலமும் முறியடித்து நாம் யார் என்பதை உலகிற்கும் சிறிலங்கா அரசிற்கும உணர்த்திய பின்னர்தான், மேற்குறிப்பிட்ட நிம்மதிப் பெருமூச்சுக்கான முழு அளவிலான சர்வதேச சமூகமும், சிறிலங்கா அரசும், மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் உருவானது. ஆகவேதான் விடுதலைப் புலிகள் மனமுவந்து நீட்டிய சமாதானக் கரத்தை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் சிறிலங்கா அரசுக்கும் தேவைப்பட்டது.

இது ஒரு வரலாற்றுத் திருப்பமாகவும் மூன்றாம் கட்ட ஈழப்போரின் முடிவாகவும் அமைந்ததுடன், இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் தங்களின் 'வேர்கள் தேடி' போரின் சிதைவுகளிடையே மீண்டும் ஒரு வாழ்வை உருவாக்கி வென்றுகாட்டும் நம்பிக்கையுடன், ஏற்கனவே பெற்ற வெற்றியின் உறுதியுடன் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையினருமாய் யாழ் குடாவுக்குள் மீள் வருகைபுரிந்த வரலாற்று திருப்பமாகவும் அமைந்தது.

'தருமத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும் ஆனால் தருமம் மறுபடியும் வெல்லும்' என்ற பகவத்கீதை வாக்கியங்கள் இங்குதான் அர்த்தம் கொண்டவையாக உணரப்பட்டது.

# யாழ்ப்பாணம் இப்பொழுது யாருடைய பக்கம்?

நிலாந்தன்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த மானுடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகளின் போது ஒரு இரவு, படித்த யாழ்ப்பாணத்தவர் ஒருவர் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் நின்று சொன்னார் ''பழைய யாழ்ப்பாணம் திரும்பி வந்துவிட்டது போலிருக்கிறது'' என்று.

உண்மைதான் அந்த நான்கு நாட்களும் வீரசிங்கம் மண்டபத்தை சூழ்ந்திருந்த ஒளி கோட்டை மேட்டின் மீதும், முற்றவெளியிலும் பெரும் நிழல்களை வீழ்த்தியிருந்தது. மண்டபத்திலிருந்துண்டாகிய ஓசைகள் புல்குளத்தையும் பண்ணைக் கடலையும் நிறைத்துக் கொண்டிருந்தன.

நாட்டின் நாலா பக்கத்திலிருந்து பேராளர்கள் வந்திருந்தார்கள். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கொழும்பு, வவுனியா, மலையகம், இந்தியா, ஐரோப்பா என்று எல்லாத் திசைகளிலிருந்தும் அறிஞர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் அங்கே திரண்டிருந்தார்கள்.

அந்த நான்கு நாட்களாக வீரசிங்கம் மண்டபம் ஒரு நொதியம் போல நொதித்துக் கொண்டேயிருந்தது.

அண்மையில் கொரியாவில் நிகழ்ந்த ஆசிய விளையாட்டுக்களுக்குப் பிறகு உலகில் அதிகம் மீடியாக்களின் கவனிப்பைப் பெற்ற ஒரு நிகழ்ச்சி இது என்று ஐரோப்பாவிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சிதறிப்போன தமிழர்களை மீண்டும் ஒன்று சேர்த்ததில் மானுடத்தின் தமிழ்க் கூடல் கணிசமான அளவு வெற்றி பெற்று விட்டது.

இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்துக்கான புலிகளின் அரசியல் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதி யென்றே கூற வேண்டும். அப்படிப் பார்த்தால் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின் நிகழ்ந்த பொதுக் கூட்டங்கள் போராட்டங்கள், சந்திப்புக்கள் போன்ற எல்லாவற்றோடும் ஒப்பிடுகையில் இந்த மாநாடு வித்தியாசமானது. தனித்துவமானது.



இது ஒரே நாளில் முடிந்து விடும் பொதுக் கூட்டம் போன்றதல்ல. நான்கு நாட்களாக தொடர்ச்சியாக நொதித்துக் கொண்டிருந்த ஒரு தொடர் நிகழ்ச்சி.

வழமையாக பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ள விருப்பப்படாத ஆனால் யாழ்ப்பாணத்தின் அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல நடுத்தரவர்க்கத்தின் பிரதிநிதிகள் அதிகம் இதில் கலந்து கொண்டார்கள்.

அதோடு முக்கியமாக எல்லா இடங்களிலுமிருந்து வந்த தமிழர்கள் சேர்ந்து பழகவும், அபிப்பிராயங்களைக் கலந்து பகிரவும் அவசியமான ஆனால் மிக அரிதான ஒரு வாய்ப்பை இந்த மாநாடு வழங்கியது.

இதெல்லாம் சேர்ந்து வீரசிங்கம் மண்டபத்தின் சிறிய முற்றத்தில் நின்று பார்க்கும் எவருக்கும் பழைய யாழ்ப்பாணம் திரும்ப வந்து விட்டதோ என்று பிரமை கொள்ளும் அளவுக்கு ஒரு தோற்றத்தை உண்டாக்கி விட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சிக்குப் பின் யாழ்ப்பாணத்தின் நடுத்தர வர்க்கத்தினரை பெருமெடுப்பில் ஒன்றுகூட்டி வைத்திருந்த இம்மாநாட்டில் பலதரப்பட்ட யாழ்ப்பாணத் தவரோடும் கதைக்க முடிந்தது.

இதன்போது அவர்கள் பகிர்ந்து கொண்ட அபிப்பிராயங்கள், அச்சங்கள் கவலைகள், சந்தேகங்கள் போன்றவற்றின் குறுக்கு வெட்டு முகத்தோற்றம் ஒன்றைக் காட்டுவதே இன்று இப்பத்தியின் நோக்கம்

யாழ்ப்பாணம் வெளித் தோற்றத்தில் கலகலப்பாக பூரிப்பாக காணப்பட்டாலும் அதன் அடிமனதில் படிந்திருக்கும் அச்சம் அகலவேயில்லை.



இப்பொழுதும் யாழ். மாநகர சபை எல்லைக்குள் அடங்கும் அரியாலையின் உட்பகுதிகளில் படையினர் துப்பாக்கி முனையில் வீடு கேட்பதாக ஒரு பத்திரிகையாளர் கூறினார்.

பெண்கள் பின்னிரவுகளில் வீதிக்கு வர அஞ்சுகிறார்கள்.

நகரப் பகுதியில் அநேகமான எல்லா முக்கிய சந்திகள் திருப்பங்களில் உள்ள வீடுகள் கட்டடங்கள் தொடர்ந்தும் படையினரின் பிடியிலேயே உள்ளன. இவ்வீடுகளின் சொந்தக்காரர்களுக்கு பெருந்தொகை வாடகை தரப்படுவதாகவும் நஷ்டஈடு வழங்கப்படும் போது அவர்களுக்கே முன்னுரிமை தரப்படுவதாகவும் உறுதி செய்யப்படாத ஒரு தகவல் கூறுகிறது.

மாநகர சபை எல்லைக்குள் அடங்கும் உட்கிராமங்களில் சனங்கள் இரவு 10 மணிக்குப் பிறகு வீதிக்கு வருவது குறைவு. அங்கெல்லாம் இரவு பத்து மணிக்குப் பிறகு ஒருவித உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் உண்டு என்று சொல்லுமளவுக்கு நிலைமையுள்ளது.

அச்சத்திலிருந்து முற்றாக விடுபடாத யாழ்ப்பாணம் யாரையும் நம்பத்தயாரில்லை என்று ஒரு உயரதிகாரி கூறினார்.

சமாதானத்தின் நிச்சயமற்ற தன்மைக்குட் சிக்கி இரண்டாகக் கிழிபடுவதை விடவும் பேசாமல் ஒதுங்கி இருந்து விடுவது சமயோசிதமானது என்று சொன்னார் இன்னொரு படித்த யாழ்ப்பாணத்தவர்.

இதெல்லாம் இவ்வாறிருக்க யாழ். பல்கலைக்கழகத்திலிருக்கும் சில நண்பர்கள் வன்னி மைய நோக்குநிலையில் உள்ள ''நிதானமின்மைகள்'' என்று அவர்கள் கருதும் சில அம்சங்களைக் குறித்து ஆட்சேபம் தெரிவித்தார்கள். அதாவது வன்னி மைய நோக்கு நிலையிலிருந்து யாழ்ப்பாணத்தைப் பார்ப்பது என்று சில சமயங்களில் யாழ்ப்பாணத்தைப் பிழையாக புரிந்து கொள்வதற்கே உதவும் என்று மவர்கள் கூறுகிறார்கள்.

ஈழப்போரின் ஆறாண்டு கால வனவாசத்தைப் பற்றிக் கதைக்கப்படும் அளவுக்கு யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சிக்குப் பின் யாழ்ப்பாணத்தவர் கொடுத்த விலை பற்றி அதிகம் கதைக்கப்படுவதில்லை என்றுமவர்கள் குறை கூறுகிறார்கள்.

ஈழப்போரின் தலை நகரமாயிருந்த குடாநாட்டை சந்திரிகா உயிருள்ள ஒரு ஷோகேஸ் ஆக மாற்றியபோது எப்படியெல்லாம் யாழ்ப்பாணம் பழி வாங்கப்பட்டது, அவ மதிக்கப்பட்டது என்பவற்றைப் பற்றி யாரும் அதிகம் கதைப்பதில்லை என்று மவர்கள் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுவதிலும் ஓரளவுக்கு உண்மையுண்டு. ஆனால் சந்திரிகா அரசின் உயிருள்ள ஷோகேஸ் என்பதினாலேயே யாழ்ப்பாணத்திற்கு தனி விசேட கவனிப்பிருந்தது. படித்த, நடுத்தர வர்க்கம் அதிகம் வளர்ச்சி பெற்ற யாழ்ப்பாணத்தைக் கையாளும் போது கொழும்பு எப்பொழுதும் கவனமாகவும் தந்திரமாகவுமே இருந்து வந்துள்ளது.

நடுத்தர வர்க்கம் அதிகம் வளர்ச்சி பெற்றிராத அம்பாறை போன்ற பகுதிகளைக் கையாளும் போது அதிரடிப்படையினர் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக எவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து வந்துள்ளார்கள் என்பதை விளங்குவதற்கு காஞ்சிரங்குடாச் சம்பவம் ஒன்றே போதும். மாறாக பருத்தித்துறையில் சனங்கள் ஆர்பாட்டம் செய்த போது நிலைமை முற்றிலும் வித்தியாசமாகக் கையாளப்பட்டது.

இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தைக் கையாள்வதற்கு அவர்களிடம் தனியான விசேசமான ஒரு நிகழ்ச்சித் திட்டம் உண்டு.

ஆனால் இது எதற்காகவும் கடந்த ஆண்டுகால முற்றுகைக்குள் யாழ்ப்பாணம் கொடுத்த விலையை குறைத்து மதிப்பிட வேண்டும் என்றில்லை. யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாணத்து நோக்குநிலையிலிருந்து அணுகக் கூடாது என்றுமில்லை.

இதில் நாம் விழிப்பாயிருக்க வேண்டிய ஒரு விசயம் எதுவென்றால்- யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாணத்து நோக்கு நிலையிலிருந்து அணுகுவது என்பது சர்ச்சைக்குரிய யாழ்ப்பாண மனோபாவத்தை பாதுகாப்பதாகவோ வீங்கச் செய்வதாகவோ அமைந்து விடக் கூடாது என்பதே.

அதோடு - ஈழப்போரின் களயதார்த்தத்தையும் கவனிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தைப் பற்றி மட்டுமல்ல திருகோணமலை, மட்டக்களப்பு என்று எல்லாத் தமிழ்ப்பகுதிகளையும் பற்றி முடிவெடுக்கும் அதிகார மையம் வன்னியில் தான் உண்டு. தமிழரின் தலைநகரம் தற்சமயம் வன்னியில் தான் உண்டு.

இது காரணமாகவே மானுடத்தின் தமிழ்க்கூடலை ஏன் வன்னியில் வைத்திருக்கக் கூடாது என்று கேட்பவர்களும் உண்டு.

ஆனால் எது எப்படியானாலும் படித்த நடுத்தர வர்க்கத்தை அதிகமுடைய யாழ்ப்பாணம் தான் தமிழர்களின் அபிப்பிராயத்தை பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

ஈழப்போரின் நிலைமாறும் வலுச் சமநிலைக்குட் சிக்கி இரண்டாகக் கிழிபட அது தயாரில்லை.

நிச்சயமற்ற சமாதானத்தின் முதற்பலிகளாய் ஆகிவிடாதிருக்க ஆகக் கூடிய பட்ச முன்னெச்சரிக்கைகளையும் சமயோசிதமும் வேண்டியிருப்பதாகப் படித்த யாழ்ப்பாணத்தவர்கள் நம்புகிறார்கள்.

தாம் யாருடைய பக்கம் என்பதை ஒரு ரகசியமாக வைத்திருக்கவேண்டியது ஒரு களயதார்த்தம் அவர்களுடையது.

ஆனால் தருணம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் அதை தெளிவாகவும், ஆவேசமாகவும் வெளிக்காட்டி இருக்கிறார்கள்.

முதலாவதாக பொங்கு தமிழ் நிகழ்வின் போது, இரண்டாவதாக கடைசியாக நடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிந்தெடுத்தபோது, மூன்றாவதாக மானுடத்தின் தமிழ்க் கூடலின் போது.

அவர்கள் மாறவில்லை. யாழ்ப்பாணம் மாறவேயில்லை. அதை யாரும் அவ்வளவு சுலபமாக மாற்றிவிடமுடியாது. அப்படி மாற்றி விட்டதாகப் பெருமைப்பட்ட எல்லாரையுமே அது இறுதியாகத் தோற்கடித் திருக்கிறது.

இப்பொழுது எல்லாவற்றையும் ஒரு சாட்சிபோல விலகி நின்று பார்க்கும் ஒரு நிலை.

சமாதானத்தைப் பற்றிய சந்தேகங்கள் உள்ளவரை இந்நிலையே தொடரும்.

இதை இன்னொரு விதமாகச் சொன்னால் - தனக்குரிய ஒரு காலத்துக்காக யாழ்ப்பாணம் காத்திருக்கிறது எனலாம்.

✠

பயிற்சியின் போது கிபிர் வீழ்ந்து நொருங்கியது [செய்தி]




அழுகிய புண்ணையும் ஆற்றிவிட முடியும், ஆனால் கெட்டபெயர் மனிதனைக் கொல்லாது விடுவதில்லை. - ஸ்பெயின்

# நறுக்கென...



## ஜே.வி.பி. என்றால் என்ன?

'ஜே.வி.பி என்றால் என்ன? '-ஏன் இந்தக் கேள்வியை கேட்கிறீர்கள் என்கிறீர்களா? - நான் கேட்கவில்லை. கேட்டவர் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தான். யாழ்செயலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்து ரொய்ட்டர் செய்தியாளர் அவரிடம் ஜே.வி.பியின் செயற்பாடுகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டபோது, அவர் அதற்குப் பதிலாகத்திருப்பிக் கேட்டகேள்வியே இது.

அவரின் இக்கேள்வி பத்திரிகையாளர்களிடையே பெரும் சிரிப்பொலியை ஏற்படுத்தியதாம்.ஜே.வி.பி என்றால் என்ன என்பது அவருக்கு தெரியாத ஒன்றல்ல. ஆனாலும் ஜோன்வெஸ்பேர்க் அவருக்கு ஜே.வி.பி. என்றால் என்ன என்று விளக்கமளித்தாராம். இது மிகவும் நகைச்சுவையான விடயம் தான்- ஜே.வி.பிக்கு இப்போதைய வரைவிலக்கணம் இதுதான்

-ரணில் ஆட்சியின் எதிரி.

-நோர்வேயின் எதிரி.

-விடுதலைப் புலிகளின் எதிரி.

-ஒட்டுமொத்தமாக சமாதனத்தின் எதிரி.

ஜே.வி.பிக்கு,இதனை விட விளக்கம் கூறி அதன் சிறப்பினை விளித்து விடமுடியாது. விதார் ஹெல்கிசனுக்கு எப்படி விளக்கம் தரப்பட்டதோ தெரியாது. ஆனால் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இன்னொருநாட்டின் பிரதி வெளியுறவு அமைச்சர், சிறிலங்காவில், தன்னை ஒரு பெரிய புரட்சிகர சக்தியாக வெளிபடுத்த முயன்று பகீரதப்பிரயத்தனம் எடுத்து தோல்விகண்டு, தற்போது பொ.ஐ.முன்னணியின் எடுபிடியாக பேரினவாதம் பேசிக் கொண்டு அலையும் ஒரு கட்சியை ஒரு பொருட்டாக கருதாமல் - அப்படியென்றால் என்ன என்று கேட்டதன் மூலம் ஜே.வி.பியை அலட்சியப்படுத்தியமையானது ஜே.வி.பிக்கு விழுந்த பலத்த அடியாகும்.

-ஆர்ப்பாட்டம் செய்வதையும்,பேரணிநடத்துவதையும், கொடும்பாவி எரிப்பதையும் மட்டுமே கொள்கையாகக் கொண்டு இயங்கும் ஜே.வி.பியின்கடந்தகால வரலாறு நோர்வே அமைச்சருக்கு தெரியாமல் இருந்தாலும், தற்போதைய வரலாறு தெரியாமலிருக்கமுடியாது ஆக சுத்தமற்ற அரசியல் பண்ணும் ஜே.வி.பியை அலட்சியப்படுத்துவதற்கு ஹெல்கிசனின் அணுகுமுறைதான் சிறப்பானது.

✻ ✻

## புலிகள் பற்றிய சிறுத்தை...



தமிழன் தமிழையும் தமிழ் மண்ணையும் காப்பாற்ற வேண்டுமானால் தமிழனின் கையில் ஆட்சிவர வேண்டும். எவன் ஆட்சியதிகாரங்களைக் கொண்டிருக்கிறானோ அவனது மொழிதான் வலிமையுடையதாக இருக்கும். இவ்வாறு கூறியிருப்பவர் தமிழகத்தின் விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தான்.

தமிழக அரசியல் அனுபவம் தான் அவரை இவ்வாறு பேசவைத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. உலகத் தமிழினத்தின் தலைவர் என்று கூறிக் கொள்வதில் பெருமையடையும் கலைஞர் கருணாநிதி,தமிழ்த்தாய் இதய தெய்வம், புரட்சித் தலைவி என்றெல்லாம்அடை மொழி கூறி அழைக்கப்படும்தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகிய இருவரையும் நன்கு அறிந்தவர் திருமாவளவன். அவர்கள் மாறிமாறித்தமிழகத்தை ஆண்ட காலங்களில் தமிழகமும், தமிழும் தமிழனும் எப்படியிருந்தார்கள் என்பதும் அவருக்குத் தெரியும்.

அரசியல் மேடைகளில் மட்டும்அடுக்கு மொழியில், அலங்காரமாக அரங்கேறும்தமிழ், ஆட்சியில் எவ்வாறு அலங்கோலமும் அவலமும் அடைந்தது-அடைந்து வருகின்றது என்பதும் அவருக்கு நன்கு தெரியும். ஒடுக்கப்படும் மக்களின் குரலாக ஒலிக்கும் திருமாவளவனின் குரல் யாழ்ப்பாணத்தில் உலகத்தமிழர்களுக்கான குரலாக ஒலித்துள்ளதை குறிப்பிட்டே ஆக வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்கு கொள்கைகளைப் பரியிடும் இலச்சியங்ளைவிட்டும் இழிவான அரசியல் வாழ்வை நடத்தும் சந்தர்ப்பவாதத்தமிழகத் தலைமைகளுக்கு ஒரு பலத்த அடியாகவே திருமாவளவனின் யாழ்ப்பாண பேச்சு அமைந்திருக்கிறது.

'நாடு எவ்வாறாயினும் போகட்டும் பதவியும் பவிசும் எம்முடன் இருந்தால் போதும் என எண்ணும் தலைவர்கள்-தமிழர்கள்-தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள் அவர்கள் தமிழை காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை' -என்று அவர் கூறுவது அவரது ஆத்மாவின் ஆதங்கமாகவே ஒலித்துள்ளது எனலாம்.

அதனால் தான் அவர் துணிச்சலாக -நேர்மையாக 'தமிழன் வாழவேண்டும் என்றால்,தமிழ்வாழ வேண்டு மென்றால் தமிழனுக்கு என்று ஒரு நாடு அமையவேண்டும். அதனை அமைக்க விடுதலைப் புலிகளால்தான் முடியும்' என்று கூறியுள்ளார். ஆமாம்.... பொடோ சட்டத்தைப்பற்றி கவலையோ அச்சமோ இன்றி அவர் தன்கருத்தை வெளியிட்டுள்ளார்.

'சிறுத்தை.... சிறுத்தைதான்....'!

✻ ✻



## சிகலஉறுமயவின் கடைசிப் புகலிடம்

தனித்து இயங்கத் திராணியற்ற சிங்களப் பேரினவாதக் கட்சிகளில் சிகல உறுமயவும் ஒன்றென்பது நன்கு தெரிந்த விடயம். மிகவும் பரபரப்புடன் சிங்கள-பௌத்த கலாசாரத்தின் மீட்பர்கள் தாமே தான் எனப் பிரகடனம் செய்து கொண்டு சிலவருடங்களின் முன்னர் அரசியல் அரங்கில் தலைநீட்டிய சிகலஉறுமய முதல் சந்தித்த தேர்தலில் ஒரேயொரு பாராளுமன்ற இருக்கையை மட்டும் பெற்றுக் கொண்டது. அந்த ஒரு இருக்கையையும் ஒரு குறுகியகாலப்பகுதிக்குள் மூவர் மாறிமாறிப்பகிர்ந்து கொண்டமையே அந்தக்கட்சியின் பதவிப்பற்றுமிக்க பலவீனமான தலைமைக்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

அதன் ஆரம்ப காலத் தலைவர் கிறஸ்தவ சிங்களவர் என்பதற்காக கட்சியில் இருந்து அகற்றப்பட்டார். அவர் பின்னர் புதியதோர் கட்சியை ஆரம்பித்து விட்டு அவ்வப்போது அறிக்கைகளை மட்டும் விட்டுதனக்கிருப்பை நினைவுப்படுத்திக் கொண்டுவருகின்றார்.

அடுத்து வந்த தலைவர்களில் சம்பிக்கரணவக்க கொஞ்சக்காலம் மிகவும் பரபரப்பாக பேசியும்,அறிக்கைகள் விடுத்தும் தன்னை ஒரு பெரும்சிங்கள மக்களின் பௌத்த மதத்தின் ரட்சகராகக் காட்டமுனைந்தார். கடந்த பொதுத்தேர்தலுடன் அவரின் விலாசமும் தேடப்பட வேண்டிய ஒன்றாகிவிட்டது. சிகலஉறுமய இருந்த ஒரு ஆசனத்தையும் அவரது தலைமையின் கீழ் இழந்ததுதான் அவர் காலக்கட்டத்தில் நடைபெற்றது.

அடுத்தவர் திலக் கருணாரத்ன என்ற கண்ணாடியணிந்த தாடிக்கார அரசியல்வாதி. அவரின் தற்போதைய தரிப்பிடம் தான் சிகலஉறுமய. விடுதலைப் புலிகளையும், சமாதானத்தையும் எதிர்ப்பதை விடவும் வேறு விதமான அரசியல் எதுவும் தற்போதைக்கு இவருக்குத் தெரியாது.

எவ்வளவு தான் கத்தியும், அறிக்கைகள் விட்டும் சிங்கள மக்கள் மத்தியில் இவர்களது அரசியல் எடுபடுவதாக இல்லை. ஆகவே... மக்களால் நிராகரிக்கப்பட்ட மற்றொரு கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இப்போது மெல்ல ஒட்டப்பாக்கிறார். அக்கட்சிக்குள் அழையாவிருந்தாளியாக நுழைய முயலும் இவர் சிங்கள பௌத்த மக்களின் இழந்த உரிமைகளை பெற்றுக்கொடுக்க சி.சு.கட்சி முயன்றால் அடுத்த தேர்தலில் சிகலஉறுமய அக்கட்சியை ஆதரிக்கும் என்றுள்ளார்.

கடன்காரன் பிச்சைக்காரனுக்கு உதவப்போன கதை தான். இன்றைய நிலையில் தேர்தல் ஒன்று வரும் சாத்தியம் உருவாகுமெனில் சி.சு.கட்சியை வீழ்த்த ஐ.தே.முன்னணி சிரமப்படவேண்டியதில்லை. ஜே.விபியும்,சிகலஉறுமயவும் அதனுடன் கூட்டுச் சேர்ந்தாலே போதும்... சந்திரிகா என்ன செய்யப் போகிறார்.?

✻ ✻

## பத்திரனவின் ஞானம்



கடந்த பொ.ஐ. முன்னனி ஆட்சியில் அரசின் பிரதான பேச்சாளராக இருந்தவர் 'ரிச்சர்ட் பத்திரன' அந்த ஆட்சியில் உயர்கல்வி அமைச்சராகவும் சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்கவின் விசுவாசியாகவும் இருந்தவரும் இவர்தான். இப்போது காலம் மாறிவிட்டது. பதவியில் இருக்கும்போதும் ஆட்சியில் இருக்கும்போதும், அதிகாரத்தில் இருக்கும்போதும் தமது சுய கட்சிகுறித்தோ, அதன் கூட்டணிகுறித்தோ, அதன் நிர்வாகம் குறித்தோ எவரும் யோசிப்பதும் இல்லை, கருத்துக்கூறுவதும் இல்லை. அப்படி எவரும் கூறினாலும் அவரைக் கிழி-கிழியென்று கிழித்துவிடுவார்கள். தங்கள் கட்சியின் புனிதம் குறித்து பெருமையுடன் புழுகியும் கொள்வார்கள் ரிச்சர்ட்பத்திரனவும் இதற்கு விதிவிலக்கானவரல்ல... இப்போதும் அமைச்சர் பதவியிலும் அவரில்லை ஆளும்கட்சியிலும் அவரில்லை. அவரதுகட்சி எதிர்க்கட்சியாகிவிட்டது. மீண்டும் தேர்தல் வந்தாலும் அவரது கட்சி ஆட்சியைப்பிடிக்கும் என்றநம்பிக்கையுமில்லை... எனவே கருத்துக்கள் மாறத்தொடங்கிவிட்டது.

'மக்களின் தேவைகளைநிறைவேற்றாத பொதுசன ஐக்கியமுன்னணியில் தொடர்ந்தும் இருப்பது அர்த்தமற்றது' என்று தத்துவம் பேசத் தொடங்கிவிட்டார். மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்காத கட்சியை பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று கூறி பொது சன ஐக்கிய முன்னணியை கடுமையாகவும் விமர்சிக்கவும் தொடங்கிவிட்டார்.

சனாதிபதியின் அதிகாரத்தைப்பறிக்கும் அவலம் மட்டுப்படுத்தும் சட்டமூலத்தை ஆதரிக்கும் தனது விருப்பத்தை பகிரங்கப்படுத்தும் துணிச்சலும் அவருக்குவந்துவிட்டது. போன அரசியல் போர் குறித்து நியாயப்படுத்திப் பேசியவர். ஆட்சிமாறியதும் சமாதானத்தின் அவசியம் குறித்து ஞானோபதேசம் செய்யத் தொடங்கியும் விட்டார். ஆட்சியில் உள்ளவருக்கு அனுசரணையாக இருந்து ஆதாயங்களை அடையும் சனநாயக தந்திரத்தை சரியாகப்புரிந்து கொண்டார் ரிச்சட்பத்திரன. ஆனால் சந்திரிகாவோ பத்திரனவை துரோகி என்கிறார். ஏமாற்றுப்பேர்வழி சுயநலமி, என்றெல்லாம் வர்ணிக்கிறார்.அவரது அக்மன தொகுதிஅமைப்பாளர் பதவியையும் பறித்துமுள்ளார்.

பத்திரனவோ இதற்குப் பதிலளிக்கையில், அவர்கள் விலக்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னம் தானே பதவி விலகள் கடிதம் கொடுத்துவிட்டதாகவும் மக்களிடம் செல்வாக்கிழந்து விட்ட கட்சிக்கு பணியாற்றுவதில் என்ன பயன் என்று கூறியுள்ளார். பத்திரனகட்சி மாறப்போகிறார்.... இல்லை...இல்லை தாவப்போகிறார்.அவ்வளவுதான்..

அதற்கு முன்னோடியாக எல்லாவண்டவாளங்களும் தண்டவாளத்தில் ஏறத்தொடங்கிவிட்டன..

✻ ✻

## மதவடி மயிலர்



செய்தி- ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசமைக்க சனாதிபதி சந்திரிகா முன் வரவேண்டும் என்றார் பௌசி.

மயிலர்- தேசம் பற்றிய அக்கறையில்லாத - தனது நிறைவேற்று அதிகாரப்பதவி குறித்த அக்கறை மட்டுமேயுடைய சந்திரிகாவை தேசிய அரசமைக்க ரணிலுடன் சேரவேண்டுமென்றார் பௌசி... அப்படி ஒரு தேசிய அரசு வந்தால் தான்மீண்டும் மந்திரியாகலாம் என அவர் எண்ணுகிறார் போலும்....... அப்படி ஒரு அரசு அமையுமானால் அது தேசிய அரசாக இருக்காது சுயநல அரசாகத்தான் இருக்கும் பாருங்கோ.... அது சரி பௌசி இந்த யோசனையை ஜே.வி.பி.யினர் ஆதரிப்பினமோ..? அநுரா இதுக்கு ஒத்துக் கொள்வாரோ..? அத்தகைய அரசில் மகிந்த ராஜபக்ஷவின் நிலைமை என்ன? டக்ளஸ் ஆட்களின் கதி என்ன இவ்வளவு பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்குள் அடுத்த தேர்தல் இயல்பாகவே வந்திடும் பாருங்கோ.

செய்தி-வங்கிப்பெட்டகங்களில் வெளிநாட்டு நண்பர்களின் பணமும் இருந்ததாக அநுருத்த ரத்வத்தையின் மனைவி ரமணி ரத்வத்தை கூறுகிறார்.

மயிலர்- கொள்ளைப்பணத்திலை பிள்ளைப்பங்கு காட்டுறா அம்மா... வெளிநாட்டு நண்பர்களுக்கு தங்கடை பணத்தை பாதுகாப்பாக வைக்க அங்கங்கை வங்கியும் கிடையாது.. பெட்டகமும் கிடையாது.. சிறிலங்காவிலை கொண்டு வந்து அதுவும் ரத்வத்த குடும்பத்திடம் பாதுகாப்பாக வைத்திருக்க குடுத்தினமாம்.. எங்கட காதில பூ சுத்தேல்ல.. முழு மாலையையே சுத்தினம் பாருங்கோ! என்ன கேட்கிறீங்க.. பிரதிபாதுகாப்பு அமைச்சரிட்டை கொடுத்தா பாதுகாப்பாக இருக்கும் என அவை நினைத்திருக்கலாம் எண்டே சொல்லுறீங்க.. அதுசரி அந்தப்பணத்தை மகன்ரை பேரிலையும் மனிசன்ரை பேரிலையுமே வைப்புச் செய்யவேண்டும்....?

செய்தி- இராணுவ ஆட்சேர்ப்புக்கு இம்முறை புதிய சலுகைகள்: லான்ஸ் கோப்ரலாக ஒரு வருடத்திற்குள் பதவியுயர்வு..

மயிலர்- இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு என்ன விறுத்தத்திலை நடக்குது எண்டு தெரியுதுதானே.. போன தடவை ஐயாயிரம் பேரைச் சேர்க்க வெளிக்கிட்டு ஐநூறும் தேறேல்லை.. ஏற்கனவே தப்பியோடிய 4500 பேரின் கதையைக் கேட்டவன் எவனும் சேர வருவானோ பாருங்கோ.. ஒரு வருடத்திலை லெப்ரினன்ட் கேணலாக அதுவும் இராணுவத்தை விட்டிட்டு அரசியல் பண்ணிக்கொண்டிருந்த ரத்வத்தையை ஜெனரல் பதவிக்கு உயர்த்திய நாடெல்லே சிறிலங்கா... லான்ஸ் கோப்ரலாக பதவியுயர்த்துவது பெரியவேலையே... அதுசரி பதவியுயர்த்தினால் மட்டும் போதுமே.. அதிலையும் பாதுகாப்பு இருக்கவேணுமே... எனியும் தென்னிலங்கை சனத்திற்றை இந்தப் பருப்பு அதிகளவிற்கு அவியாது பாருங்கோ.....


செய்தி- விதார் கெல்கேசனைச் சந்திக்க சனாதிபதி சந்திரிகா மறுப்பு.

மயிலர்-தேசத்திலையும்,அதன் மக்களின் நன்மையிலும் சமாதானத்திலும் அம்மையாருக்கு எந்தளவு அக்கறையும் பொறுப்புமிருக்கெண்டு விளங்குதெல்லே.... இதைப்புரிந்து கொள்ள வேண்டியது இப்ப நோர்வேயும், சர்வதேச சமூகமும் தான் உதென்ன பெரிய விஷயம்... இன்னும் அடுத்தடுத்த மாதங்களிலை என்ன கூத்தெல்லாம் ஆடப்போரா பாருங்கோ... நெஞ்சிலை நஞ்சிருக்கிறவை இப்படித் தான் நடப்பினம்.. சமானத்திற்காக யுத்தம் செய்யிறன் என்று அம்மணி முன்பு புலம்பியதை நம்பியது எவ்வளவு தவறெண்டு உலகத்துக்கு இனியாவது விளங்கட்டும். ஆனால் சந்திரிகாவின் இந்தச் செயலுக்கு கைதட்டிப்பாராட்டவும் ஒரு கும்பல் இருக்கத்தான் செய்யுது... ஜே.வி.பியைத்தான் சொல்லுறன்.... வீடெரிக்கின்ற ராணிக்கு நெருப்பெடுத்துக் குடுக்கிற மந்திரிகள்........

குற்றவாளியைத் தண்டியாது விடுவது குற்றமற்ற நிரபராதிக்குச் செய்யும் கொடுமையாகும். -சைரஸ்

**அண்மையில்** ஐரோப்பிய தமிழ்ச் சிறுவர்கள் பங்கேற்கும் விளையாட்டு நிகழ்வுக்கான பெயர்ப்பட்டியலை வாசிக்க நேரிட்டது. தலைசுற்றாத குறைதான். வாசிப்பதற்கும் கடினமானது. கேட்பதற்கும் கடினமானது. புரிவதற்கும் கடினமான பலநூறு பெயர்களினால் அப்பட்டியல் நிரம்பிக் காணப்பட்டது. முகமிழந்த அல்லது ஆத்மா வெட்டப்பட்டுக் குற்றுயிராய்த் தமிழ்ச் சிறுவர்களின் முகங்கள் அப்பெயர்களில் தெரிந்தன. அப்பெயர்களில் எந்தச் செழுமையும் காணப்படவில்லை. மதிப்பை ஏற்படுத்தும் எந்தத் தொனியும் அவற்றில் காணப்படவில்லை. வெறுமனே கூப்பிட ஒரு பெயர் வேண்டும் என்கின்ற வேண்டா வெறுப்புடன் வைக்கப்பட்ட பெயர்களா இவை என்கின்ற சந்தேகத்தை அது தோற்றுவித்தது.

ஏன் எமது தமிழ்க் குடும்பங்கள் இத்தகைய மோசமான பெயர்சூட்டலில் ஈடுபடுகின்றனர்?. எங்கிருந்து இத்தகைய பெயர்கள் அவர்கட்குக் கிட்டின?.



> ஐரோப்பியத் தமிழ்க் குழந்தைகளின் எதிர்காலம் என்பதை அரசியல்- பொருளாதார தூர நோக்கில் ஆராயும் போது அது இன்னமும் மங்கலாகவே தெரிகின்றது. கலந்து கரைத்துவிடும் மேற்குலகக் கருத்தியலின் மோசமான பிடியில் அது அகப்பட்டுள்ளது.

# முகமிழந்து குற்றுயிராகும் தமிழ்ப்பெயர்கள்...

-கிருஷ்ணா-

பெயர்கள் நல்ல ஆளுமையான- அடையாளம் உள்ள பெயர்களாக இருக்க வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்ளும் திறமை புகலிடத்தமிழ்ப் பெற்றோர்களுக்குக் கிடையாது என்கின்றார் தமிழ்ச்சோலைப் பள்ளியில் மொழிகற்பிக்கும் ஆசிரியை ஒருவர். ஒரு குழந்தையின் ஆளுமைக்கு நல்ல பெயர்கள் கண்ணுக்குப் புலப்படாத பலத்தைத் தருகின்றது என்பது அவரது வாதம். ஏனோ தானோ எனச் சூட்டப்படும் பெயர்களின் கடுமையும், ஆழமின்மையும், அடையாளமின்மையும் பெயர்களை வேடிக்கைக்குரியதாய் மாற்றுகின்றது. இதனால் பிள்ளைகளின் ஆளுமை தாக்கப்படுவதாக அவர் கருதுகின்றார்.

பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் போது அப்பெயரில் தன் குழந்தையின் செழுமை தெரியவேண்டும் என விரும்புவதாகத் தெரியவில்லை என்கின்றார் அவரது சக ஆசிரியர் ஒருவர். பெயரில் புரியாத நவீனம், சோதிடம் போன்றன இருக்க வேண்டும் என்கின்ற உந்துதலே அறுபது வீதமான பெற்றோர்களுக்குரியதாக அவர் குற்றம் சாட்டுகின்றார். நவீனம் என்பதை தமிழ் இல்லாத அல்லது தமிழ் அடையாளம் இல்லாத பெயர்களுடன் அவர்கள் சேர்த்துப் பார்க்கின்றனர் எனவும் அவர் கூறுகின்றார். இவர்களின் தெரிவு ஐரோப்பிய பெயர்கள்- சமஷ்கிருதப் பெயர்கள் என்கின்ற பலதரப்பட்ட பெயர்களினை எடுத்து கூட்டிக் கழித்துப் போடும் எச்சங்களே என்கின்றார் அவர்.

தமிழ்க் குழந்தைகள் நல்ல அடையாளங்கள் உள்ள பெயர்களுடன் வாழும் போது தமிழ்ச் சமூகத்தின் வாழ்வு செழுமைபெறும் என்கின்ற வாதம் புகலிடத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. மோசமான பெயர் சூட்டல்கள் எதிர்கால ஐரோப்பியத் தமிழ்ச் சமூகத்தின் அழிவுக்கான அறிகுறி என்கின்ற கோபமும் அவர்களுக்குண்டு.

இந்த அடையாளம் பற்றிய கேள்வி விரிவானது.

தமிழ் அடையாளம் என்பதற்காக எனது குழந்தைக்கு எனது பாட்டனின் முற்காலப் பெயரைச் சூட்ட முடியாது என்கின்றார் ஓர் இளம் தந்தை. இவர் தன் மகனுக்குச் சூட்டிய பெயரில் கிறிஸ்தவ மதஇலக்கியங்களில் உள்ள ஒரு சிறுபெயரிற்கு 'ன்' சேர்க்கப்பட்டுள்ளது. எனக்கு கிறிஸ்தவப் பெயர் வேண்டும் எனவே இதனைத் தெரிவு செய்தேன். தமிழ் பற்றிய கேள்வி இங்கு எழவில்லை' என்பதே அவரது வாதம். தமிழ்க் கிறிஸ்தவர்கள் வாழ்வில் நல்ல பல தமிழ்ப்பெயர்கள் உள்ளன என அத்தந்தையின் வாதத்தை மறுக்கின்றார் ஒரு நல்ல பெயர் அபிமானி. தமிழ்ப்பெயர்கள் என்பதைக் குறுகிய தமிழ் வாதத்திற்குள் பார்க்காது விரிவான தமிழர் எதிர்காலம் என்பதில் பார்க்குமாறு அவர் கேட்கின்றார்.

உண்மையில் ஐரோப்பியத் தமிழ்க் குழந்தைகளின் எதிர்காலம் என்பதை அரசியல்- பொருளாதார தூர நோக்கில் ஆராயும் போது அது இன்னமும் மங்கலாகவே தெரிகின்றது. கலந்து கரைத்துவிடும் மேற்குலகக் கருத்தியலின் மோசமான பிடியில் அது அகப்பட்டுள்ளது. இவ்வாறு கரைந்து கலக்கும்போது மறுவிசையாக உருவாகும் வாழ்வில் சிதைவுகளும், புறக்கணிப்புக்களும் நிகழ்வது தவிர்க்க முடியாதது. கடுமையான போட்டிகளுக்குப் பின்னரே இவர்களிற்கான வாய்ப்புக்கள் கிட்டும். சமூகப் பண்பாட்டுத் தளத்தில் இது கரைந்து கலந்துவிடும் தன்மை ஏற்படுத்தும் தாக்கம் செழுமையானதாக உள்ளது என எந்த ஆய்வுகளும் நிரூபிக்கவில்லை.

இதற்கு எதிரான விசையாகத் தமிழ்ச் சமூகம் தனக்கென அடையாளங்களையும், சமூகப் பண்பாட்டுத் தளங்களையும் கொண்டதாய் ஐரோப்பாவில் நிலைகொண்டால் நல்ல அத்திவாரத்தில் நிற்கும் நிம்மதியுடன் அது வளரும் என்கின்ற நிம்மதி அங்குண்டு. தமிழ்ச் சமூகத்திற்கு உலகளாவிய தன்மையுண்டு. இதனால் உலகளாவிய வாய்ப்புக்கள் உண்டு. தமிழீழம் உருவாகும் போது இந்த உலகளாவிய தன்மைக்கான பின்பலமும் உருவாகின்றது. இதனைக் கூர்ந்து பார்த்தால் திட்டமிட்டுப் பணியாற்றினால் நிலவும் மங்கலை நீக்கலாம் என்கின்ற கருத்தோட்டம் பல தரப்புகளிலும் உண்டு. ஐரோப்பா - கனடா - அவுஸ்திரேலியக் கண்டங்களில் தற்போது இயங்கும் தமிழ்ப் பள்ளிகள் ஒரு தளத்தில் இதனை அணுகுகின்ற போதும் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும் தன் வாழ்வியல் முறைகளின் ஊடாக இதனை பலப்படுத்தலாம்.

இவ்வாறான வாழ்வியல் முறைகளில் நல்ல அடையாளங்களின் செழுமையுள்ள தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதும் அடங்குகின்றது. பெயர்களில் அடையாளங்களை விதைத்து வைக்கும் போது அது ஒரு வித உந்துதலைத் தரும் என்கின்ற பார்வை சமூக அபிமானிகளுக்குண்டு.

தமிழ்ப் பெயர்களில் காணப்படும் சிதைவுகளுக்குக் காரணம் என்ன? புகலிட வாழ்வில் நிலவும் சோதிட எண்கணித நம்பிக்கைகளே முதலாவது என்கின்ற குற்றச்சாட்டாகவுள்ளது. பிறந்த நேரம், பெற்றோர்களின் லாபம் என்கின்ற சிக்கலான கணக்கின் அடிப்படையில் பெயர்களில் வரட்சியைச் சோதிடம் ஏற்படுத்திவிட்டது.

இயல்பாகப் பெயர்களைச் சூட்டுவதற்கு இச்சோதிடக் கணக்குவழக்கு இடையூறை ஏற்படுத்துகின்றது. இத்தனை எழுத்துகளுக்குள் குறித்த முன்னெழுத்துடன் இது இருக்க வேண்டும் என்கின்ற வரையறைகளுடன் சோதிடம் பெயர்ப்படுகொலைகளைச் செய்கின்றது என்கின்றார் நண்பர் ஒருவர்.

இரண்டாவதாக, பெயர்களில் மேற்குலகவாடை நிலவவேண்டும் என்பதற்காகவே வலிந்து புரியாத பெயர்கள் சூட்டப்படுகின்றன. மூன்றாவதாக, சினிமாவின் தாக்கம்.

பெயர்கள் நல்ல அடையாளங்கள் உள்ள பெயர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு பரப்புரை இயக்கமே இயங்க வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு தமிழபிமானிகளுக்குண்டு. தமிழ் மக்களின் பண்பாட்டு இயக்கத்தளத்தில் செயற்படும் தமிழர் கலைபண்பாட்டுக் கழகங்கள் இதனைக் கைகளில் எடுக்க வேண்டும் என்கின்றனர்.

பெற்றோர்கள் மத்தியில் பெயர் சூட்டலை ஒரு மதிப்புக்குரிய கடமையாக வலியுறுத்த ஊடகங்கள் பாடுபடலாம். ஊடகங்கள் இத்தகைய பெயர்களைக் கொண்ட பட்டியலை வெளியிடலாம். இத்தகைய பெயர்களினால் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் பலப்படுத்தப்படும் என்பதை வலியுறுத்தும் விவாதங்களை இவை நடாத்தலாம். விஞ்ஞானபூர்வமாகவும், பண்பாட்டுத் தளத்திலும் அடையாள அழிப்பைப் பெற்றோர்கள் செய்வதால் எவ்வாறு தமது சமூகத்தின் நாளைய வாழ்வைக் கேள்விக்குள்ளாக்குகின்றனர் என்பதை ஊடகங்கள் விரிவாக ஆராயலாம்.


இன அடையாளங்களுக்காகவே நசுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் வழித்தோன்றல்கள் தாங்களே தங்களை அழிக்கும் பொறிக்குள் வீழ்வதைச் சுட்டிக்காட்டி நிறுத்த வேண்டியது நமது கடன்!

● நன்றி – பாரிஸ் ஈழமுரசு

## படித்ததில் பிடித்தது

# எனது மரணக்குறிப்பு

> 'நாற்பதுகளில் தோன்றிய மலையாள இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்களில் தனது 'பால்யகால சகி' [இளம் பராயத்து தோழி] புதினம் மூலம் வித்தூன்றிய அமரர்- வைக்கம் முகம்மது பஷீர் முக்கியமானவர்' இவரது படைப்புக்கள் மலையாள இலக்கியத்தை உலகத் தரத்திற்கு இட்டுச்சென்றவை.
>
> எனது 'மரணக்குறிப்பு' என்ற இந்தக் கடிதம் அவரது ஆன்மாவின் குரலாக ஒலிக்கிறது.



அழகான இந்தப் பூமியில் எனக்கு அனுமதிக்கப்பட்ட சமயம் முடிந்து விட்டது. சமயமில்லை. அல்லாவின் கஜானாவில் தான் முடிவுற்ற சமயம் இருக்கிறது. ஒருபோதும் ஒருபோதும் தீராத சமயம்-முடிவின்மை-முடிவுற்றசமயம்.

இதுநாள் வரை தினமும் படுக்கையிலிருந்து காலையில் எழும் போது - காலையில் என்று உறுதியாக சொல்லி விட முடியாது தான்: நான் சொல்லிக் கொள்வேன். சலாம் சமய காலங்களின் முடிவின்மையிலிருந்து ஒருநாள் கூடத் தரப்பட்டிருக்கிறது. நன்றி!

நான் முன்பு ஹிந்தி துறவிகள், சூபிகள் ஆகியோருடன் கழித்த நாட்கள் நினைவுக்கு வருகின்றன. தேடல் கடவுள் நாமத்தை ஜபிக்கிறோம். இடைவிடாது தியானம் செய்கிறோம். தாடியும், முடியும் வளர்த்து கிட்டத்தட்ட முழு நிர்வாணமாக உட்கார்ந்திருக்கிறோம். பத்மாசனத்தில் யோகதண்டம் உண்டு. கடவுளே எல்லாம் நினைவிருக்கிறது. பிரபஞ்சங்களை எல்லாம் உள் மனதில் நிரப்பி தியானித்து கண்விழித்து, பூமியும், சூரிய சந்திர மண்டலங்களும், நட்சத்தரங்களும், பால் வழியும் பிரபஞ்சங்களும், பேரண்டங்களும் முழுக்க முழங்குமாறு மிகமெல்ல மனதுள் உச்சரிக்கிறோம். 'அஹம் பிரம்மாங்கி' சூபிகள் தியானம் விட்டெழும் போதும் அதனையே உச்சரிக்கிறார்கள். 'அனல் ஹக்'

அனர்ஹ நிமிஷம் என்ற என்னுடைய சிறிய புத்தகத்தில் 'அனல் ஹக்' உண்டு. ஒரு நாள் இப்படித்தான் 'நான் சாகப் போகிறேன்' என்று தோன்றிவிட்டது. நான் இல்லாமல் போகிறேன். அதாவது நானும், நீயும் என்ற யதார்த்தத்திலிருந்து நீ மட்டும் மிஞ்சப் போகிறாய். அதுதான் அபார நிமிடம். அனர்ஹ நிமிடம்.

மரணம் என்னைப் பயமுறுத்தவோ, பயமுறுத்தாமலிருக்கவோ செய்ய முடியவில்லை. மரணம் தவிர்க்க முடியாதல்லவா? வரும் போது அது வரட்டும்.

பிறந்தது முதல் பல தடவை மரணத்தைத் தொட்டு உரசி போயிருக்கிறேன். என் இடது காலில் கொடிய விஷமுள்ள பாம்பு சுற்றியிருக்கிறது. வலது காலில் பாதத்தின் மீது ஒரு கருநாகம் மிக மெல்ல வழுக்கி ஊர்ந்து சென்றிருக்கிறது. எங்கள் வீட்டிற்குள் பலமுறை நாக பாம்புகள் நுழைந்திருக்கிறது. இரவில் ஒருமுறை நான்கு விரல் தூரத்திற்கு அப்பால் நான் அதை மிதித்திருப்பேன். என்னவோ அப்படி ஆகவில்லை - அதுவே கடைசி.

நான் இறந்தாயிற்று இனி எவராவது என்னை ஞாபகம் வைத்திருக்க வேண்டுமா? என்னை யாரும் நினைக்க வேண்டியதில்லை என்று தான் தோன்றுகிறது. எதற்கு நினைக்க வேண்டும்? கோடானு கோடிஅளந்த கோடி மனிதர்கள் செத்துப் போயிருக்கிறார்கள். அவர்களை யாராவது நினைக்கிறார்களா? என்ன?

எனது புத்தகங்கள் அவையெல்லாம் எவ்வளவு நாள் நிற்கும்? புதிய உலகம் வரும். பழமை என்றும் புதுமையில் மறைய வேண்டியது ஒன்றுதான். என்னுடையது என்று சொல்ல என்ன இருக்கிறது? என்னுடையது என்று ஒரு துளி ஞானத்தை நான் உண்டு பண்ணியிருக்கிறேனா? எழுத்துக்கள், வார்த்தைகள், உணர்வுகள் எல்லாம் கோடிகோடி மனிதர்கள் உபயோகித்து வந்தவையல்லவா?

முழுநிலவும் அளந்த கோடி நட்சத்திரங்களும் தெளிந்த அச்சமூட்டும் அழகிய அற்புத இரவில் தொடுவானத்துக்குக் கீழே நான் தன்னந்தனியாக பலமுறை நின்றதுண்டு. ஒன்றும் உள்வாங்க முடியாமல் பயந்து அழுதபடி நான் திரும்பி ஓடி வந்ததுண்டு. பாலைவனத்தை நான் முதலில் சந்தித்தபோது சாக வேண்டியது தவறிவிட்டது.

அது ஆஜ்மீருக்கு அருகே நடந்தது. நான் கிளம்பினேன். பாலைவனத்திற்குள் ஒரு மூலைவழியாகப் பயணம். முன்பு அடையாளக் கற்கள் போடப்பட்டிருந்தன வழிதவறுபவர்களுக்காக. காலத்தின் போக்கில் அவை தவறியும் மணலில் புதைந்து போயின. எனக்கு வழி தவறி விட்டது. கடும் வெப்பம், நல்ல தாகம், வலது பக்கம் திரும்பியிருக்க வேண்டும். இடது பக்கம் திரும்பிவிட்டேன். முடிவேயற்ற பாலைவனம். எரிக்கிறது அது. தலைக்கு அருகே மேலே பயங்கர வடிவம் கொண்ட சூரியன். திசையற்று நடந்தேன். கால்கள் அழுந்திப் புதைகின்றன. ஆனால் குளிர் அமுக்கின்றதாக எனக்குத் தோன்றியது. தாகம் தாங்க முடியவில்லை. நான் தளர்ந்து விழுந்தேன். நீளமான ஒரு கரிக்கட்டையாக விழுந்தேன். என்னுள்ளே சிவப்புப் புள்ளியாக ஒரு ஒளி. அல்லா அதுஎன்ன?

பின்பு அதுவும் மறைந்தது. நினைவு தவறிவிட்டது. அங்கு வெந்து சிவந்து எத்தனை நேரம் கிடந்தேன் - தினங்களா, மணிகளா தெரியாது.

அங்கேயே செத்துப் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

யோசிக்கும் போது எல்லாமே வேடிக்கையாக இருக்கிறது. இவ்லோக வாழ்க்கை ஒரு தமாஷ், பகவானின் லீலாவிலாசம்.

ஒரு முறை மலையாள எழுத்தாளர் U.K.N. மரணத்தைப் பற்றி என் கருத்தைக் கேட்டார். நான் சொன்னேன்.

He puts off till the last moment கடைசி நிமிடம் வரை பேஜார் இல்லை.

'வைக்கம் முகம்மது பஷீர் இறந்து விட்டார்.' செய்தி வருகிறது. எதற்காக இறந்தார். ஏதாவது ஒரு காரணம் வேண்டும். அவ்வளவு தான். இதோ நான் இறந்து விட்டிருக்கிறேன். போதுமான காரணங்கள் உண்டா என்பதை நீங்களே யோசித்துத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். நான் சொன்னேனே -

'கைவசம் சமயம் கொஞ்சம் கூட இல்லை'

எல்லாருக்கும் சலாம்!

என் மங்குஸ்தீன் மரத்திற்கும் சர்வமான உயிர்களுக்கும் சலாம்! ஏதாவது பிழை செய்திருந்தால் பிரபஞ்ச பேரிருப்பே என்னை மன்னித்துவிடு.

எல்லாருக்கும் மங்களம். சுபம்.

வைக்கம் முகம்மது பஷீர்



☞ தீர்மானம் இல்லாவிடில் ஒருவன் தன் நெற்றி வியர்வையில் தான் தன் வாழ்வை அமைக்க வேண்டும். -சீனா



# பொதுவான தேடல் உணர்வு மாணவரிடையே வளர வேண்டும்

எமது மாணவ சமுதாயம் இன்றைய காலத்தில் என்றாலும் சரி இதற்கு முந்திய காலத்தில் என்றாலும் சரி முழுமையான வளர்ச்சியை தற்போதும் எட்டவில்லை அப்போதும் எட்டவில்லை. அதற்கு எம்மவர்கள் பல காரணங்களை 'கட்டடங்கள் கட்டுவது போல' அடுக்கிக் கொண்டே போவார்கள். அதிலும் குறிப்பாக போர்ச்சூழல், பொருளாதார சீரழிவு, இதற்குப்பின் தான் ஏனையவற்றைக் கூறுவார்கள். அது பழக்கப்பட்டுப்போன ஒன்று, மாணவ சமுதாயத்தில் ஒரு சிலர் இதற்குள் இருந்தும் 'முட்டையிலிருந்து மெதுவாக குஞ்சு வெளிவருவது' போல தங்களை இனங்காட்டிக் கொண்டிருக் கிறார்கள். எப்படி அவர்களால் முடிகின்றது?

ஒரு மாணவன், கற்றலில் பூரணம் அடைகின்றான் என்று சொல்லி விடக்கூடாது. அப்படி யார் புத்தகக் கற்றல் அதாவது, பாடசாலைக் கற்றலே தனது வாழ்க்கைக்கு முன்னேற்றம் எனக்கருதுகிறானோ, அவன் சிலபடி முன்னேற்றங்களைத் தான் அடைய முடியும். பாடசாலைக் கற்றலுடன் உங்களுக்குப் பொதுவான தேடல் என்பது இருக்கவேண்டும். அப்பொழுது தான் ஓரளவாவது உங்களால் தெளிவடைய முடியும். அறிவாளிகளின் முன் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

பாடசாலைக் கற்றல், தனியார் கற்றல் இவை இரண்டுக்கும் பாரிய வேறுபாடு உண்டு எனக் கூறமுடியாது. பாடசாலையில் ஒரு வகுப்பை எடுத்துக்கொண்டால் கல்வி திட்டமிடலுக்கு அமைய 30 மாணவர்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும், அங்கு அளவுக்கதிகமாகவே மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு இன்றைய ஆசிரியர் பற்றாக்குறை என்பது மேலோங்கி நிற்கின்றமையே முக்கிய காரணமாக அமைகின்றது. ஆனால், படித்த எம்மவர்கள் தகுதிக்கு ஏற்ற வேலையின்றி தேனீர்ச் சாலைகளிலும் வாகனத் திருத்தகங்களிலும், கடைகளிலும் வேலை பார்க்கின்றார்கள். அது மட்டுமா, தட்டச்சில் அமர்ந்தவர்களும், தையல்கடைகளில் புகுந்தவர்களும் தாம் சிறப்பான கல்வியைக் கொண்டிருந்தாலும் தகுந்த ஆசிரியர் பதவி கிடைக்காததால் வளர்ச்சியற்ற எதிர்காலத்தைதான் உருவாக்கி கொள்கிறார்கள்.

எமது மாணவர் சமுதாயத்தை உயர்த்த வேண்டுமாயின் நிச்சயமாக இவர்கள் இனங்காணப்பட்டு தகுந்த ஆசிரியர் பதவியைக் கொடுப்பதன் மூலமே மாணவர்களை வளர்த்தெடுக்க முடியும். அது அப்படி என்றால் தற்போது பணிபுரியும் ஆசிரியர்களில் எத்தனை பேர் தம் பணியை மனம் வைத்துச் செய்கின்றார்கள் என்பதில் சந்தேகம் எழத்தான் செய்யும். அதற்காக உண்மையாகவும், விசுவாசமாகவும் பல மாணவர்களது வளர்ச்சிக்காக உழைத்த, உழைக்கின்ற, உழைத்துக் கொண்டிருக்கின்ற ஆசான்கள் பிழையாக விளங்கிக்கொள்ளக்கூடாது. ஒரு சிலரால் தான் அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் நோக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அப்படிப் பிரித்து நோக்கினாலும் உண்மையாக பாடு படுகின்ற நீங்கள் உயர்ந்தவர்களே.

கற்பித்தலை மேற்கொள்கின்ற ஆசான்கள் ஒவ்வொரு மாணவனது தன்மையையும் அவனது நிலையையும் முதலில் புரிந்து கொள்ளுதல் அவசியம். அதாவது, 'நீங்கள் சிறந்த தோட்டக்காரன்' போன்று தான் செயற்படவேண்டும். அப்போதுதான், எந்த மாணவனுக்கோ அல்லது மாணவிக்கோ எப்படியான கற்றல் அவர்களது மூளைக்குள் புகும், புகுத்தலாம் எனத் தெரிந்து கொள்ளமுடியும். ஒரு வகுப்பை எடுத்துக்கொண்டால் பல விதமான மாணவர்கள் இருப்பார்கள். உங்களால் கற்பித்துக்கொடுக்கப்படும் போது தெரிந்திருப்பீர்கள் அல்லது கண்டுகொண்டிருப்பீர்கள். உடனே விளங்கிக்கொள்ளும் தன்மை கொண்டவர்கள் எத்தனை பேர்? இரண்டு மூன்று தடவையுடன் விளங்கிக்கொள்ளும் தன்மை கொண்டவர்கள் எத்தனை பேர்? பலதடவையின்பின் பற்றிக் கொள்பவர்கள் எத்தனை பேர்? என்பதெல்லாம் கற்பித்தல் அனுபவத்தால் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இப்படிப் பல தரப்பட்டவர்களுக்கு ஒரே முறையில் கற்பித்தலை ஒரு ஆசான் மேற்கொள்வாரானால் அம்மாணவர்களது சிறந்த எதிர்காலம் சேற்றுக்குள் புதைக்கப்படும் கிழங்கு போலாகி விடும்.

இதற்காக ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களையும் ஒன்றாக இணைத்துக்கொண்டு போகப் போனால் குறிப்பிட்ட கற்பித்தலை நிறைவு செய்ய முடியாது என்பர். அது பணி.மாணவர்களது தன்மையைப் புரிந்து கற்பித்தலை மேற்கொண்டீர்களானால், எத்தனையோ மாணவர்களின் வளர்ச்சியின் பின்னால் உங்களது பெயர் பொறிக்கப்புடும் மறக்காமல் என்றும் உச்சரிக்கப்படும்.

ஆசிரியர்கள், பணி என்ற சொல்லிலிருந்து விலகி வளர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் கருதி கற்பிக்கும் வேளை மாணவர்கள் சிலர் ஏனோ தானோ என்று கற்றுக் கொண்டிருப்பார்கள். இங்கு பெரிய தவறுகளைச் செய்பவர்கள் மாணவர்களே. நாம் ஆசிரியர்களை குற்றஞ்சாட்டுவது இவ்விடயத்தில் நன்றன்று. மாணவர்கள் முதலில் உங்களது மனதில் படிக்கவேண்டும், பட்டதாரியாக மாறவேண்டும். எம் பின்னான மாணவர் சமுதாயத்தை வளர்த்து எமது நாட்டை வளப்படுத்த வேண்டும் என்ற உணர்வைக் குறிக்கோளாகக் கொண்டு, கற்றல் மீதான பற்றை கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அப்படி இல்லாமல் விருப்பமின்றி அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, அதிபர், ஆசிரியர்கள் இவர்களுக்காக கற்பது கல்வி அல்ல. உங்களது எதிர்கால வளர்ச்சிக்காகவே என்பதை ஆழ்மனப்பதிவேட்டில் பொறித்து வைத்துக்கொள்ளவேண்டும்.



ஆசான்கள் வகுப்பில் கற்பிற்கும் போது, உங்களுக்கு தெளிவு கிடைக்காது விடின் உடனேயே ஆசானை அணுகி அதற்கான தெளிவை பெற்றுக் கொள்ளுதல் நன்று. நீங்கள் திரும்பத்திரும்ப ஆசிரியரைக் கேட்கலாம். பெரும்பாலான ஆசிரியர்கள் மறுக்கமாட்டார்கள் என நம்புகிறேன் நான் கண்ட உண்மைஇது ஆசிரியர் எங்களைப்பற்றி என்ன நினைப்பாரோ அல்லது எங்களை எப்படி எடை போட்டு விடுவாரோ என நினைக்காதீர்கள். 'அபிப்பிராயங்களை விடுத்து உண்மைத் தகவல்களை ஆராய வேண்டும்' என உளவியல் சொல்கிறது.

பரீட்சைக்கேற்றவாறு மாணவர்களாகிய நீங்கள் கற்றலை அமைத்துக்கொள்ளவேண்டும். பரீட்சைக்கு ஒருமாதம் இருக்கின்றதென வைத்துக்கொண்டால் அந்த ஒரு மாதத்திற்கே நேர அட்டவணையை அமைத்துச் சரியான முறையில் பாடங்களைக் கற்க முடியும். அப்படிக் கற்று பரீட்சையை வென்றவர்களுமுண்டு. 'இன்னும் ஒரு மாதம் இருக்கு' என நாளைக்கு, நாளைக்கு என நாளைக்கழித்தால் நிச்சயமாக பரீட்சையின் காலடியில் மிதிபட வேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் எப்படியான சூழலில் கற்க வேண்டுமென்பதை, அதாவது, எப்போது படித்தால் அதிகளவாக விளங்கிக்கொள்ளமுடியும் என்பதை நீங்களே தான் தீர்மானத்துக் கற்க வேண்டும். சிலருக்கு காலை 5.00 மணிக்கு எழுந்து படிப்பது நன்றாக விளங்கும் சிலருக்கு இரவு படிப்பது நன்றாக விளங்கும் சிலருக்கு 6.00 மணியின் பின் படிப்பது நன்றாக விளங்கும். கற்றலுக்கேற்றவாறு எந்தவொரு மாணவனும் நகர்வதென்பது கடினம். கற்றலை உங்களுக்கேற்றவாறு அமைத்துக்கொள்வதன் மூலம் தான் அதனுடன் இணைந்து செல்லமுடியும்.

நீங்கள், ஓர் ஆசிரியர் கற்பித்ததோடு நின்று விடக்கூடாது. அது தொடர்பான மேலதிக விபரங்களை அவ்வாசிரியர் ஊடாகவோ அல்லது பிற புத்தகங்கள் ஊடாகவோ பூரண விளக்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆசிரியர் குறிப்பிட்ட நேரத்திற்குள் கற்பித்தலை முடித்துவிட்டுச் சென்றுவிடுவார். அவ்வாசிரியரின் ஓய்வான நேரங்களை கேட்டு எனக்கு விளங்காத பகுதியை பூரணப்படுத்தி விட முடியுமா? எனக் கதைத்து உங்களைத் தெளிவாக்கிக் கொள்ள முயலுங்கள். ஏன்? நீங்கள் நீண்ட தூரம் போகின்றீர்கள்? சக மாணவ நண்பனிடமே விளங்காதவற்றை, வரட்டுக் கௌரவத்தைத் தூர வைத்துவிட்டு கேட்டு விளங்கிக் கொள்ளுங்கள்.

'பருவகாலப் பிரச்சினைகளுக்கு தயவு செய்து இடங்கொடுக்காதீர்கள்' அப்படி இல்லையென்று இடங்கொடுத்தால் கல்வியைக் கைவிட்டுத்தான், அறிவற்றவனாய் வாழ வேண்டும். பருவ வயதென்பது 'காதலின் சத்தங் கேட்டு மனம் திறந்து கொள்ளும் தன்மையானது' இது மனித உணர்வு. மனித உணர்வுக்கு மதிப்பளிக்கவேண்டும். ஆனால், அதற்கென்று வயது, காலம் என்பன இருக்கின்றன. படித்து முன்னேற்றங் கண்ட பின்பு மனித உணர்வுகளை மதித்து ஏற்றுக்கொள்வதே நன்றாக இருக்கும்.

காற்றுள்ளபோது தான் தூற்றிக்கொள்ள வேண்டும். மாணவப் பருவம் இனிமையானது அது திரும்ப வராது. அப்படியான இனிய வாழ்க்கையை அறிவுள்ளவர்களாக வளர பயன்படுத்துங்கள். உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த முயற்சியெடுங்கள் மேம்படுத்துங்கள். ✪✪

**வி.தேவபாணு**

---

அறிவியல்

# கற்பனைக்கும் அப்பால்



உயிரின் ரகசியம் என்ன என்று பலர் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கிறார்கள். இக் கேள்வியை அறிவியலாளர்கள், தத்துவஞானிகள், சமயவாதிகள் எல்லாரும் கேட்டிருக்கிறார்கள். இதற்குப்பதில் சொல்லும் வகையில்லையால் வாட்ஸன் 'ஸுப்பர் நேச்சர்' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்.

சுவாரஸயமான புத்தகம், அதில் ஜோஸ்யம், பேய்பிசாசுகள், டெலிபதி எல்லாமே இருக்கலாம் என்று நிருபிக்க முயன்றிருக்கிறார். அந்தப் புத்தகத்திலுள்ள கருத்துக்களுடன் பலருக்குச் சம்மதமில்லாமலிருக்கலாம். ஆனால் படிக்கவும் சுவாஸ்ரமான புத்தகம். புத்தகத்தில் எனக்குப் பிடித்த ஒரு பகுதியை மட்டும் சொல்கிறேன்.

பூமியில் உயிர் என்பது எல்லாவற்றிற்கும் பொதுவான ஒன்று, உயிர் என்று தொடர்ந்து இருக்கும் ஒரு முழுமையின் வடிவங்கள் தாம் நாம் யாவரும், ஒரு ரோஜாவோராபின் பறவையோ அல்லது ராமச்சந்திரனோ எல்லாம் ஒன்றுதான். ஒரே ஆதாரப் பொருட்களின் வடிவங்கள் தாம்.

இயற்கையில் மொத்தம் 92 கனிமங்கள் உள்ளன. கனிமம் என்று நாம் சொல்வது இரும்பு, அலுமினியம், சிலிக்கன்,ஈயம் போன்ற பொருட்கள். இந்தத் தொண்ணூற்றி இரண்டிலும் பதினாறுதான் உயிர்வாழ் ஜந்துக்களை அமைக்கப்படுகின்றன. இந்தப் பதினாறிலும் காபன் - கரி அதுதான் மிக அதிகமாகப் பயன்படுகிறது.

காரணம், காபனின் ரசாயன அமைப்பு. அது பல வடிவங்களில் பல விதங்களில் மற்ற பொருட்களுடன் எளிதாகச் சேர்ந்து சிக்க லான கூட்டனுக்கள்: மாலிக்யூல்களை அமைக்க முடியும். இவ்வாறு அமைக்கக்கூடிய ஆயிரக்கணக்கான கூட்டனுக்களில் இருபத்திரண்டு கூட்டனுக்கள் தான் உயிருக்கு முக்கியம், அவற்றை அமினோ அமிலங்கள் என்று சொல்கிறார்கள்.

இந்த அமினோ அமிலங்களை வைத்துப் ப்ரோட்டீன்களை உயிர்கள் தயாரிக்கின்றன. சரியான சமயத்தில் சரியான ப்ரோட்டீன்களைத் தயாரிப்பதுதான் நாம் உயிர் வாழ்வதன் ரகசியம். இந்தப் ப்ரோட்டீன் தயாரிப்புக்கு உண்டான செல்முறை ஜெனடிக் கோடு என்று ஒரு விதமான சங்கேத பாஷையில் எழுதி வைப்பதற்கு நான்கு கூட்டணுக்களே தான் பயன்படுகின்றன. நியூக்ளியோடைடு என்று இந்தநான்கு. எனவே உயிரின் ரகசியம் முழுவதும் இந்த நான்கு எழுத்துகளால் எழுதப்பட்ட தொடர் கதை. ஒரு பாக்ரீயாவுக்கும் இதுதான். சனாதிபதிக்கும் இ:.தே. நம் உயிர் வாழ்தலின் அத்தனை செயல்களும் தெர்மோடைனமிக்ஸின் இரண்டாவது விதிப்படிதான் நடைபெறுகின்றன. இது என்ன விதி? பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துச் செயற்பாடுகளும் ஒழுங்கிலிருந்து ஒழுங்கற்ற தன்மைக்கு மாறிக்கொண்டிருக்கின்றன என்பதுதான் இந்தவிதி .பரிபூர்ணக் குழப்பம். அதை நோக்கித்தான் பிரபஞ்சம் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் உயிர் வாழ் ஜந்துக்களின் அமைப்பைக் கவனித்தால் தென்படுவது ஒழுங்கான கட்டட அமைப்புத்தான் அதனால் உயிர்வாழ இந்த ஒழுங்கமைப்புக்காக நாம் பிரபஞ்சத்தில் மற்றோர் இடத்தில் குழப்பத்தை அதிகரித்துத்தான் சாதிக்கிறோம், நாம் எல்லோரும் ஒரு விதமான 'லோக்கல்' ஒழுங்கமைப்புக்கள்.

இந்த ஒழுங்கமைப்புக்கு சுற்றுப்புறத்திலிருந்து சக்தியைக்கிரகிக்கிறோம். உயிர்வாழ்வது என்பதே நமக்கும் நம் சுற்றுப்புறத்திற்கும் ஏற்படும் சக்திப் பண்ட மாற்றம். அதை ஒரு 'திறந்த தெர்மோடைன மிக் விளைவு என்கிறார்கள்.

சுற்றுப்புறத்தில் உள்ள காற்றைச் சுவாசித்து சுற்றுப் புறத்தில் உள்ள தாவரங்களையும் பிராணிகளையும் உட்கொண்டு அவற்றை ப்ரோட்டீன்களாக மாற்றும் ரசாயன விந்தை நாம். இந்த வகையில் நாம் செல்கள் அனைத்தையும் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறோம். தினம் பிறந்து தினம் இறந்துகொண்டிருக்கிறோம்.

இதுதான் உயிர்வாழ்தலில் நமக்கும் நம் சூழலுக்கும் உள்ள தொடர்பு, சிநேகிதம், பரிமாற்றம் நாம் ஒரு முழுமையின் அங்கங்கள். ஒன்றுக்கொன்று சிக்கலான உறவு கொண்ட அங்கங்கள். அந்த முழுமைதான் என்ன? அதை 'ஸுப்பசர் நேச்சர்' என்கிறார் வாட்ஸன்.

ஒரு புல்லிதல்அசையும்போது, இந்தப் பிரபஞ்சமே அசைகிறது என்று சொல்வதை அறிவியலின்படி நிருபித்துக்காட்ட முடியும். உயிரற்றவைக்கும் உயிருள்ளவைக்கும் என்ன வித்தியாசம்? எல்லாம் அணுக்களின் கூட்டமைப்புக்கள்தாம். அணுக்கள் என்பது எலக்ட்ரான் போன்ற துகள்களால் ஆனது. இந்தத் துகள்களையும் நுட்பமாக நோக்கினால் அவை மின்சாரக் குஞ்சுகள் மற்றபடி பெரும்பாலும் வெட்டவெளிதான்.

நம் உடம்பில் உள்ள வெட்டவெளிகளை நீக்கி நம்மைச் சுருக்கினால் மொத்தம் ஒரு பட்டாணி அளவுதான் இருப்போம். நாம் எல்லாருமே காலி மனிதர்கள். மின்காந்த, அணுக்கரு, சக்திகளால் ஒட்ட வைக்கப்பட்டு திடகாத்திரமாக தோன்றும் பிரமைகள், உயிர்வாழ் மனிதர்களும் உயிரிலாதவையும் ஆதார அணுக்கட்டட லெவலில் ஒன்றே.


ஒரேயொரு வித்தியாசம் உயிர்வாழ் இனங்களின் கூட்ட அணுக்கள் கொஞ்சம் அதிகப்படியாக ஒழுங்கானவை: பெரியவை, தன்னைத்தானே இரட்டித்துக்கொள்ளவல்லவை. பிரபஞ்சத்தின் தெர்மோ டைனமிக்ஸ் குழுப்ப நீக்கம் செய்து தன்னை ஒழுங்கமைத்துக் கொள்ளும் விதியைத் தனக்குள் எழுதி வைத்துக்கொண்டவை. எப்போதும் புதுப்பித்துக் கொண்டு மாற்றிக்கொண்டு இருப்பவை. உயிரிலா இனங்கள் மாறுதல் இல்லாதவை. மாறுதல்கள்தான் உயிர்.

**சுஜாதா**

---

பொறுமையும் காலமும், வலிமையும் பலாத்காரமும் ஆற்றுவதினும் அதிகம் சாதிக்கின்றன. -லா பான்டன்

# மீண்டும் உயிர் பெறும் கன்னியா



கன்னியா, திருகோண மலையிலிருந்து வடக்கே ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் அநுராதபுரம் வீதியில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் மிக்க தமிழ்க் கிராமம். இராவணன் தோண்டியதாகக் கருதப்படும் வெந்நீரூற்றுகள் கன்னியாவில் தான் உள்ளன. இந்துக்கள் தங்கள் உறவினர்கள் இறந்த பின்னர் அவர்களின் அந்தியட்டிக் கிரியைகளை நடத்தும் முக்கிய இடமாக கன்னியா வெந்நீரூற்றுக்களைப் பயன்படுத்தி வந்தனர்.

கால்நடை வளர்ப்பு கன்னியா மக்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது. வேறு சிலர் கமத்தொழிலிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.1989 வரை செழிப்பான கிராமமாக இருந்து வந்த கன்னியா, 1990 சுடுகாடாக மாறியது. 1990ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தில் படையினரின் அடக்குமுறை மற்றும் வன்செயல்களினால் கன்னியாவிலிருந்து மக்கள் கூண்டோடு இடம்பெயர்ந்தனர். ஒரு குடும்பம், இரண்டு குடும்பங்கள் அல்ல, சுமார் ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்தன.

பன்னிரண்டு வருடங்களாக அகதி முகாம் வாழ்க்கையை நடத்தி வந்தவர்கள் மீண்டும் தங்களின் சொந்தக் கிராமத்திற்குத் திரும்ப ஆரம்பித்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே பதினான்கு தமிழ் கிராமங்கள் மக்கள் இடம்பெயர்ந்ததினால் காடுகள் வளர்ந்து காணாமல் போயுள்ளன. திரியாய், கல்லம்பத்தை, தென்னமரவாடி, குச்சவெளி, பன்குளம், நொச்சிக்குளம், வெல்வெரி, வேப்பங்குளம், முதலியார்குளம் போன்றவை அவற்றில் அடங்கும். ஏனைய கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தமக்கள் திரும்பிச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

ஆனால் கன்னியா கிராமத்திற்கு இடம்பெயர்ந்த மக்கள் திரும்பி வர ஆரம்பித்துள்ளனர். யுத்த நிறுத்த உடன்படிக்கை வந்ததின் பின்னர் தென்னிலங்கையிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கில் சிங்கள உல்லாசப் பயணிகள் கன்னியா வெந்நீற்றுக் கிணற்றுக்கு வந்துகொண்டிருக்கின்றனர் அருகில் கடைத்தெரு ஒன்றே உருவாகியிருக்கின்றது. வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் சிங்கள இனத்தவர்கள்.

கதிர்காமம் தமிழ் மக்களின் கைகளிலிருந்து பறிபோன மாதிரி கன்னியாவும் பறிபோய்விடுமா என்றொரு அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மீள்குடியேற்றம் ஒன்றுதான் கன்னியாவை பறிபோக விடாமல் காப்பாற்றும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையிலிருந்து தமிழ் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கன்னியா சென்று மீளக்குடியமர வந்துள்ள மக்களுக்கு சிரதானம் மூலம் உதவி செய்தனர். பத்து வீட்டுத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பத்து வீடுகளைத் தவிர ஒரு ஓலைக்குடிசையைக் கூட காணமுடியாதுள்ளது. பத்து வீட்டுத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு உள்ள வீடுகள் எவ்வாறு காப்பாற்றப்பட்டன என்று கேட்கலாம். இவ் வீடுகளை 1990 தொடக்கம் சிறிலங்கா இராணுவத்தினர் தங்கள் படைமுகாமாக பாவித்து வந்தனர். தொடக்கத்தில் நூறு இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஜங்கரன் தெரிவித்தார். கன்னியாவி லிருந்து தபால் நிலையம், கூட்டுறவுச்சங்கக் கட்டடம், அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் இந்து ஆலயங்கள் அனைத்தும் அழிந்து விட்டன. இந்தப்பின்னணியில் மீளக்குடியமரும் வேலைகள் கன்னியாவில் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்படுகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தான் மீளக்குடியமரும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார் ஜங்கரன். கன்னியா தமிழ்க்கிராமம் படிப்படியாக மீண்டும் உயிர் பெற்று வருகின்றது என்று கூறலாம்.

> திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே பதினான்கு தமிழ் கிராமங்கள் மக்கள் இடம்பெயர்ந்ததினால் காடுகள் வளர்ந்து காணாமல் போயுள்ளன. திரியாய், கல்லன்பத்தை, தென்னமரவாடி, குச்சவெளி, பன்குளம், நொச்சிக்குளம், வெல்வெரி, வேப்பங்குளம், முதலியார்குளம் போன்றவை அவற்றில் அடங்கும். ஏனைய கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தமக்கள் திரும்பிச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

திருமலையிலிருந்து
நாதன்

# எமது சமகால எழுத்தாளர்களின் பொறுப்பு

[சென்றவாரத் தொடர்ச்சி]

எடுத்துக்காட்டாக, இது அஸாமிலும் பஞ்சாபிலும் தமிழ் நாட்டிலும் நடந்ததோடு, இறுதியாக இந்தியாவின் அவசரகாலச் சட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தியது. அதேநேரம், பன்முகத்தன்மையின் பெயரால் பிரிவினைகள் வற்புறுத்தப்படுமாயின் ,யூகோஸ்லாவிய சூழ்நிலையே உருவாக்கப்படும். எமது பண்பாடுகளின் ஒருமைத் தன்மை பற்றிய விழிப்புணர்வு தொலைநோக்குடையதாக அமைதல் வேண்டும். அதனால் தான் இந்தியாவைப் போன்ற நாடுகளில் நாம் அளவுக்கதிகமாக அதிகாரத்தை ஒரேமையம் நோக்கிக் குவிக்க முனைந்தால், நாம் சச்சரவிடும் சிற்றரசுகளாகப் பிரிய நேரலாம். என்பதை நான் உணர்கிறேன். எனின், ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலை எங்களுக்குண்டு. அதாவது, தாகூர் ஒரு வங்காலியாக இருக்கக்கூடிய அதேநேரத்தில் அவர் ஒரு தலைசிறந்த இந்தியக் கவிஞருமாவார். காந்தி ஒரு குஜராத்தியாக இருக்கும் அதே சமயம், அவர் ஒரு மகத்தான இந்திய ஆத்மாவாகவும் உள்ளார்.


உலகமயமாதல் என்று அழைக்கப்படுவது, உண்மையில் அமெரிக்க மயமாதலாகும். இது, நாம்போற்றி வளர்த்த எமது தேர்ந்த பெறுமானங்கள் பலவற்றுக்கு ஓர் அச்சுறுத்தலாகும். இந்த அச்சுறுத்தலுக்குஎமது மொழிகளிலுள்ள எழுத்தாளர்கள் மறுமொழி வழங்கவேண்டும். இல்லாவிடில் எமது சுயபாஷைகளுக்கு எத்தகைய எதிர்காலமும் இராது: அவை வெறுமனே சமையலறையில் உயிர்வாழும் மொழிகளாக மட்டுமே உயிர்த்திருக்கும்.

எமது சமகாலத்தில் உலகிலே முன்னணியில் திகழும் சில சிறந்த எழுத்தாளர்களை நோக்கி நான் மற்றும் ஒரு வினாவை முன்வைக்கிறேன். இது புலனுணர்வு சார்ந்த தெளிவுபற்றிய ஒரு முக்கியமான கேள்வியாகும். அனைத்துக் கலாச்சார மதிப்பீடுகளினதும் அழிவும் ஈனச் செயல்களும் மனிதத்தன்மையற்ற கொடுமைகளும் இந்த உணர்வுத் தெளிவினுடைய குறைபாட்டின் விளைவால் ஏற்பட்டு வந்திருக்கிறது. கலாச்சாரமும் பண்பாடுகளுமற்ற எந்த ஓர் இலக்கியமோ அரங்கமோ கவிதையோ இருக்க முடியாது. இந்த பூமியும் இந்த வானமும் நிலைபெற்று நின்று நிலவும் பேணி வளர்க்கப்படவுமான வாழ்வின் அனைத்து ஒழுங்கமைப்பிலும் பரிவும்அன்பும் இன்றி எந்த ஒரு பண்பாடுமில்லை.

இக்னாஷியோ சிலொன் (Ignatia Silone) என்பாரின் நாவலொன்றின் ஒரு கதாபாத்திரமான பொன்டமாரா (Fontamara), பணம், பதவி, எனும் இரு தீங்குகள் பற்றிப் பேசுகிறது. அவை தமக்குள் வெறுப்புக்குரியனவாக இருந்தாலும் அவற்றின் வரையறைகள் பேணப்படும்போது சகிக்கக் கூடியனவாக அமையும். இந்தப் பணம்,பதவி, ஆகிய இரண்டும் உணர்ச்சிவசப் படக்கூடிய சிலருக்கு ஆர்வப்பற்று உடைய ஒருமுகப்பட்ட மனத்தினை அடையும் வாய்ப்பை ஏற்படுத் துகிறது. இத்தகையவர்கள் அரசியலிலும் பெரிய வியாபாரங்களிலும் தம்மளவில் நன்நெறியாளராய் இருந்தாலும் தமது அதிகாரமே பிரதானமான நோக்கமாயிருக்கும். இவர்கள் மனிதர்களின் நலன் என்ற பெயரால் எத்தகைய ஒழுங்கீனமான செயற்பாட்டையும் நியாயப் படுத் துவர். எடுத்துக்காட்டாக, மெதுவான உயிரினச் சூழல் அழிவை நியாயப்படுத்துதல், இத்தகைய வகுப்புவாதப் படுகொலைகளிலும் பார்க்க அபிவிருத்தி மற்றும் நவீனமயப் படுத்தல் என்பவற்றின் பெயரால் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தும் மிகுந்த அல்லலுற்றும் வாழ்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

யூ.ஆர்.ஆனந்தமூர்த்தி

அதனாற்தான் மகாத்மா காந்தியும் தாகூரும் தேசிய அரசுபற்றிய ஐரோப்பிய ஆலோசனையை நிராகரித்தனர். அத்துடன்,இந்தியாவைப் போன்ற பன்முகக் கலாச்சாரங்களுக்குப் பொருத்தமான தேசியவாதம் பற்றி வித்தியாசமான கருத்தைத் தெரிவு செய்தனர். எனது நாட்டின் வித்தியாசமான கருத்தைத் தெரிவு செய்தனர். எனது நாட்டினுடைய நடைமுறைக்கொவ்வாத இவ்விரு காட்சிகளின் செய்தியிலிருந்த இந்த அமைதியற்ற உலகுக்கு ஒரு நல்ல பாடம் அமைய முடியும். எனின், உறுதியான அரசு மற்றும் பணம் பற்றிய குறிக்கோள்களில் கவனம் செலுத்துபவர்களாக எம்மைக்காணமாட்டோம். இன்று குஜராத்தி அரசாலேயே சாதிவெறி கட்டவிழ்த்து விடப்படுகிறது. அத்துடன், பாகிஸ்தானால் தீவிர வாதத்திற்கு ஆதரவு வழங்கப் படுகிறது. இதில் ஒன்றை ஒன்றுடன் நியாயப்படுத்த முனைவது எம்மை அச்சுறுத்துவதாயுள்ளது.



உலக இலக்கியமானது, இவ்வாறான எமது காலத்திய சவால்களுக்கு மறுமொழியளிக்க வேண்டியிருக்கிறது. இதற்குப் பரிவும் தொலைதூர நோக்குடனான சுயசிந்தனையும் தேவையாயுள்ளன. எழுத்தாளர்கள் என்றவகையில் எமது சமகாலத்தின் பயங்கரமான சம்பவங்களின் போது மனச் சான்றுடன் கூடிய சாட்சிகளாக நாம் இருத்தல் வேண்டும். அவ்வாறே நாட்டுமக்களிடையே நல்லறிவு நிலையையும் பரிவையும் மீளப்புதுப்பிக்க வேண்டியவர்களாகவும் நாமுள்ளோம்.

இறுதியாக, எழுத்தாளர் என்றவகையில் எமது காலத்தில் நிலவும் உணர்வின்மை மற்றும் பொருளின்றி உணர்ச்சிவசப்படுதல் என்பன பற்றிச் சில வார்த்தைகள், எழுத்தாளர் கரகாசன என்பார் ஒரு குரூரமான உணர்ச்சி வெளிப்பாடு பற்றி ஒரு நகைச்சுவைக் கதை மூலம் குறிப்பிடுகிறார்.

எனக்கு ஒரு பொஸ்னிய நகைச்சுவைக் கதையொன்று சொல்லப்பட்டது. பொஸ்னியக் கதை என்று சொல்லப்பட்டாலும் அதனை ஒரு யூதைக்கதை எனுமாறு அது அமைந்துள்ளது. ஐவெக் இனத்தவன் ஒருவன் ஒரு கள்ளுக்கடையில் இருந்தபோது, தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த மனிதனின் பெயர் மோசே என்று காதில் விழுந்தவுடன் இரு தடவைகள் சிந்திக்காமல், அக்கணமே அவனைக் கொன்றுவிட்டான். அவன் தன் குற்றத்தைக் காவல்துறையினரிடம் மறுத்துக்கூற முற்படவுமில்லை. அவன் சர்வ சாதாரணமாகத் தன்செயலை நியாயப்படுத்திப் பேசினான். “அவர்கள் எமது யேசுநாதருக்குச் செய்தது என்ன?” “ஆனால், அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது” என்று காவல்துறை அதிகாரி ஆச்சரியத்துடன் சொன்னார். “ஆம்,ஆனால், நான் அதைப்பற்றி நேற்றுத்தான்கேள்விப்பட்டேன்” என்றான் அந்த ஐவெக் இனத்தவன்.

கொல்லப்பட்ட மனிதனை அவனுடைய வரலாற்றுடனோ அவனது பெளதீக சரீரத்துடனோ ஒரு தனிமனிதனாக அதற்கு மேலும் காணமுடியாது போயிற்று. என்னைப்போன்று அல்லாத, என்னைப் போல்வழிபடாத, என்னைப்போல் பேசாத ஒவ்வொருவரும் வெறுக்கத்தக்க “பிறன்”ஆகிறான். அந்த நபர் ஒரு வளர்ந்த ஆணாகவோ பெண்ணாகவோ இருக்க வேண்டியதில்லை: வெறுமனே ஒரு சிறுகுழந்தைகூட கட்புலனுக்கு அப்பாற்பட்ட இந்தப் “பிறன்” என்ற நிலைக்குஆளாக முடியும். இத்தகைய மனப்பதிவு பயங்கரமானது.

இலக்கியமானது இவ்விடயத்தில் பாரிய பங்களிப்பைச் செலுத்துமானால், அது இவ்வாறு அமைய முடியும். அதாவது, இத்தகைய ஐயத்திற்கிடமான நிலையிலிருந்து உங்களைப் பிரித்தெடுக்கச் செய்யும். தனது தந்தையைக் கொன்ற கொலைகாரனைக் கொல்வதில் ஒரு ஹெம்லட்டைத் தயங்கச்செய்யும்.

நாம் வெறுமனே எதனையும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் உயிர்ப்புள்ள உடம்பும் உயிர்ப்புள்ள வரலாறும் எமக்குள்ளன. அனைத்துத் தலைசிறந்த இலக்கியங்களிலும் உள்ள மகத்தான பாடம் இதுவே. ☐☐

குழந்தையைக் கையால் தூக்குபவன், தாயை இதயத்தால் தாங்குகின்றான். -டென்மார்க்

உலக மகளிர் தினத்தையொட்டி பெண்கள் ஆய்வு நிறுவனம் 08-03-2002இல் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற சிறுகதை.

## சிறுகதை

# மனவுறுதி

இசையரசி

மரங்கள் முறிந்து ஆங்காங்கே விழுந்து கிடந்தன. வீடுகளில் கட்டங்கள் இடிந்தும், உடைந்தும் போய்க்காணப்பட்டன. சில மண் வீடுகள் கூரையின் ஓட்டையால் மழைக்கு ஒழுகி சுவர்கள் கரைந்துபோய்க் கிடந்தன. மற்றும் சில குடிசைகள் கறையான் அரித்து உக்கிப்போய் கிடந்தன. மக்களின் நடமாட்டம் அங்கு காணப் படவில்லை. சின்னம்மா தனியே பாதையால் வந்துகொண்டிருந்தாள். சின்னம்மாவுக்கு அந்தக் காட்சியைக் கண்டதும் மனதில் பயம் ஏற்பட்டது. இதைக்கண்டால் யாருக்குத்தான் பயம் வராது. நான் இப்படிப் பயந்தால் செய்ய வேண்டிய காரியம் நிறைவேறாது என்று நினைத்தவள், மனதைத் தேற்றிக்கொண்டு நடந்தாள். ஆனாலும்,சின்னம்மாவின் நடையின் வேகத்தைவிட, அவள் மனதின் வேகம் மிகவேகமாய் இருந்தது.

சின்னம்மா தன்னுடைய கணவனோடு இப்பாதையால் சைக்கிளில் வரும்போது, மரங்கள் வளர்ந்து உயரமாக நின்றன. மக்களின் குடியேற்றம் எட்ட எட்ட இருந்தது. சனத்தின் பிரயாணம் நடந்தது. அன்று அப்பிரதேசம் செழிப்பாக இருந்தது. ஆனால், எமக்கு உற்சாகத்தைத் தந்தது. எடி சின்னம்மா எடி சின்னம்மாஇதில் வருகிற பாலை மரத்துக்குக் கீழ்நின்று, அந்தா பார் அந்த வீட்ட கொஞ்சத்தண்ணீர் வாங்கிக் குடித்திட்டு களைப்பாறிட்டு போவம் என்றான் கந்தசாமி.

ஓம் அப்பா அதில நின்று போவம். அதற்கென்ன என்றதும், அதில் நின்று வீட்டுக்காரரைக் கூப்பிட்டு தண்ணீர் கேட்டதும்,முரளி தண்ணீர் கொண்டு வந்து தந்திட்டு வாங்கோவன் உள்ளுக்க தேத்தண்ணி குடிச்சிட்டுப் போகலாம் என்றதும், சீ நாங்கள் கனதூரம் போகவேண்டும். உள்ளுக்க வந்திருந்தால்: சுகமாய்த் தானிருக்கும், ஆனா... போக வேண்டிய இடத்தை நேரத்துக்குப் போய்ச் சேரமாட்டம். இப்ப வரேல்லையென குறைநினைக் காதையுங்கோ. மீண்டும் ஒரு நாளைக்கு இதால போகேக்க உங்களுடைய வீட்ட வந்திட்டுப் போறம் என்றான் கந்தசாமி. சரி உங்களுக்கு நேரம்போகுதெண்டா போயிற்று பிறகு கட்டாயம் வரோணும் என்று அன்று முரளி கூறியதும், அந்த இடத்திலுள்ள பாலை மரத்தைக் கண்டதும், சின்னம்மாவின் கண்ணில் அந்தச் சம்பவம் திரைப்படமாய் ஓடியது. சின்னம்மா விம்மி விம்மி மனதுக்குள் அழுதாள். இப்படி எமது வாழ்க்கை மீண்டும் எப்பொழுது திரும்பும்?

காற்று அமைதியாக வீசிக்கொண்டிருந்தது. திடீரென புயல்காற்று அடிக்கத் தொடங்கியது. மரங்கள் வேகமாக அங்கும் இங்கும் ஆடி அசைந்தன. மதிநிலா முதிரை மரத்தின் நுணிக்கொப்பில் இருந்து எதிரியின் நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தாள். முதிரை மரம் பலம்தான். எமது கஷ்ட காலத்துக்கு முறிந்து விழுந்தால் சொல்லிக் கொண்டே நடக்கிறது என மனதுக்குள் நினைத்துக் கொண்டு ரிசானா முதிரை மரத்தை அண்ணார்ந்து பார்த்தாள். மரம்முறிவடைவது போலக்கிடந்தது. மதிநிலாவை இறங்கி அடுத்த கொப்பில் இருக்கும்படி, ரிசானா கட்டளையைப் பிறப்பித்தாள்.

மதிநிலா இறங்கு முன் நாலாபுறமும் சுற்றிப் பார்த்தாள். தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது. ஆனால், அது யாருடைய உருவமெண்டு தெளிவாகத் தெரியவில்லை. மதிநிலா ஸ்கோப்பை வைத்தப்பார்த்தாள். அந்த உருவம் தெளிவாகத் தெரிந்தது. அந்த உருவம் அம்மாவினது. அந்த அம்மா எங்கே போகிறா என்று கொஞ்ச நேரம் இருந்து பார்ப்பம் என்று நினைத்த பொழுதே நான் சொல்லுறது உனக்குக் கேட்கவில்லையா. நீ விழுந்து கால்,கை முறிந்தால் , நான் என்ன செய்வது? நீ என்ன வேலை செய்கிறாய்? போராளி களைக் கவனிக்கிறதில்லையே என்று என்னிடம் கேள்வி தொடுத்தால், நான் என்ன செய்வது? அதற்கு மதிநிலா போய் பதில் சொல்லுவியோ? விரைவாக இறங்கி அடுத்த கொப்பில் இரு என்றாள் ரிசானா.

ஓம் அக்கா இறங்கிறன் என்று சொல்லிவிட்டு, மீண்டும் அந்த அம்மாவின் மீது பார்வையைச் செலுத்தினாள். அந்த அம்மா எங்களை நோக்கி வருவதை புரிந்து கொண்டாள். அந்த அம்மாவுடைய முகத் தோற்றம் என்னுடைய அம்மாவின் முகத் தோற்றம் போல கிடக்குது என்று அவளின் மனதில் தோன்றிச்சு. முதிரை மரத்தில் இருந்து கீழே இறங்கிவந்து, முல்லை நீ கொஞ்ச நேரம் மரத்தில் நின்று ஓ.பி.யை பாரடி. உன்னை பிறகு மாத்திவிடுறன் என்றாள் மதிநிலா. அது சரி நான் பார்க்கிறன். நீ மரத்தில்நின்று இறங்கமாட்டாய், என்ன நீ இப்ப இறங்கிற்றாய். ஏதோ வித்தியாசம் போல கிடக்குது. இண்டைக்கு மழை அடிச்சூத்தப் போகுதுதான் என்றால் முல்லை. அதற்கென்ன நிலம் வரண்டு போய்க் கிடக்குத்தானே . மழை வந்தால் செந்தளிப்பாக இருக்கும். என்ர பெயரால என்றாள் மதிநிலா. மதிநிலா ஏன் இறங்கினி எனக்குச் சொல்லன்ரி. அதொன்றும் இல்லை. இறங்கிக்கீழே சென்றி பார்க்க வேணும் போல கிடந்தது. அதுதான் நான் இறங்கி வந்தனான். என்றாள் மதிநிலா. சரி சரி கதையை விட்டுவிட்டு கெதிப்பண்ணி ஏறு. ரிசானாக்கா வந்தால் தெரியும்தானே என்றாள் மதிநிலா.



என்னுடைய அம்மாவுக்கு மேல் உதட்டில் கறுப்பு இருக்குது. அம்மா சிரித்தா என்றால் வடிவாய்த்தான் இருக்கும். அம்மா சோறு தீத்தினால் நான் தலையைத் தலையைத்திருப்புவன். மிஞ்சின சோற்றை அம்மா சாப்பிடுவா. அதை ஏன் அம்மா கொட்டாமல் சாப்பிடுறா என்று நான் யோசிப்பன். இப்பதான் எனக்குப்புரியுது. பிள்ளையின் மிச்சச் சாப்பாடு அன்னைக்கு அமிர்தம் என்று. நான் இயக்கத்துக்கு வந்ததால அம்மா கவலைப் பட்டுக்கொண்டு சாப்பிடாமல் கோயிலும் குளமுமாய்த்தான் இருப்பா: அது எனக்குத் தெரிந்த விசயம்தான். வீட்டில் இருந்தா வீடும், பள்ளியும், கோயிலும் என என்ர வாழ்க்கையில அர்த்தப்படாமல் திரிஞ்சிருப்பன். நான் இயக்கத்தில இருக்கிறதால பல களங்களுக்குப்போய் ஆமிய சுட்டுக்கொண்டிருக்கிறன். அதை நினைத்தால் மனதில் சந்தேசம்தான். இப்படியான வாழ்க்கை மீண்டும்வராது. பிற்காலத்தில் நான் கவலைப்பட்டிருப்பன். இந்தச் சந்தர்ப்பத்தை இழந்திருப்பன். ஏதோ நல்ல காலம் என்ர அம்மா என்னை எப்படி கஷ்டப்பட்டு வளர்த்திருப்பா. அதற்காவது என்ர அம்மாவுக்கு நான் செய்யும் கடமை ஒரு வீரத்தாய் என்ற பெருமையை பெற்றுக்கொடுக்க வேண்டும். இதைக்கேட்டு என்ர அம்மா பூரிப்படைய வேண்டும். இவ்வாறு மதிநிலாஆழமாக யோசித்தாள்.

சின்னம்மா வந்துகொண்டிருந்த வேளை, டொம்டொம் என ஷெல் சத்தங்கள் கேட்கத் தொடங்கியதும் சின்னம்மாவை திகைக்க வைத்தது. சின்னம்மாவிற்கு என்ன செய்வ தென்று தெரியாமல் நின்றிருந்தாள். ஷெல் சத்தம் குறைவதாய் காணவில்லை. மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டிருந்தது. ஷெல்கள் சின்னம்மாவிற்கு கிட்டவாக அண்மித்து அண்மித்து விழுந்து வெடித்துக் கொண்டிருந்தது. அங்கே ஒரு மாமரம் நின்றிருந்தது. அந்த மாமரத்தைக் கட்டிப் பிடித்தால் கூட தொடவே முடியாது. அந்தளவிற்கு பருமனாக இருந்தது. சின்னம்மா மரத்துக்குப்பின்னால் காப்பெடுத்தாள். ஷெல்கள் வெடித்து தீப்பிளம்புடன் புகைமண்டலமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு பீஸ் துண்டும் நெருப்புப்பொறி மாதிரி சிதறுவதை நேரில் பார்த்தாள். இதில் இருந்து தப்பிப்போக மாட்டேனா என சின்னம்மா நினைத்தாள்.சிறிது சிறிதாக ஷெல் சத்தம் குறைந்து வருவதை உணர்ந்த சின்னம்மா நடையைக் கட்ட ஆரம்பித்தாள். எனக்கு சிறிய ஷெல் சத்தத்துக்கே பயந்து விறுவிறு என வேர்த்தொழுகுது. சிறிது சிறிதாக ஷெல் சத்தம், விமானச் சத்தம், ராங் சத்தம், புள்டோசர். குண்டுச்சத்தம், போன்றவற்றுக்குள் நின்று பயந்து பின்னுக்கோடி வராமல் சண்டை செய்யிறாள்தானே. என்ர மகள் மட்டுமே! நிற்கிறாள். என்ர மகள் என்றால்தான் பிள்ளையே. என்ர பிள்ளையைப் போல தாய் தகப்பனை விட்டுப்போட்டு இருக்குதுகள். அதுகள் வாழும் வயதில எங்களுக்காக உயிரை துச்சமென மதித்து காணிக்கையாக்குதுகள். இதுகளின்ர உறுதியும், அர்ப்பணிப்பும் வித்தியாசமானது.



தமிழனுக்கு ஒரு நாடு இருந்திருந்தால் எங்கட பிள்ளையள் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? மழை, வெய்யில், பனி, என்று பாராது கரடு முரடான பாதையில் நின்று எல்லைக்காப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்குதுகள். இதென்றாலும் சுகனமான வேலையோ. இதுகள் காவல் காக்கவில்லையென்றால் எங்கட பாடு அதோ கெதிதான். அவனுக்கு என்ன இதுதான் சந்தர்ப்பம் என்று உள்ளுக்க வந்து அட்டகாசம் புரிஞ்சிட்டுப் போவான். மூத்த சந்ததிகள் விட்ட தவறை எங்கட சந்ததிதான் அனுபவிக்கிறது. நாங்கள் என்றாலும் போராடினாங்களே? நாங்க நினைச்சம், கலியாணம்கட்டி பிள்ளைகளைப் பெத்தால் எங்கக வாழ்க்கை முடிஞ்சுதெண்டு. இப்பத்தான் எனக்கு எல்லாம் புரியுது. எங்களுக்கு ஒரு நாடு கிடைச்சிட்டா பிறகு என்ன நாங்கள் தன்னாட்சி உரிமை கொண்ட தமிழனாக சுதந்திரமாய் அதற்காக எங்கட பிள்ளைகள் போராடுதுகள்.

நாங்கள்தான் பிழையை விட்டுக்கொண்டு உணராமல் இருந்தம். அதுகள் தங்கட கடமையைப் புரிஞ்சு சரிவரச் செய்யுதுகள். அதுகள் நினைக்குதுகள் போலும் நாங்கள் சுதந்திரமாய் வாழேல்லை என்றாலும், எங்கட அடுத்த சந்ததியாவது நிம்மதியாக வாழட்டும் எண்டு. அவையளுக்குள்ள புத்தி எங்களிடம் அண்டைக்கு இருக்கவில்லை. என்ர மகள் பல களங்களுக்குப் போய் போர் புரிந்திருப்பாள். அவள் ஒரு வீர மகளாக இருப்பாள். மகள் வீட்ட வந்தா கள நிலவரங்கள் பற்றி அறியலாம். நான் மகளைக் கண்டால் கட்டிப்பிடிச்சு முத்தம் ஒன்று கொடுக்கோணும் போல் விருப்பமாய் இருக்குது. இப்படியாக சின்னம்மா மனதுக்குள் பல கற்பனைகளை நினைத்துக்கொண்டு வந்தாள்.

ஒரு உருவம் மரத்தில்நிற்பதைக்கண்ட சின்னம்மா, திகைப்படைந்தாள். ஆமிக்காரனோ என்று எண்ணினாள். சின்னம்மா பாதையை மாறி ஆமிக்காரன் நின்ற பிரதேசத்துக்க வந்திட்டனோ என யோசித்தாள். அந்த உருவத்தைப்பார்த்தால் ஆமிக்காரனின் சேப்தான் அடிக்குது. என்னைக் கண்டுட்டானோ! குரங்கிட கையில அகப்பட்ட பூமாலை போல. அதே போலதான் நான் அவனிடம் பிடிபட்டால் இருக்கும். நான் திரும்பி வீட்ட போவமோ, இல்லையென்றால் சற்று நேரம் நின்று பார்ப்பமோ என்று சின்னம்மாவின் மனம் அலைஞ்சுது. நான் இந்தப் பாதையால்போய் கனநாள்தானே? அதுதான் எனக்கு சங்கடமாய் இருக்குது. இனி என்ன செய்வது? நான் வந்தது கஷ்ட காலம் போல. நான் போய்ச் சேருவதற்கிடையிலேயே எத்தனை தடங்கள் வந்திட்டுது. என்ர காரியம்நிறைவேறாது போலும். இவ்வாறு சின்னம்மாவின் மனதில் பல கேள்விகள் வந்து வந்து மறைகின்றன. அதில நின்ற உருவம் என்னைக் கண்டுவிட்டது போல. கையைக்காட்டிக் கூப்பிடுது. சின்னம்மா தயங்கித் தயங்கி கைகளை உயர்த்திக் கொண்டு மெல்ல மெல்ல

பணத்தின் மதிப்பு உணக்குத் தெரிய வேண்டுமா? ஒருவரிடம் சென்று கொஞ்சம் கடன் கேட்டுப்பார். -சோபாக்லிஸ்

போனாள். அங்கே நின்ற உருவம் கைகளை விடுமாறு கையை உயர்த்திவிட்டு சைகை காட்டிச்சு. அப்போதுதான் இது எங்கட பிள்ளைகள் எண்டு சின்னம்மா புரிஞ்சுகொண்டாள். சின்னம் மாவின் மனதில் தென்பு ஏற்பட்டது. சின்னம்மாவின் நடையில் வேகம் அதிகரித்தது.

சின்னம்மா அந்த இடத்துக்குக் கிட்டவாக அண்மித்ததும், வாணிலாவும், மதி நிலாவும் போய் சிரிச்சுச் சிரிச்சு வாங்கோ அம்மா வாங்கோஅம்மா என்று கூட்டிக் கொண்டு வந்து ஒரு காய்ந்த குத்தியில் இருத்தினார்கள். அவர் களுக்கு அம்மாவைக் கண்டதும் இனி இல்லையென்ற சந்தோசம். எடி வாணிலா போய்த் தேத்தண்ணி வைச்சுக் கொண்டு வாவன்ரி என்றாள் மதிநிலா. ஓம் அக்கா நான் தேத்தண்ணி வைச்சுக் கொண்டு வாறன் என்றுவிட்டு, அடுத்த காப்பரணுக்குப் போனாள். பிள்ளை கொஞ்சத் தண்ணீர் தாவன் என சின்னம்மா கேட்டாள்.

அம்மா தண்ணி குடிச்சா வயிறு முட்டினால், தேத்தண்ணி குடிக்க மாட்டீங்கள். ஐந்து நிமிடம் பொறுங்கோ. அதுக்கிடேல வாணிலா தேத்தண்ணி கொண்டு வந்திடுவாள் என்றாள் மதிநிலா.

அடுத்த காப்பரணுக்குப் போய் தேத்தண்ணி வைக்கப்போறன் தீப்பெட்டியைத் தாங்கோவன் என வாணிலா கேட்டாள். போராளிகள் வீழ்ந்து வீழ்ந்து சிரித்தார்கள். இப்ப மத்தியானச்சாப்பாடு வாற நேரத்தில, தேத்தண்ணி வைக்கிற துக்கு புதினமாய் வந்து நிற்கிறாய். நான் எங்களுக்கு வைக்கேல்ல. ஒரு அம்மா வந்திருக்கிறா... அவாவுக்குத்தான் தேத்தண்ணி வைக்க வந்திருக்கிறன் என்றாள் வாணிலா. சொன்னதுதான் தாமதம் எல்லாரும் மதிநிலாவின் பொயிசனுக்கு ஓடி வந்தார்கள். சாப்பாட்டை ஈ எப்படி மொய்க்குமோ அதே போல் போராளிகள் அம்மாவைச் சுற்றி வளைத்து நின்றார்கள்.

மதிநிலா தன்னுடைய அம்மாவென்று உணர்ந்து கூட, தன்னை இனம் காட்டிக் கொள்ளாதபடி, அம்மாவிடம் கேள்வியைத் தொடுத்தாள். அம்மாவுக்கு பிள்ளைகள் இல்லையோ? இல்லை மோனை, எனக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கினம். அதில் மூன்று பையன்களும் இரண்டு பெடிச்சிகளும் இருக்கினம். இதில் மூத்த பெடிச்சி போராளி. மிச்சவையள் படிக்கிறாங்கள். ஏனெண அம்மா இந்தக் கொழுத்தும் வெயிலில வந்தனீங்கள். ஒரு பையனைக் கூட்டிக்கொண்டு வந்தால் சைக்கிளில வந்திருப்பீங்களே என்றாள் மதிநிலா. பிள்ளைகள் படிக்கிற நேரத்தில கூட்டிக்கொண்டு திரிந்தால், அவையளின்ர படிப்பைக் குழப்புற மாதிரி இருக்குமல்லோ. தாங்கள் படிக்கேலேயே என்று பிறகு கவலைப்படகூடாது. நாலுபேரோட கதைக்கப் பழக தெரிஞ்சிருக் கோணும். உதுக்கெல்லாம் படிப்புத்தான் முக்கியம். அதோட என்ர பிள்ளைகளின் படிப்பைக் குழப்ப நான் விரும்பேல்ல. அதுதான் நடந்து வந்தனான். எங்க போறீங்கள் அம்மா? எங்கட இடம் கிளிநொச்சி தான். கோதாரி விழுந்த ஆமிக்காரனால அதை விட்டுட்டு, இடம்பெயர்ந்து இரணைமடுவுக்கு கிட்டவாகத்தான் இருக்கிறம். கிளிநொச்சியிலுள்ள வீட்டுக்கு போயிற்றுப் போவமென்று யோசிச்சன். அதுதான் வெளிக்கிட்டு வந்தனான் என்றாள் சின்னம்மா.




அம்மா தேத்தண்ணியைக் குடியுங்கோவன் என்று வாணிலா நீட்டினாள். சின்னம்மா வாங்கிக் குடித்தாள். அம்மா இண்டைக்கு சாப்பிடாமல் போகேலாது என வாணிலா சொல்ல, இல்லாட்டி நாங்கள் விடத்தானே போறம் எனப் போராளிகள் சொன்னார்கள். சீ நான் போயிற்று நேரத்துக்கு வாறன் என்றனான் என்று சின்னம்மா கூற கொஞ்ச நேரம் இருந்தீங்கள் என்றால், அம்மா மதியச் சாப்பாடு வந்திடும். சாப்பிட்டுப் போகலாம் என்றாள் வாணிலா. இதைக்கேட்ட அம்மா, உங்கடவிருப்பத்துக்கு நின்று சாப்பிட்டுப் போறன் என ஓம் என்றாள். அதோட நின்று விடாமல் வினாவைத் தொடுத்தாள் வாணிலா. அம்மா உங்களுக்கு கணவர் இல்லையோ? அவர் வந்து பாத்திட்டுப் போகலாமே என்றாள். என்ர கணவர் இருந்தவர்தான். இடம்பெயர்ந்து போனபிறகு வீட்டுத் தேவைக்கு பாவிக்க வேண்டிய பொருட்களை எடுத்துவரப்போனவர். திரும்பி வரேல்ல. ஆமிக்காறன்கள் பிடிச்சு சுட்டிருப்பாங்கள் என்று எண்ணுறம். இது நியாயமாகவே இருக்குமென நம்புறம், என்றாள் சின்னம்மா. இதைச் சொன்னதும், சின்னம்மாவின் கண்ணில் இருந்து பொலு பொலுவென கண்ணீர் சொரிந்தது. போராளிகளின் கண்கள் கலங்கியதும் கண்ணீர் வராதபடி சமாளித்து ஆவேசம் கொண்டனர். அம்மா அழதையுங்கோ. அவங்களை எங்கட பிரதேசத் துக்குள்ள விட்டு வைக்கமாட்டம். அவர்களை சில நேரம் சுட்டிருக்க மாட்டாங்கள் என்று கூறி ஆறுதல்படுத்தினாள் மதிநிலா. மதிநிலா வைத்திருந்த கைக் குட்டையால் கண்ணீரைத் துடைத்தாள்.

மதிய உணவு வந்துவிட்டது. உடனே சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு வந்து அம்மாவிடம் கொடுத்தாள் வினோதினி. சாப்பாடைப்போட்டுக்கொண்டு வந்து என்னோடு சாப்பிடுங்கோவன் என்றாள் சின்னம்மா. நீங்கள் சாப்பிடுங்கோ அம்மா. நாங்கள் பிறகு சாப்பிடுறம் என்றாள் வாணிலா. நீங்கள் சாப்பிட்டால் நாங்கள் சாப்பிட்டமாதிரி என்றாள் வினோதினி. ஒரு பாசல் சாப்பாடு காணாமல் இருந்ததால், சாக்குப் போக்குச்சொல்லி அம்மாவை சமாளித்து விட்டார்கள். இதைச் சின்னம்மா தெரிந்தி ருக்க மாட்டாள். சாப்பிட்டு விட்டதும், என்ர மகளைக் கண்டால் கேட்ட தெண்டு சொல்லி விடுங்கோ என்று விட்டு, நடையைத்தொடர்ந்தாள். வந்த உணவை பங்கிட்டுச் சாப்பிட்டனர் போராளிகள். சின்னம மாவின் சோகக் கதையை ஒருவருக் கொருவர் பகிர்ந்தனர். இவங்கள் ஒருவரை யும் விட்டு வைக்கக் கூடாது. பூண்டோடு அழிக்க வேண்டு மென்றாள் மதிநிலா. இதுதான் என்ர அம்மா என்றாள் மதிநிலா. அந்த அம்மா கேட்க சத்தம் போடாமல் ஏன்ரி இருந்தனி சொல்லி இருக்கலாம் தானே? நான் தான் உங்கட மகள் எண்டு. தன்ர மகளில எவ்வளவு பாசம் வைத்திருந்தவா. உன்னைக் கண்டதும் சந்தோசமாய் இருந்திருக்கும் என்றாள் வினோதினி.

நான் சொன்னால் சண்டேல மகள் நிற்கிறாள் என்று கவலையாய் இருக்கும். அதைப் பெற்றவங்கள் சோகத்தை வெளியில சொல்லாட்டியும் மனதுக்குள் வேதனையாய்த்தான் இருக்கும். மறுபடியும் நான் நிற்கும் இடத்தை காட்டிக்கொடுத்தால் பிறகு தெரியும்தானே? ஒரே என்னைப் பார்க்க வருவார்கள். மற்ற போராளிகளுக்கு தங்களுடைய அம்மாவைப் பார்க்க வேணும் போல் தோன்றும். இப்படியாக எல்லாரும் போயிற்றால் எல்லையில் யார் காவல் பாப்பது என்று அறிவுரைகள் வழங்கினாள் மதிநிலா. வாணிலா அதுக்கு சரிதான் என்றாள்.

சின்னம்மா வீட்ட போய் அடைந்தாள். வீடு வெறுச்சோடி பாழடைந்து போய்க்கிடந்தது. சின்னம்மா நாலு புறமும் சுற்றிப் பார்த்துவிட்டு, நிலத்தையும் பார்த்தாள். முற்றத்தில் சப்பாத்துக் கால்களின் அடையாளம் அழிந்துபோய்க்கிடந்தது. ஓ...ஓ... ஆமிக்காரன் வந்திருக்க வேண்டுமென்று சின்னம்மா புரிந்துகொண்டாள். சின்னம்மா வீட்டுக்குள்ளேயே நுழைந்தாள். அங்கே கதவுகள் எல்லாம் உடைந்தபடியும், யன்னல்கள் திறந்தபடியும் இருந்தன. வீட்டின் பின் பக்கத்தில் உள்ள பலா மரம் காய்ந்திருந்தது. அதைப் பிடுங்கிக்கொண்டு போய் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம். என்றவாறு சின்னம்மா பார்க்கச் சென்றாள். ஒரு உருவம் கோடு போட்ட நீலச்சேட்டும், மண்ணி றமான கிப் சரமும் போட்டிருந்தபடி, பாலா மரத்தில் சாய்ந்தபடியே இருந்தது. அதைக்கண்ட சின்னம்மா மயங்கிக் கீழே வீழ்ந்தாள். சினம்மாவின் கணவர் அதே உடையோடுதான் போயிருந்தார். அந்த உருவம் சின்னம்மாவின் கணவர்தான். சின்னம்மா நினைத்திருந்தபடியே நிஜமாகப்போனது.

□□



எழுதியவர்
அன்னா அக்மதோவா

மொழிபெயர்ப்பு
அ.யேசுராசா

## பிரிதல்

மாலை,
சரிவான பாதை என்முன்னால்.
நேற்றுத்தான்,
"என்னை மறவாதே " என
காதலோடு அவன், வேண்டினான்.
இன்று வெறும் காற்றும்,
இடையனின் அழு குரலும் மட்டும்.
தூய ஊற்றினருகில்,
'செடார்' மரங்கள் அலைப்புறுகின்றன.

## மாலையில்

தோட்டத்தின் இசையில்
வெளிப்படுத்த முடியாத் துயரம்.
தட்டின்மேல் ஐஸ்கட்டியில்
'மட்டிச்சதை'யின் கூர்மையான கடல் மணம்.
புதுமையுடன் மணக்கிறது.

'நான் உண்மையான நண்பன்' என
அவன் எனக்குச் சொன்னான்:
எனது உடைகளையும் தொட்டான்
அவனது கரங்களில்
எந்த, உணர்ச்சியுமில்லை.

அது, பூனையையோ ஒரு பறவையையோ
தொடுவதனைப் போல....
செம்மையாய் அமைந்த குதிரையின் முதுகில்,
சாவாரி செய்வோனைப் பார்ப்பதனைப் போல....
மெல்லிய பொன்னிற இமையின் கீழே,
அவனது
கண்களில் மட்டும் ஒளி.

பரவும் புகையின் மேல்
வயலினின் துயர இசை, எழும்புகிறது:
கடவுளுக்கு நன்றி சொல்:
முதற் தடவையாக
உன்,
காதலுடன் நீ தனியாக.

## காட்டில்...


நான்கு வைரங்கள்- நான்கு கண்கள்
இரண்டு ஆந்தையினுடையது, மற்றவை எனது.
எனது காதலன்
இறந்த,
கதையின் முடிவு கொடூரமானது

ஈரலிப்பான, அடர்ந்த புற்றரையில்
நான் படுத்திருந்தேன்:
அர்த்தமற்றெனது சொற்கள் ஒலித்தன.
தானே பெரிய ஆள் போல் பார்த்தபடி
அவதானமாய்,
ஆந்தை அவற்றைக் கேட்டது.

வேர்மரக் கூட்டம் எமைச் சூழ்ந்திருந்தது.
கறுப்புச் சதுரமாய் வானம் எமக்கு மேலே:
உனக்குத் தெரியும் உனக்குத் தெரியும்
அவர்கள் அவரைக் கொன்றார்கள்-
எனது அண்ணன் அவரைக் கொன்றான்.

தனித்ததோர் சண்டையிலல்ல:
யுத்த களத்திலும், சமரிலுமல்ல.
ஆனால்,
வெறிதான காட்டுப்பாதையில்,
எனது காதலன் என்னிடம் வருகையில்....

அவர்கள் அவரைக் கொன்றார்கள்:
எனது அண்ணன் அவரைக் கொன்றான்.



# இளையநாதம்

## குட்டிக்கதை

# லட்சுமி சாட்சி





ஒரு கிராமத்தில் நல்லையன் என்பவர் வாழ்ந்து வந்தார். இவருடன் மனைவியும் கந்தன் என்னும் மகனும் மருமகள் வள்ளியும் வாழ்ந்து வந்தனர்.அவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக நம்பி வாழ்ந்தனர். இவர்கள் இலட்சுமி என்னும் ஒரு மாட்டை வளர்த்து வந்தனர். நல்லையனும் மனைவியும், கந்தனும் தங்களின் தோட்டத்திற்கு சென்றிருந்தனர். மருமகள் வள்ளி அயல் வீட்டுக் குமாருடன் வேலிக்கரையில் நின்று கதைத்துக் கொண்டு நின்றாள். அப்பொழுது மாட்டுத் தொழுவத்தில் நின்ற இலட்சுமி மாட்டைப் பார்த்தாள் அது தலையை ஆட்டியது. தான் குமாருடன் கதைத்ததை மாடு கண்டு விட்டது. உடன் இலட்சுமி மாட்டை தடவி கும்பிட்டாள், அழுதாள் இதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று. அப்பொழுது அவளின் கணவன் கந்தன் வந்தான். கணவன் வருவதைக்கண்ட வள்ளி மாடு கணவரிடம் சொன்னால் வீண் பிரச்சினை வரும் அதற்கு முதல் நானே சொல்ல வேண்டும் என்று கணவரிடம் சொன்னாள்.

கந்தனும் வள்ளியும் மாட்டின் கால்கள் இரண்டையும் பிடித்து கெஞ்சினார்கள் இதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றும் மாடு மீண்டும் தலையை ஆட்டியது. அப்பொழுது நல்லையனும் அவன் மனைவியும் வந்தார்கள். அவர்கள் வருவதைக் கண்ட கந்தனும், வள்ளியும் மாடு அம்மா அப்பாவிடம் சொன்னால் இவர்கள் எங்களை என்ன நினைப்பார்கள் மாடு சொல்வதற்கு முதல் நாங்களே சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். இதைக் கேட்ட நல்லையன் மாடு வெளியில் யாருக்காவது சொன்னால் எங்கள் குடும்ப கௌரவம் என்ன ஆவது என நினைத்து நால்வரும் மாட்டின் நான்கு கால்களையும் பிடித்து இந்த விசயத்தை யாரிடமும் சொல்லி விடாதே எங்களுடனேயே இருக் கட்டும் என நால்வரும் அழுதார்கள்.

மாடு பயத்தினால் நடுநடுங்கியது தன்னை கொல்லப் போகிறார்கள் என நினைத்து தனது கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடியது. ஊரெல்லாம் சொல்லப் போகிறது அதற்கு முதல் நாம் முரசு அடிப்பவரிடம் விசயத்தைச் சொல்ல வேண்டும் என்று அவரிட்ட விசயத்தை சொன்னார்கள் உடனே முரசு அடிப்பவன் டும்,டும்,டும்,டும்,டும் அன்பார்ந்தவர்களே எமது கிராமத்தில் வசிக்கின்ற நல்லையனின் மருமகள் வள்ளி, அவர்களின் அயல் வீட்டுக் குமாருடன் வேலிக்கரையில் நின்று கதைத்ததை அவர்களின் வளர்ப்பு மாடு கண்டு விட்டது. அந்த மாடு ஊரெல்லாம் சொல்ல வருகின்றது இதை நம்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் டும், டும், டும்,டும்,டும். ♦

(நா.ஜீவன் கீரிமலை)

# வாரம் ஒரு குறள் அறிவோம்



நாம் துன்பப்படும்போது எமக்கு அடுத்தவர் உதவி செய்வார். அவற்றை நாம் மறந்து விடுதல் கூடாது. அப்படி மறந்தால் அது நியாயமாகுமா? நாம் ஒருவருக்கு உதவி செய்ததை அவர் மறந்து நடந்தால் எங்களுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். அதுபோல அடுத்தவர் எங்களுக்குச் செய்த உதவி களை மறக்காமல் நடக்கப்பழக வேண்டும். அப்பொழுதுதான் அவர்களும் சந்தோசமடைவார்கள். அதனால் நாங்களும் நிறைவடையலாம். ஒருவர் எமக்குச் செய்த உதவி சிறியதாக இருக்கலாம். ஆனால், நாம் அதனை பெரிதாக மதிக்க வேண்டும். அதுதான் எமக்குப் பயன்பட்டது என்பதற்கு அறிகுறி. இதனையே உணர்த்தப் புறப்பட்ட திருவள்ளுவர் தமது குறப்பாவில்,

"திணைத்துணை நன்றி செய்யினும்
பனைத் துணையாக்கொள்வர் பயன்தெரிவார்"

என்று அழகாகச் சொல்லியுள்ளார்.

# ரதனும் சுதனும்



ரதன்: மற்ற வண்டுகள் எல்லாம் தேனை உறிஞ்சி சாப்பிடும் போது தேனீக்கள் மட்டும் சேமித்து வைப்பதேன்.

சுதன்: தேனீக்கள் மற்ற வண்டுகளைப் போல தனித்து வாழ்பவை அல்ல. இவை சமூக வாழ்க்கையை மேற் கொண்டுள்ள தனிச்சிறப்பு மிக்க பூச்சியினமாகும். பணித்தேனீக்களும் தேனை எடுத்துவரச் செல்வதில்லை. இவற்றில் பெரும்பாலானவை கூட்டினைப் பராமரித்தல், லார்வாக்களைப் பேணுதல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றன. மீதமுள்ள பணித்தேனீக்கள் தேனை எடுத்துவரச் செல்கின்றன.

ஒரு சாதாரண வண்டு அதன் வயிற்றுக்கு மட்டும் தான் தேனை உணவாக எடுத்துக் கொள்கின்றன.


ஆனால் பணித்தேனீக்கள் கூட்டிலுள்ள அனைத்துத் தேனீக்களுக்குமே உணவைக் கொடுக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. தேனீக்களின் சமூக வாழ்க்கையிலும் பணித்தேனீக்கள் மட்டும்தான் உழைக்கின்றன.

# கண்டுபிடியுங்கள்

இந்தத் தீபாவளி வாழ்த்து அட்டையில் எத்தனை பூக்கள் உள்ளன என்று கூறுங்கள், பார்ப்போம்!




# விமானங்கரை விளக்கு



கடற்கரையில் கப்பல்களுக்கு வழிகாட்ட கலங்கரை விளக்கம் இருப்பது போல, ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் விமானங்களுக்கு இரவில் விமான நிலையங்கள் உள்ள இடத்தைக் காட்டவும், விமானம் தரையிறங்க வேண்டிய இடத்தைச் சுட்டிக்காட்டவும், விமானம் செல்ல வேண்டிய வழி காட்டவும், விமானம் பறக்கக் கூடாத இடங்களை எச்சரிக்கை செய்யவும் விமான நிலையத்தின் மிக உயரமான இடத்தில் சுழலும் விளக்கை அமைத்திருப்பார்கள். இதற்கு விமானங்கரை விளக்கு என்று பெயர். ஒவ்வொரு விமான நிலையத்திலிருந்தும் ஒரு குறிப்பிட்ட நிறத்தில் ஒளி அனுப்பப்படும். அதைப் பார்த்தே விமானிகள் எந்த விமான நிலையம் என்று தெரிந்து கொள்வார்கள். ●

# விரும்பிப்பாடுவோம்...



தம்பி நட்ட சிறுவிதை
சிறகு விரித்து வளர்ந்தது
வளரும்போது ஆட்டுக்குட்டி
அதனைக் கடித்துச் சுவைத்தது

தம்பி மனதில் கவலையால்
சுற்றி வேலி அடைத்திட்டான்

மெல்ல மெல்லப் பயிரது
மேலும் ஓங்கி வளர்ந்தது
ஆட்டுக்கொட்டாத் தூரத்தில்
அழகாய்க் குருத்து விட்டது
கிளைகள் விட்டுப் பூத்தது
குலை குலையாய்க் காய்த்தது
காய்களெல்லாம் கனியுமாம்
கனிகளெல்லாம் இனிக்குமாம்
வீட்டிலுள்ளோர் யாவரும்
விரும்பி அதை உண்ணலாம்

தரம்-10,
மா.கிருபாகினி,
மெதடிஸ்த பெண்கள் -கல்லூரி
பருத்தித்துறை

# அறிந்தவற்றில் சில தகவல்கள்.


| | |
|---|---|
| இந்து சமுத்திரத்தின் முத்து | - இலங்கை |
| ஐரோப்பியாவின் நோயாளி | - துருக்கி |
| சூரிய உதய நாடு | - நோர்வே |
| புதிய பூமி | - பாலஸ்தீனம் |
| அழியா நகரம் | - உரோமாபுரி |
| புனித நாடு | - பாலஸ்தீனம் |
| ஆயிரம் வாவி நாடு | - பின்லாந்து |
| அதிகாலை அமைதி நாடு | - கொரியா |
| கங்காரு நாடு | - அவுஸ்திரேலியா |

எஸ்.விதுஷா
வட்டக்கச்சி,

# விடுகதைகள்

(1) தலையை முடித்து கம்பிக் கூட்டுக்குள் வைத்தான் அவன் யார் தெரியுமா?
(1) வித்திலாமல் விளைவது என்ன? வெட்டாமல் சாயுதே அதுதான் என்ன?
(3) போகுமிடமெல்லாம் கோடுகிழிப்பாள் அவள் யார்?
(4) கறுத்திருக்கும் அரங்கமதில் வெண்பருந்து விளையாடுமாம் அது என்ன?
(5) ஒற்றைக்கால் நாராயணன் ஓடையில் மீன் பிடிக்கிறானாம் அவன் யார்?

# மீன்களில்லாத கடல்



மீன்களே இல்லாத கடலைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இருக்கிறது! அதுதான். 'சாக்கடல்' இது இஸ்ரேலுக்கும் ஜோர்டானுக்கும் இடையே அமைந்துள்ளது.

இங்கு அதிகமான அளவு நீர் இருக்கிறது. பின், ஏன் மீன்கள் வாழ முடிவதில்லை? அதற்கு காரணம் நீரில் கரைந்துள்ள அதிகமான அளவு உப்பு தான். கடல் நீரில் சராசரியாக 6% தான் உப்பின் விழுக்காடு என்றால் சாக்கடலில் 25 விழுக்காடு உள்ளது. இதனால் தான் மீன்கள் வாழ முடிவதில்லை. ஓரணுவுள்ள கண்ணுக்குத் தெரியாத உயிர்கள் மட்டும் வாழ்கின்றன.

இக்கடலில் நீந்தலாம். நீந்தத் தெரியாதவர்கள் மல்லாந்து படுத்துக் கொண்டு புத்தகம் கூடப் படிக்கலாம். என்ன? ஆச்சரியமாக இருக்கிறதா! எப்படி தெரியுமா? கடல் நீரை விட அடர்த்தி அதிகமிக்கதால் எளிதில் மிதக்க முடிகிறது. இதன் நீளம் 51மைல். அகலம் 3மைல் முதல் 11மைல் வரை இருக்கிறது.

இதே போல் அமெரிக்காவில் உடா மாநிலத்தில் பெரும் உப்பு ஏரி (Creat salt lake) இருக்கிறது. இங்கு நண்டுகளைத் தவிர மீன்கள் எதுவும் வாழ்வதில்லை. கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள அசால் என்னும் ஏரி இதை விட உப்பு நிறைந்தது.

☞ உண்மைத் தோழன் ஒருவன் எல்லாவற்றிற்கும் மேலான நிச்சயமான மூலதனம் ஆவான். -ஜேர்மன்

# உலகில் தோன்றிய முதன் மொழியும் மாந்தனும்

சி. இனியன்



**மொழி** மனிதனது தொடர்பாடல் ஊடகமாகும். ஆதிமனிதன் தனது தொடர் பாடலுக்காக முதலில் சைகை களையும் பின்னர்தனது வாயினால் ஒலி எழுப்புவதன் மூலமும் தன்னை பிறருக்கு வெளிப் படுத்தினான். இவ்வாறான ஒலி மூலத் தொடர்பாடலானது காலப்போக்கில் வளர்ச்சிபெற்று மனித இனங்களின் மொழியகத்தோற்றம் பெற்றது. உலகில் கிட்டத்தட்ட 4000-5000 மொழிகள் இருப்பதாக ஆய்வுநிலை மொழி நூல்கள் கூறுகின்றன. ஒரு குழந்தை எம்மொழியில் முதன் முதல் சிந்திக்கிறதோ தன் கருத்துக்களை வெளியிடுகிறதோ அதுவே அதன் தாய் மொழியாகும்.

தமிழ் திராவிட மொழிக்குடும்பத்திற்கு உரியது. பழமைக்குப் பழமையாய், புதுமைக்கு புதுமையாய் தமிழ்மொழி விளங்குகின்றது. உலகில் தோன்றிய பலமொழிகள் இறந்துவிட்டன. சில வழக்கிலிருந்து போய் விட்டன. ஆங்கிலம் பிறப்பதற்கு முன்னே பிரெஞ்சு தோன்றுவதற்கு முன்னேதோன்றி வாழும், வளரும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று.

தமிழறிஞர்கள் மட்டுமல்லாமல் ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் தமிழ் இலக்கணம் எழுதியுள்ளனர் வீரமாமுனிவர் என தமிழர்களால் தமிழ்ப் பெயர் சூட்டப்பட்ட, தைரியநாதர் எனத் தன் பெயரை தமிழ்ப்பெயராக்கிய இத்தாலியப் பாதிரியார், பல தமிழ் அகராதிகளையும் இலக்கண நூல்களையும் இயற்றி அருளினார். இதுபோல் ஆங்கிலேயர்களான பலர் எழுதிய இலக்கணங்கள் தமிழ்மொழி வரலாற்றில் குறிப்பிட வேண்டியவை. தேமதுரைத் தமிழோசையை உலகமெல்லாம்பரவும் வகை செய்தல் வேண்டும் எனப் பாரதியார் (1882-1921) கவிதை புனையமுன்னரே ஐரோப்பியர்கள் தமிழரின் புகழை நன்கு பரப்பியுள்ளனர்.

இன்று உலகம் முழுவதிலும் எட்டுக் கோடி தமிழர்கள் பரந்து வாழ்கிறார்கள்.



இன்று உலகம் முழுவதிலும் எட்டுக் கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் தங்கள் மொழியை, நாட்டை, பண்பாட்டை, நாகரீகத்தை மறந்து சிறுகச் சிறுக சிதைந்து அழிந்து விடுகின்னர்.

இவர்கள் தங்கள் மொழியை, நாட்டை, பண்பாட்டை, நாகரீகத்தை மறந்து சிறுகச் சிறுக சிதைந்து அழிந்து விடுகின்றனர்.

ஓர் இனத்தின் உயிர் அதன் மொழியே. மொழியே இனத்தை அடையாளம் காட்டி நிற்கிறது. இதைப் புரிந்துகொண்ட பிரான்சு அரசு பிரஞ்சுமொழிச் சொல் இருக்கிறபோது வேற்றுமொழிச்சொல்லை நாட்டில் பயன்படுத்துவது ஒறுப்புக்குரிய குற்றமென நாடாளுமன்றத்தில் சட்டமியற்றியிருக்கின்றது. மொழி பண்பாடு, வரலாறு, ஆள்புலம், பொருண்மியம் ஆகியவற்றைக் கொண்டிருந்தால் அது ஒரு தேசிய இனம் எனப்படும். ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்னாட்சியுரிமையுண்டு.

பண்டைய அமெரிக்காவின் பழங்குடிகளான ஒரு செவ்விந்தியரின் அழிவிற் கட்டியெழுப்பப்பட்ட இன்றைய அமெரிக்கா, உலகம்முழுவதையுமே அடிமைகொள்ள முந்துகின்றது. அவுஸ்திரேலியாவின் அன்றைய ஆதிக்குடிகளை அழித்து உருவாக்கப்பட்டுள்ளது. பண்டைக்குமரியின் தொன்மைக்குடிகளான தமிழரின் சிதைவிற்றான் இன்றைய ஆரியரின் பாகிஸ்தானும், பங்களாதேசம், இந்தியாவின் பெரும்பகுதியும், ஆரியக்கலப்புடைய சிறினங்களாகவும் தோன்றின.

சங்கம் தளைத்த காலத்தில் வாழ்ந்த சான்றோர்களுக்கு ஒரு உலகு தழுவிய பார்வை இருக்கின்றது. மிகவும் மேற்கோள் காட்டப்பட்ட சங்கப்பாடலை எழுதிய கணியன் பூங்குன்றனார் "உலகமே நம்உறவு அதனால் வேற்றுமை என்பது கிடையாது" என்கிறார். மேலும் வெள்ளப்பெருக்கில் அடித்துச்செல்லப்படும் தெப்பம் போன்றுதான் வாழ்க்கை. எனவே, "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்கிறார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பெருந்தன்மையோடு வந்தோரை வெல்லாம்வரவேற்று வாழ வைத்து "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று வாழ்ந்ததாலன்றோ வீழ்ந்து போனது தமிழினம்.

மக்களால் உண்டாக்கப்பட்டது. மொழி, மக்களால் வளர்க்கப்படுவது மொழி. மொழியியல் அறிவு ஒரு மனிதன் தன்னைத்தானே உணரத் துணை செய்கின்றது. உலகத்தைப் புரிந்துகொள்ள வழிசெய்கிறது. மொத்தத்தில் அறியாமையை அகலச் செய்து-அறிவின் அளவை அகலச்செய்கிறது. மொழி.

"கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தே வானொடு முன்தோன்றிய மூத்தகுடி" என்று ஐயராரி தனாராற் புகழ்ந்துரைக் கப்பட்டது. உலக மாந்தரினங்களில் முதலில் தோன்றிய முத்தாயினம் தமிழினமே உலக மொழிகளில் முதல் தோன்றிய தாய்மொழி தமிழ் மொழியே என்னும் உண்மைகள் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னேயே மேலை நாட்டு நிலவியல், உயிரியல், மாந்தரியல், மொழியியல் ஆய்வாளர்களால் புலப்படுத்தப்பட்டுவிட்டன. ஐரோப்பிய மொழியியல் ஆய்வாளர் "மக்சுமூலர்" ஆங்கிலம் உட்பட கிட்டத் தட்ட சிறப்பான நூறு மொழிகளை எடுத்து ஆராய்ந்து அவற்றில் சில ஒருமைப்பாடுகளைக் கண்டு அனைத்து மொழிகளுக்கும் மூல மொழி ஒன்றிருக்க வேண்டும். எனக் கூறினர்.

மேலும் அதை 1840 ஆம் ஆண்டளவில் ஆராய்ந்த மொழியியல் ஆய்வாளர் "கால்டுவெல்" கூறினார். மூலமொழியொன்று இருக்கிறதென்பது உண்மையானால் அம்மூலமொழி தமிழோ அல்லது தமிழிற்கு மிக நெருங்கிய மொழிகளில் ஒன்றாகவே இருக்க முடியும் என்றார். தொடர்ந்து இவற்றை ஆய்வு செய்த மொழியியல் வல்லுநர் "மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் தனது ஆய்வின் மூலம் அம்மூலமொழி தமிழெனவும், உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழே" என்றும் கூறியுள்ளார். தமிழ் மொழியின் சிறப்பு பற்றி "முதற்றாய்மொழி" எனும் புத்தகத்தை இவர் வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

"எல்லோரும் எல்லாமும் எய்துகின்ற இல்லாமை இல்லாத உலகம் உருவாக வேண்டும்."

என்கின்ற கூற்றுக்கிணங்கத் தோன்றிய உலகமுறை பற்றி அறிவியலாளர்களால் இரண்டு கருதுகோள் வெளியிடப்பட்டுள்ளது. கதிரவன் கோள் ஒன்றுடன் மோதியபோது உடைந்த துண்டொன்று பல்லாயிரம் ஆண்டுகள் காலக்கழிவில் மேலோடு குளிர்ச்சி யடைந்து பூமியாகியது என்பது ஒன்று.

அண்டம் முழுவதிலும் பரந்து சுழன்றுகொண்டிருந்த புழுதிமண்டலம் பல பகுதிகளாகப் பிரிந்து நடுவில் சூரியனாகவும், அதைச் சூழ கோள்களாகவும் திரண்டு இறுகிற்று. இவற்றில் ஒன்றே உலகம் என்பது இரண்டாவது கருத்தாகும்.

இலக்கணமில்லாத எண்ணோடாக் காலத்துக்கு முன்னே இவ்வாறு தோன்றிய புவி பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெய்ததொடர் மழை காரணமாக உலகம் நீரில் மூழ்கிக் கிடந்தது. படிப்படியாகக் குளிர்வடையத் தொடங்கியது. தொடர்ந்து வெள்ளப் பெருக்கு, நிலப்பெயர்வு, எரிமலைக் குமுறல், நிலநடுக்கம், சூறாவளி முதலிய ஐந்து ஞாலக் குழப்பங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நிகழ்ந்து ஈற்றில் நீர் வடிந்து தாழ்நிலங்களில் பனிப்பாறைகளாகவும் உறைந்து இன்றைய உலக ஒழுங்கு உருவானது.

பலகோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரும் கண்டம் ஆபிரிக்காவையும் இந்தியாவையும் இணைத்திருந்தது. மானிடன் அப்போது உலகத்தில் தோன்றவேயில்லை. முதலில் கிளமிடோமெனசு (ஒரு கலத்தாவரம்) அமீபா (ஒரு கலவிலங்கு) ஆகியன தோன்றி தாவரங்களும் நச்சுயிர்களும் யானைகளும், காண்டாமிருகங்களும், பூத ஆமைகளும், லெமூர் என்னும் மூத்த குரங்கினங்களும் குடியிருந்தன. "டார்வின் கூற்றுப்படி மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவனாவான்" என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்துமா கடலின் அடிநிலம் நீரால் மூடப்படாது தென்கோடிவரை விரிந்து பரந்த நிலப்பரப்பாயிருந்தது. இன்னிலம் "லெமூரியா" என்றும் "காண்டுவானா" என்னும் மேலைநாட்டு ஆய்வாளர்களால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழறிஞர்கள் இதன் ஒரு பகுதியை குமரிநாடு என்று வழங்கியுள்ளனர். இது இப்பொழுதுள்ள இந்தியா இலங்கை ஆகியவற்றோடு தெற்கே இந்துமா கடலின் அடிநிலமாகக் கிடக்கும் பெருநிலப்பரப்பாகும் அண்மையில் கடல் ஆழ்வகழ்வு செய்த சோவியத் இரகசிய நிலவியலறிஞர்கள் குமரிமுனையில் நிலப்பரப்பு நீரில் ஆர்ந்ததுக்கு சான்றுகள் உள்ளன என்றும் கண்டறிந்துள்ளனர் இதைக் குமரிக்கண்டம் என்றும் அழைப்பர். இந்நிலப்பரப்பு முன்னர் நிகழ்ந்த மூன்று கடல்கோள்களால் பிரிக்கப்பட்டும், சுருக்கப்பட்டும் இன்றைய தென் ஞாலக் கோலமெய்தியது. இக்கடல் கோள்கள் பற்றி சிலப்பதிகாரம்,கலித்தொகை, களவியலுரை, மணிமேகலை முதலிய கள இலக்கியங்கள் நன்று உரைக்கின்றன.

குமரிக்கண்டதிலேதான் முதல்மாந்தன் தோன்றினான். இந்தியாவின் இமயமலை உட்பட: அவ்விடங்களில் கண்டெடுக்கப்பட்ட கடல்வாழ் உயிரினங்களின் சுவட்டெச்சங்களான சிற்பிகள், ஓடுகள் எலும்புகள் முதலியவற்றின் சான்றுகளின் அடிப்படையில் நோக்கும்போது ஒரு காலத்தில் நீருள் இப்பிரதேசம் மூழ்கிக்கிடந்தன என்றும் அக்காலத்திலே தான் இன்றுள்ள இந்துமா கடலின் அடிநீர் மூடாத பெரும்நிலப்பரப்பாக அதாவது இந்தியா,தென்னாபிரிக்கா-அவுஸ்த்திரேலியா என விரிந்து பரந்து கிடந்ததென்றும் அங்கேயே உயிரினம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுக் காலக்கழிவில் கூர்ப்பினால் (படிவளர்ச்சி) முதல்மாந்தரினம் தோன்றியதென்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இவ்வுண்மையோடு தமிழரின் மொழி, இலக்கியம்பண்பாடு, புதைபொருள்களின் பழைய கற்காலம், முதலான வரலாற்று ஆய்வு முடிவுகளைப் பொருந்த நோக்கும் போது தமிழரும் நீக்கிரோவருமே முதன் மாந்தரினத் தவராவரென்றும் அவருள்ளும், தமிழர் அடைந்த வளர்ச்சியையும் தமிழ் மொழியின் தாய்மைப்பண்பையும் நோக்கும்போது தமிழினமும், தமிழ்மொழியுமே முந்தியவை என்று மேலைநாட்டு ஆய்வாளர்களும் அறிஞர்களும் கண்டறிந்துள்ளனர். இவர்கள் எவரும் தமிழர்கள் இல்லையென்பது கவனத்தில் [illegible]ப்பட வேண்டியதே. "குமரிக்கண்டம்" மனித இனத்தின், உலக நாகரீகத்தின் பண்பாட்டின் தொட்டில் இந்நீருள் மூழ்கிப்போய்விட்டது. இத்தொட்டிலில் பிறந்த தமிழோடு தமிழனும் பெருமைக்குரியவன். ❑

## ஊர்கோலம்

பாதசாரி

### எரிக்கப்பட்ட புல்லாங்குழல்கள்

திடீரென,அந்தபாதையால் போகும் போது எதையோ,மிகவும் முக்கியமான எதையே இழந்து போன ஒரு வெறுமை மனதில் ஏற்படவே செய்கிறது. உடையார் கட்டைத்தாண்டி மூங்கிலாற்றை சந்திக்க முன் வீதியின் இருகரையிலும் ஓங்கி உயர்ந்து,வளைந்து, நிலம் நோக்கி நின்ற அந்த மூங்கில் மரங்கள் எரிந்தழிக்கப்பட்டுவிட்டது.

உடையார் கட்டு சந்தியில் வந்ததுமே தனது கம்பீரஇருப்பைக்காட்டி இயற்கையின் எழிலை ரசிக்கும்எவரது மனத்தையும் வசீகரித்த அந்த மூங்கில் மரங்கள் இருந்த இடம் வெற்றிடமாக-வெறுமையாக, சாம்பல்மேடாக இருக்கிறது. இனி அப்பகுதி 'மூங்கிலாறு' என்று அழகாகக் கூறும் தகைமையை இழந்து விடும் சாம்பலாறு என்று வேண்டுமானால் கூறலாம்.

காய்ந்து கருகி நின்றாலும் என்னையேன் ஒருவரும் கவனிக்காது கைவிட்டிருக்றீர்கள் என மனதுணர்த்தி இயற்கையை காப்பாற்றுங்கள் என்று கெஞ்சி நிற்பதைப் போலும் கூட அது பலவேளைகளில் கோலம் காட்டி நின்றதை நான் உணர்ந்திருக்கிறேன்.இப்படி மூங்கில் மரங்கள் வளர்வதே அரிது. அதனை எவரும் சிந்திக்கவே இல்லை... இடம் பெயர்ந்து வந்த இந்தப்பாதையால் போய்வந்த எனக்கும் அந்தமூங்கில் மரங்களுக்குமான தொடர்புணர்வே இப்படியென்றால் அந்தப் பகுதியிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர்களுக்கு எப்படி இருக்கும்...நினைக்கவே மனதை ஏதோ அழுத்துகிறது.....

இப்போதெல்லாம் அப்பாதையால் போக நேரிடும் அந்த இடத்தை பார்க்கப்போகிறேன் என ஒரு 'துயரம்' மனதை இறுக்குவதை தவிர்க்க முடியாமல் உள்ளது.

### காட்டுக் கிராமத்தின் ஆத்மா

காடும், வயலும், தோட்டமும், துரவும் என ஒரு வித அமைதியில் தனக்கே உரிய இயல்புடன் இயற்கையின் சகல அம்சங்களையும் கொண்ட வன்னியின் நிலப்பகுதிகள், சூரியக்கதிரின் பின்னர் இடம்பெயர்ந்த மக்களின் குடியிருப்பு நிலங்களாக மாறி மக்களின் நடமாட்டம் மிகுந்த 'கிராமிய' நகரங்களாக மாறி ஒரு புதிய வடிவத்தை எடுத்திருந்தன.

எமது மக்களின் விடுதலைப்போராட்டத்தின் வரலாற்றுத் திருப்பங்களின் விளைநிலமான வன்னி மண்ணின் வரலாறு மற்றொரு வடிவத்தை எடுக்கத் தொடங்கியிருக்கிறது.

யாழ்கண்டிவீதி பாதை திறப்பும் சமாதான நகர்வுகளும் இடம்பெயர்ந்த மக்கள் தத்தம் சொந்த ஊர்களை நோக்கிய பயணங்களை மேற்கொள்ளவைக்க இந்தக் குடியிருப்புக்கள் பலவும் கைவிடப்பட்ட நிலையில் கவனிப்பாரின்றி மழையில் கரைந்தும்,வெய்யிலில் வரண்டும் புதர்மண்டிய பகுதிகளாக மாறத் தொடங்கியுள்ளன....

எத்தனையோ நெருக்கடிகளுக்கும் துயரங்களுக்குமிடையில் மக்களுக்கு இருப்பிடமாக பாதுகாத்த இந்த குடியிருப்புக்களின் 'அழிவு' ஒரு சரித்திர சிதைவாகவே தென்படுகின்றன. இதுவும் மனதை பாதிக்கும் விடயம்தான்.

இடம்பெயர்தல் புதிய கிராமங்களை, நகரங்களை, உறவுகளை, கலைகலாச்சாரத் தொடர்புகளை, வாழ்க்கை முறைகளை உருவாக்குகின்றன.... மீள் இடம்பெயர்வுகள் அவற்றைச் சிதைத்தும் விடுகின்றன.

இடம்பெயர்ந்து வந்த மக்கள் குடியிருப்பில், அந்த மக்கள் ஒரு அரசமரத்தின் கீழ் வைரவ சூலம் ஒன்றை வைத்து வழிபட்டு வந்தார்கள். அந்த மக்கள் இப்போது முழுப்பேருமே யாழ்நோக்கிச் சென்றுவிட்டார்கள்.

குற்றுயிரும் குறையுயிருமாக கைவிடப்பட்ட குடிசைகளின் மண்சுவர்கள் பருவ மழையால் கரைந்துபோகத்தொடங்கியிருந்தன. புதர்மண்டத் தொடங்கிய அப்பகுதியில் அந்த அரசடி மட்டும் துப்புரவாக இருந்தது. அந்த முதியவர் வைரவ சூலத்திற்கு செவ்வரத்தம் பூக்களை வைத்தக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

மெல்ல என்னை நோக்கி வந்தவர்... நிமிர்ந்து என்னைப் பார்த்தார். பின் 'என்ன பார்க்கிறாய்... வந்த சனம்கைகாட்டி விட்டுப் போட்டுது.... கடவுளை மட்டும் கைகழுவி விட்டிட்டு.... வைரவர் மட்டும் அரசடியை விட்டுப் போகேல்லை... கடவுளை அநாதையாக விடலாமோ... இப்ப இந்த இடத்துக்கு பெயரே அரசடி வைரவர் கோவிலடியாகிவிட்டது.' என்றார். தொடர்ந்து.... மனிசன் மனிசனைக் கைவிடுவான்.... ஆனால் ஆண்டவன் மனிசனைக் கைவிடமாட்டான், இந்தக் கோயில்களும், பேச்சுக்களும்தான் இந்தக் காட்டுப்பகுதி மக்களின் நம்பிக்கையை இன்னமும் பாதுகாத்துவருகின்றன....! என்றார் அவர்பேசவில்லை... அந்த காட்டுக்கிராமத்தின் ஆத்மாவே பேசுவது போலிருந்தது. ♦♦

பணம் எதனையும் செய்யும் என நம்புபவர்கள் பணத்திற்காக எதனையும் செய்யத்துணிந்து விடுகிறார்கள். -டென்மார்க்



## வெற்றியே எமது இலக்கு

## நம்முடைய திறமையை நாம் மதிக்க வேண்டும்

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால், நம்முடைய திறமையின் மேன்மையை எண்ணி, கற்பனையில் அதற்குத் தகுந்த இடம் கொடுத்து காரியத்தில் இறங்கினால் நிச்சயம் நம்மை வெற்றியின் தாய் அணைத்துக் கொள்வாள்.

நம்மை நாமே மனதில் படம்பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் படம் மனத்தின் ஆழத்தில் புதைந்து இருப்பதனால் இப்படிப்பட்ட படம் நமக்குள் இருப்பது தெரிவதில்லை. சுயஉருவ மனைவியல் (Self Image Psychhology) தான்.

நம்முடைய சுயஉருவப் படத்தில் முக சாடை, நிறம், தோற்றம் என்று ஒவ்வொரு நுணுக்கத்தையும் படம்பிடித்துக் கொள்கிறது. இந்த மன உருவத்துக்குத் தக்கபடி நம்முடைய நடவடிக்கையும் அமையும்.

அழகாய் இருப்பவர்களைப் பார்த்தால் அவர்களிடம் தன்னம்பிக்கை இருப்பது வெளிப்படையாகத் தெரியும். இதற்குக் காரணம்- அவர்களுக்கே தாங்கள் அழகு என்று நன்றாகத் தெரியும்.

அந்த அழகிற்கு எல்லாரும் மயங்குகிறார்கள் என்பதும் தெரியும். அதனால் நாங்கள் கேட்பது சுலபமாகக் கிடைக்கும். தான்செய்வது ஆமோதிக்கப்படும் என்பதும் தெரியும். தன்னுடைய அழகு எல்லாரையும் அடிமைப் படுத்திவிடும் என்று நம்புகிறார்கள்.

நம்முடைய உருவமே நமக்குத் திருப்தி அளிக்காவிட்டால் அதற்குத்தக்கபடி நடவடிக்கைகளும் போக்கும், திருப்தியில்லாமல், கோழையாய் பயமும் தயக்கமும் மிகுந்தவையாய் இருக்கும்.

நம்முமைய வெற்றி-தோல்வி,மகிழ்ச்சி-வேதனை, தன்னம்பிக்கை- தயக்கம் யாவும் நாம் உள்மனத்தின் ஆழத்தில் படம்பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய சுய உருவப்படத்திற்குத் தக்கபடி இருக்கின்றன என்பதைச் சுயஉருவ மனவியல் ஆதார ஆராய்ச்சியாளர்கள் திட்டவட்டமாக நிருபித்திருக்கிறார்கள்.

திருப்தியில்லாத சுயஉருவப்படத்தை திருப்தியான சுய உருவாக உள்மனத்தில் மாற்றிக் கொண்டால் வாழ்க்கையில் வெற்றியும் மகிழ்ச்சியும் ஏற்படும் என்பது திட்டவட்டமான உண்மை.

நம்மை நாமே கெட்டிக்காரன் என்று நினைத்துக்கொண்டால் உள்மனம் அதை மெய்யா பொய்யா என்று ஆராய்ந்து பார்க்காது அப்பிடியே நம்பிவிடும். அதனால் அந்த நினைப்பே மெய் என்று நம்புவதனால் அப்படியே செயல்பட்டுக் கெட்டிக்காரனாக்கி விடுகிறது.

இதேபோல் மாறுபட்டு நினைக்கும்போது-நம்மை நாமே பிரயோசனமில்லாதவன் என்று நினைத்துக்கொண்டால் உள்மனம் அதை அப்படியே நம்பிச் செயல்பட்டு நம்மைப் பிரயோசனமில்லாதவனாக ஆக்கி விடும்.

இதே பாணியில்தான் உள்மனம் எல்லாவிஷயங்களிலும் செயல்படுகிறது. நமக்கு உடம்பு சரியில்லை என்று நினைத்துக் கொண்டால் அதை உண்மை என்று எடுத்துக்கொண்டு அதற்குத் தகுந்தபடி செயல்பட்டு உடம்புக்கு ஏதாவது வந்து படுக்க வைத்து விடுகிறது.

உண்மையில் உடம்புக்குச் சரியில்லாத சமயத்தில் இப்பொழுது படுக்கையில் படுக்க அவசியமில்லை.

அவசரமாக ஊருக்குப் போயாக வேண்டும் என்ற நிலையில் இருந்தால் அதை உள்மனம் அப்படியே உத்தரவாக எடுத்துக் கொண்டு செயல்பட்டு நம் தலைவலியைப் பறந்தோட வைத்து விடுகிறது.

தாய்பாலூட்டும் குழந்தையின் தாய்க்கு அதிகமாக நோய் வராமல் இருப்பதற்குக் காரணம் இந்த உள்மனம்தான். நான் படுத்துவிட்டால் குழந்தை பட்டினி கிடக்க நேரிடுமே என்ற நினைப்பில் படுக்கையில் விழத் தாய் விரும்புவதில்லை.

அந்த விருப்பத்தை உள்மனம் உத்தரவாக எடுத்துக்கொண்டு செயல்பட்டு நோய் வராமல் செய்து விடுகிறது.

உள் மனத்திற்குள் அடங்கியிருக்கும் தானியங்கி யந்திரத்திற்கு உத்தரவிடுவது ஒன்றுதான். ஆனால் முக்கியமாக நாம் செய்ய வேண்டியது, நாம் ஒரு குறிக்கோளுடன் உள்மனத்தில் அடங்கியுள்ள தானியங்கி யந்திரத்திற்கு உத்தரவிட வேண்டும்.

தாயிங்கி யந்திரத்திடம் வேலை வாங்க நம்மிடம் ஒரு குறிக்கோள் இருக்கும்வரை தானியங்கி யந்திரம் உற்சாகமாக வேலை செய்யும், சைக்கிள் ஓடும்போது விழாது. ஓடாமலிருந்தால், ஸ்டாண்ட் போடாமல் இருந்தால், சாய்ந்து விழுந்துவிடும்.

இதேபோல் குறிக்கோள் இருப்பின் வாழ்க்கை உற்சாகமாக இருக்கும். குறிக்கோள் இல்லையென்றால் வாழ்க்கை உற்சாகமாக இருக்காது.

நேற்றுச் செய்த காரியத்தில் ஒரு தப்பு இருக்கிறது. அதனால்தான் காரியம் கெட்டுப் போய் விட்டது. அந்தத்தப்பைக் கண்டு பிடித்து மறுபடியும் தப்பு நேராமல் தவிர்த்துக் காரியம் செய் என்றுதான் அனுபவப் பாடம் எச்சரித்துப் புத்தி கூறுகிறது.

இது சூடுகண்ட பூனைபோல அமைப்புக்கொண்டது.


இவை யாவும் உள் மனதின் ஆழத்தில் சுய உருவப்படமாகப் பதிந்து கிடப்பதால் எந்த ஒரு காரியத்திலும் தன்னம்பிக்கையோடு சுயமாய் தைரியமாய் ஈடுபட்டு வெற்றியடைகிறார்கள்.

இதற்கு நேர்மாறாக அவலட்சணமாயிருப்பவர்களைக் கவனித்தால் அவர்களுக்குத் தங்களின் அவலட்சணம் நன்றாகத் தெரியும்.

தங்களைக் கண்டால் பிறர் முகம் சுழிப்பார்கள். கோபப் படுவார்கள், செய்கிற வேலையில் தப்பு கண்டு பிடிப்பார்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள்.

இந்த எண்ணம்அவர்களுடைய உள்மனத்தின் ஆழத்தில் சுய உருவப்படமாகப் பதிந்து கிடப்பதால் எந்த வொரு காரியத்திலும் பயத்துடனும் தயக்கத்துடனும் ஈடுபடுவதால் தோல்வியடை கிறார்கள்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது நாம் மனதில் படம் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் சுய உருவம் திருப்தி அளித்தால் நம்முடைய போக்கும் நடவடிக் கைகளும் தன்னம்பிக்கையும் தைரியமும் நம்மைத் திறமையுள்ளவராக ஆக்கிவிடும்.



இதற்கு முற்றிலும் மாறுபடும்பொழுது திறமைகள் யாவும் மங்கி மறைந்து விடுகின்றன. அதை எப்படிச் செய்கிறது என்று தெரிந்தால்தான் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

நம்முடைய மூளையும் நரம்பு முடிச்சுக்களும் இரண்டு வகையில் செயல்படுகின்றன. கை தானாகவே நீளுகிறது.

விரல்கள் தானாகவே பேனாவைப் பற்றி எடுக்கின்றன. இவையாவும் தாமாகவே இயங்காவிட்டால் நாம் என்னவெல்லாம் செய்யவேண்டியிருக்கும் என்று ஆராய்ந்தால்-

முதலில் கண்களில் தசைகளுக்கு உத்தரவிட்டுப் பேனாவின் பக்கம் பார்வையைத் திருப்ப வேண்டும். பிறகு கைத்தசைகளுக்கு உத்தரவிட்டு கையை உயர்த்த வேண்டும்.

நரம்பு மண்டலத்துக்கு உத்தரவிட்டு முன்னங்கையை நீட்ட வேண்டும். விரல் நுனியிலுள்ள நரம்பு முடிச்சுக்களுக்கு உத்தரவிட்டுப் பேனாவைக் கெட்டியாகப் பிடித்துத் தூக்கச் சொல்ல வேண்டும்.

இப்படிப்பட்ட அமைப்புக்கள் எல்லாமே. சரியாக நடந்தால்தான் உடல் அசைவு ஏற்பட்டு மனம் எண்ணுவதைச் செயல் வடிவமாக்க முடியும்.

புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் பில்லி ஜீன்கிங் போட்டி தொடங்கும் முன் தனக்குத்தானே பேசி உற்சாகமூட்டிக்கொள்வார். அதன் பயன் ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் இவரே வெற்றிபெற்று வந்தார்.

எதிர்மறையான எண்ணங்கள் தோன்றுவதை 'நிறுத்து' என்று சற்று அதட்டலாக மனதிலிருந்து வாய் மூலம் கூறுவதன் மூலம் நிறுத்திவிட முடியும்.

இறுதியாக மெக்லெல்லண்டின் முடிவு- ''மக்கள் தாங்கள் விரும்பினால் தங்களையே மாற்றிக் கொள்ள முடியும். நம்மிடமே புதுமனிதரை நாம் கண்டுபிடிக்கலாம்.

நம்முடைய செயல் நிலைமை வெற்றி இவற்றை நிர்ணயிக்கும் ஊக்குவிப்புக்களையும் நாம் மாற்றுவதன் மூலம் நாம் யாராக மாற வேண்டுமோ அவசரமாகவே மாறிவிட முடியும்.''

நம்மால் மற்றவர்களைப் போல மாற முடியும் என்றால் நம்மை மாதிரி நாமாகவே இருக்க முடியாதா என்ன?


கட்டாயம் நாம் நாமாக இருக்க முடியும்.

நாம் வாழும் உலகில் ஒரு தடவை மட்டுமே வாழ வாய்ப்பு கிடைத்திருக்கின்றபோது நாம் ஏன் மற்றவர்களைப் போல வாழ வேண்டும்?

✷

**நன்றி- மெர்வின்**

## சிந்திக்க வைத்த சந்திப்பு



மழை மெல்லத் தூறிக்கொண்டிருந்தது. மானுடத்தின் தமிழ் கூடல்-2002 மண்டபம் அப்போதுதான் அன்றைய நிகழ்வு முடிந்து இறுதியில் நாடகம் தொடங்குவதற்காக சிறிய இடைவேளையை போட்டிருந்தது. அப்போது நான் மண்டபத்தை விட்டு வெளியே வந்தேன். மண்டபத்துக்கு வெளியே பேராளர்கள் குழுமிக்குழுமி நின்றார்கள்.

உலகத் தமிழாராட்சி நினைவுத் தூபிக்கருகில் ஒருவர் நல்ல ஈஸ்மன் கலர் சேட்டுடன் நின்றார். அவர் ஒரு பெரும் கவிஞர். தென்பகுதியில் நீண்டகாலமாக வாழ்பவர். அவரின் பெயர் அடிக்கடி இலக்கிய உலகில் பேசப்படுகிறது. அவருடன் கவிதை பற்றிக்கதைக்கவேணும் என்பதற்காக அவருக்கருகில் சென்றேன். இன்னுமொரு படைப்பாளி என்னுடன் வந்தார். அவர் கையிலே "ஆனையிறவுச்சமர்" கவிதைத்தொகுப்பையும் கையிலே வைத்திருந்தார். நான் அந்தப் பெருங்கவிஞருக்கு அவரை அறிமுகம் செய்தேன். பெருங்கவிஞர் சிரித்துக்கொண்டு அந்தக் கவிதைத்தொகுப்பை வாங்கினார். வாங்கும் போது இப்படிச் சொன்னார்.

"கவிதை என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு. அது மொழியை செழுமைப்படுத்துகிறது. வாழ வைக்கிறது. அழகிய தொடர்புகளை உயிர்ப்புள்ள அற்புதமான சித்திரங்களாக அள்ளித்தருகின்ற வித்தையில் கைதேர்ந்தவனே கவிஞன் என்பேன். அவன் அனுபவங்களை உருவகப்படுத்தி வெள்ளை மனதில் விளக்கேற்றி பரவசமடையச் செய்கிறான்."

"சரி மாஸ்ரர் இந்தக்கவிதைகளைப் படிச்சு இந்தக்கவிஞர்களின் ஆளுமைகளை கொஞ்சம் சொல்லுங்களேன்?" என்றேன். அவர் அந்த கவிதைத் தொகுப்பை மோலோட்டமாகப் பார்த்துவிட்டு.

"பரவாயில்லை எழுதுறாங்கள்" என்றார். அவரின் சொற்கள் உள்ளத்திலிருந்து ஆத்மசுத்தியுடன் வரவில்லை.

இவைகள் எல்லாம் போரைத்தானே சொல்கிறது. துயரைத்தானே சொல்கிறது. போரையும் துயரையும் விட்டு வெளியிலையும் வரவேணும். எங்கள் சந்தோசங்களையும் பாடவேண்டும் என்றார் என்னுடன் நின்ற படைப்பாளிக்கு அவர் கூறியது விளங்கவில்லை. அவர் ஆரம்ப படைப்பாளி என்றபடியால் தனது விளங்காமையை கேட்டார். அவரிடம் தெரியாதவைகளை அறியும் ஆவல் நிறைய இருக்கின்றது. அந்தப்பெருங்கவிஞர் கூறினார்.

கைதடிப் பாலத்துக்கு இஞ்சாலை வரேக்கை அந்த வெளியைப் பார்த்திருப்பியள். மாடுகள் மேய்ந்து கொண்டு நின்றன. மேலால குருவிகள் பறந்து கொண்டிருந்தன. அங்கால சிறிய நீரேரி - அதுகளைப் பார்க்கவே நிறையக் கவிதைகள் வருகிறதல்லவா- அந்தப் பறவைகளின் மகிழ்வை... மாடுகளின் குதூகலங்களை

எங்கள் மனதில் எழுகிற எண்ண அலைகளே ஒரு மகிழ்வான கவிதையல்லவா...?என்னுடன் நின்ற சக படைப்பாளி அவரையே பார்த்துக்கொண்டு நின்றார் அந்தப் பெருங்கவிஞர் கூறியது போல நாம் ஒரு மகிழ்காலத்துக்குள்ளா வாழ்ந்தோம். துன்பத்திலும் துயரிலும் தோய்ந்த வாழ்க்கையில் எழும்கவிதைகள் துயர்களைப் பாடாமல் இழப்புக்களைப் பாடாமல், பிரிவுகளைப் பாடாமல் எப்படி மகிழ்வைப் பாடமுடியும்.

எங்கள் படைப்பாளிகளை இந்தத் துயர் தோய்ந்த வாழ்வில் இருந்து இந்தப் போர்ச்சூழலிலிருந்து அந்நியப்படுத்துவதற்காகத்தானா அந்தப் பெருங்கவிஞர் அப்படிக் கூறினார். ஒரு நண்பர் சொன்னார் ஏ-09நெடுஞ்சாலை திறந்து விடப்பட்டதும் தான் தென்பகுதிக்குச் சென்றதாகவும் நிறையப்படைப்பாளிகளுடன் கதைத்ததென்றும் அந்தப் பெரும் கவிஞருடன் கதைத்ததாகவும் கூறினார்.

அந்தப் பெரும் கவிஞர் தனது உற்றார் உறவினர்களை விசாரித்ததாகவும்' இந்த மக்களை இந்த வாழ்வியலைப்பற்றி எதுவும் கதைக்கவில்லை என்றும்- ஆனால் அவரின் கவிதைகள். எங்களின் வாழ்வை, எங்களின் துயரை, பிரிவை எல்லாம் நிறையப் பாடியிருந்தன.

குறித்த நாடகம் தொடங்குவதாக மண்டபத்திலிருந்து ஒலிபெருக்கி அறிவித்தது.

"சரி தம்பி- நீங்கள் கருத்தரங்குகள் ஏதும் உங்கள் பகுதியில் வைத்தால் நான் வந்து கலந்துகொள்கிறேன். ஒரு படைப்பாளி தான் எழுதுவதைவிட ஏனைய பிற படைப்பாளிகளுடன் கதைப்பதனால் தான் அவனின் படைப்பில் ஒரு வீச்சிருக்கும்," என்றார்.

அவர் எங்கள் படைப்பாளிகளுக்கு எதைச் சொல்லப்போகிறார்? இல்லை எதை விதைக்க முயல்கிறார்....?

▲▲

**கருணைரவி**

# வாழ்க்கையில் தென்றல் வீச தென்றல் ஓய்வகம்

வன்னிக்கு வருகை தரும்
விருந்தினர்களினதும், சுற்றுலாப்
பயணிகளினதும் தேவை கருதி
வன்னியின் வாசலில் எழுகின்றது..!..!

## தென்றல் ஓய்வகம்
## THENRAL RESTAURANT

குறைந்த கட்டணத்தில்
நிறைந்த பயன்
பெற வாரீர்

### ஓய்வகத்தில் உங்களுக்காக

**தங்குமிட ஏற்பாடுகள்**
- தனியான படுக்கை அறைகளுடன் - இணைந்த குளியலறைகள்
- பொதுப்படுக்கை அறைகள்
- பொதுக்குளியலறைகள்
- படுக்கையறையுடன் இணைந்த குடிவகைப் பகுதி

**குடிவகை விற்பனைப் பகுதி**
- மேனாட்டுக் குடிவகைகள்
- உள்நாட்டுக் குடிவகைகள்
- சிற்றுண்டி வகைகள்
- குளிரூட்டப்பட்ட மென்பருகைகள்

**தென்றல் உணவகம்**
- மேனாட்டு உணவுவகைகள்
- சிக்கின் புரியாணி
- நூடில்ஸ்
- சிக்கின்சூப் உட்பட

இன்னும்பல...


31-10-2002 முதல் தென்றல் வீசும்

**தென்றல் ஓய்வகம்**

THENRAL RESTAURANT

A-9 சாலை (2566) புளியங்குளம்


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 06 – 07 – 1975

வீரச்சாவு 02 – 11 – 1999

**கப்டன் சிவதாஸ்(விசாகன்)**

(லோகேந்திரராஜா முகுந்தன்)

ஈழ விடிவிற்காய்
வித்தாகிப் போனவனே!
ஓயாத உன் உணர்வுகள்
அலையென பொங்கியதைக் கண்டோம்!
சாயாத உன் வீரம்
சரித்திரம் படைத்திடக் கண்டோம்!
ஓயாத அலை மூன்றின்
உன் தேகம் சரிந்திடக் கண்டோம்!
மாவீரர் வரிசையில் உன்
நாமம் பொறித்திடக் கண்டோம்!
ஆனாலும்..........!
ஆறாத உன் நினைவை
ஆற்றிட வழி கண்டிலோம்...!

என்றும் நீங்காத
உன் நினைவுடன்
போராளிகள்~ கலைக்குமார், சீர்மாறன், பிரபு, சதீஸ்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (2154)

## வாழ்த்துகிறார்கள்



அகில இலங்கை மட்டத்திலான பாடசாலைக்கான தேசிய விளையாட்டுப் போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான குண்டு தள்ளுதல் போட்டியில் வெண்கலப் பதக்கமும், ஈட்டி எறிதலில் 5வது இடத்தைப் பெற்றவருமான கிளி /அக்கராயன் மகாவித்தியாலய மாணவி சீ.தாரணியை அப்பா, அம்மா, அக்கான்ரை அப்பா, அம்மா, சுவிஸ் சித்தப்பா, சித்தி, கிளி சித்தப்பா, சித்தி, ஜேர்மன் செல்வச்சித்தப்பா, சித்தி, மாமாமார், அத்தைமார், அத்தான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அம்மம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் வாழ்த்துகிறார்கள். இவரது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள் .

(2555) குடும்பத்தினர்


# விவசாயிகளுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி...

(2555)

தரமான பசளைகளுக்கு இலங்கையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சி.ஐ.சி உரத்தையே நாடுங்கள்!

கனனி தொழில் நுட்பத்தில், ஆய்வு கூடத்தில் தரம் உறுதி செய்யப்பட்ட,
சமநிலை போசனைப் பதார்த்த கலவையானது-

**சி.ஐ.சி உரம் மட்டுமே!**

நெற்பயிரின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும், அமோக விளைச்சலுக்கும் பாவியுங்கள்.

**சி.ஐ.சி சுப்பர் பேசல்**
**CIC வீ. மிக்சர்**

(அடிக்கட்டுப் பசளையை)




சி.ஐ.சி பேர்டிலைசர் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.205 டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10

*சி.ஐ.சி பயிர்ச்செய்கைத் திட்டம் – புதிய தொழில் நுட்பத்தின் முன்னோடி.*

(2556)


நாம் செல்வந்தரை வணங்குகின்றோம்: வறியவரிடமிருந்து பறிந்துக் கொள்ளுகிறோம். -ஜேர்மன்

# ஒரு மானின் கதையும் மனிதனின் வரலாறும்...



1812ம் வருடம் கோடை காலம். ரஷ்சியப் படைகள் ஒவ்வொரு கிலோமீற்றர் தூரமாக விட்டுக்கொடுத்தன, பின்வாங்கின. இரண்டு ரஷ்ய படைப்பிரிவுகள் யுத்தத்தில் ஈடுப்பட்டிருந்தன. பார்க்லாய் என்ற தளபதி தலைமை தாங்கிய படைகள் முதலில் வில்னியஸ்க்கும் பின் அங்கிருந்து டிரிங்காவுக்கு பின்வாங்கியது. பரக்தியோன் என்ற தளபதி வழிநடத்திய படைகள் கிரோட்னாவுக்கும் அங்கிருந்து போப்டுயிற்கும் பின்வாங்கின.

பார்க்லாய், பரக்தியோன் ஆகிய இரண்டு தளபதிகளுடைய படைகளையும் போல மும்மடங்கு அதிக எண்ணிக்கையைக் கொண்டிருந்தன நெப்போலியனின் படைகள். ரஷ்சியப் படைகள் ஒன்று சேர முடியாதபடி பிரெஞ்சுக்காரர்கள் தடுத்தனர். ஏனென்றால் இரண்டு ரஷ்சியப் படைகளையும் தனித்தனியாக அழித்துவிடுவதற்கு அவர்கள் விரும்பினார்கள்.

எதிரியின் தாக்குதலை எதிர்க்கும் அளவுக்கு போதுமான பலம் ரஷ்சியப் படைகளிடம் அந்த சமயத்தில் இல்லை என்பதை இரு தளபதிகளும் உணர்ந்திருந்தார்கள். எனவே தங்கள் படைகளை பின்வாங்குமாறு செய்து பலத்தைப்பாதுகாத்துக் கொண்டார்கள்.

"கடவுளே! தளபதிகள் நம்மிடம் கதை சொல்லுகிறார்களா?" என்று படைவீரர்கள் பேசிக் கொண்டார்கள்.

"படைவீரர்கள் என்ற முறையில் நம்முடைய கௌரவத்துக்கே இது இழுக்கு."

மற்றவர்களோடு சேர்ந்து நடந்து வந்து கொண்டிருந்த ஒரு வயோதிப கோப்ரல் தன்னுடைய தோழர்களை உற்றுப் பார்த்தார்.

"நான் ஒரு கதை சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்."

அடுத்த தங்குமிடத்துக்கு வந்ததும் படைவீரர்கள் அவரைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள். அங்கே அமைதி நிலவியது.

"இது வெகுகாலத்துக்கு முன்பு நடந்திருக்க வேண்டும். அது நடந்ததா இல்லையா என்பது முக்கியமல்ல" என்று கோப்ரல் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். "எப்பொழுதோ ஒரு சந்தர்ப் பத்தில், காட்டில் பழுப்பு நிறம் கொண்ட ஒரு ஓநாய் காட்டு மான்குட்டியைச் சந்தித்தது. அதற்கு ஒரு வயதுதான் ஆகியிருக்கும்.

"மான்குட்டியே! மான்குட்டியே! நான் உன்னைச் சாப்பிடப்போகிறேன்" என்றது ஓநாய்.

"பழுப்பு ஓநாயே! கொஞ்சம் பொறு. நான் இப்பொழுது தானே பிறந்திருக்கிறேன். முதலில் என் உடல் சற்றுப் பருமனாகட்டும்."

அந்தக் காட்டு ஓநாய் ஒத்துக் கொண்டது. கொஞ்ச நாளைக்கு விட்டு வைப்போம், அதன் எலும்புகளில் சதை வைக்கட்டும் என்று நினைத்தது.

"எவ்வளவு காலம் விட்டு வைத்தது என்பது உண்மையில் முக்கியமல்ல. மறுபடியும் ஒரு நாள் அந்த ஓநாய் மான் குட்டியைச் சந்தித்தது. அதை உற்றுப் பார்த்தது. இதற்கிடையில் மான் குட்டியின் உடல் கொஞ்சம் பருத்திருந்தது. அதன் கொம்புகள் முளைக்க ஆரம்பித்து லேசாக வெளியே தெரிந்தன. அதற்குக் குளம்புகள் ஏற்பட்டிருந்தன. இப்பொழுது அந்த ஓநாய்க்கு முன்னால் நின்று கொண்டிருந்தது மான் குட்டியல்ல - ஓரளவுக்கு வளர்ச்சியடைந்திருந்த காட்டு மான். ஓநாய் நாக்கை சப்பியது.

" காட்டு மானே! காட்டு மானே! நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்."

" ஓநாயாரே! அதற்கென்ன. என்னுடைய தாய் நாட்டிலிருந்து விடைபெற்றுக் கொள்வதற்கு மட்டும் எனக்கு சிறிது அவகாசம் கொடு" என்று அது கேட்டது.

" சரி விடை பெற்றுக் கொண்டுவா" என்று ஓநாய் அனுமதி கொடுத்தது.

"அந்த இளம் காட்டு மான் தன்னுடைய தாய் நாட்டின் வயல்களிலும் காடுகளிலும் ஓக் மரத் தோப்புக்களிலும் அலைந்து திரிந்தது. சொந்த நாட்டைச் சுற்றிவந்த பொழுது அதன் உடலிலும் பலம் அதிகரித்தது. ஓநாயும் அதைப் பின் தொடர்ந்தது. அலைச்சலைத் தாங்க முடியாமல் ஓநாய் பலவீனமடைந்தது; அதன் உரோமம் உதிரத் தொடங்கியது; நாக்கு தாடைகளின் மீது தொங்கியது; எலும்புகள் வெளியே துருத்தின.

" போதும். நிறுத்து" என்று ஓநாய் உத்தரவிட்டது.


அதற்குப் பிறகு எவ்வளவு காலமாயிற்று என்பது உண்மையில் முக்கியமல்ல. கடைசியில் அந்தக் காட்டு மான் ஒரு இடத்தில் நின்றது. ஓநாயைச் சந்திக்கத் தயாராகத் திரும்பியது. அங்கே ஓநாய்க்கு எதிரில் நின்றது வெறும் காட்டு மானல்ல; முழு வளர்ச்சியடைந்த முரட்டு மான். ஓநாய் வாயைத் திறந்து பற்களைக் காட்டியது.

" காட்டு மானே! காட்டு மானே! நான் உன்னைச் சாப்பிடப் போகிறேன்" என்றது ஓநாய்.

" அந்த முரட்டு மான் சிரித்தது."

" இங்கே வா, பார்க்கலாம்" என்றது.

ஓநாய் முன்னால் பாய்ந்தது. ஆனால் அதற்கு முன்பு இருந்த பலம் இப்பொழுது கிடையாது. முரட்டு மான் பின்னங்கால்களில் நின்று கொண்டு முன் காலைத்தூக்கி தன்னுடைய கொம்புகளால் ஓநாயைத் தூக்கி தரையில் வீசியது. ஓநாய் பொத்தென்று விழுந்தது. பாவம்! அது செத்துப் போயிற்று."



**மிதுதன்**

கதையைச் சொல்லிமுடித்த பிறகு கோப்ரல் மௌனமாக இருந்தார். படைவீரர்கள் கதையைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தனர்.

"அது மிகவும் கெட்டிக்காரமான்."

"அது முரட்டு மானாக வளர்ந்து விட்டது."

" இந்தக் கதைக்கு ஒரு படிப்பினை இருக்கிறது. அது புரிகிறதா?"

" பின் வாங்குங்கள்! புறப்படுங்கள்!" என்று உத்தரவு கேட்டது.

படைவீரர்கள் உடனே குதித்தெழுந்து வரிசையாக நின்றார்கள். அவர்கள் நெஞ்சை முன்னே தள்ளி நிமிர்ந்து நடந்தார்கள். அவர்கள் வயல்களிலும் காடுகளிலும் ஓக் மரத்தோப்புகளிலும் சுற்றினார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த நாட்டுக்குள் போய்க் கொண்டிருந்தார்கள் - அந்நிய நாட்டுக்குள் அல்ல.

1995 ஆம் வருடப் பிற்கூறு. யாழ் மண்ணில் எங்களின் போராளிகள் பின்வாங்கிக் கொண்டிருந்தனர்.

எதிரி மிக மிகப் பலமாக இருந்தான், மூர்க்கமாக இருந்தான். எதிரியின் தாக்குதலை எதிர்க்குமளவுக்கு எங்களிடம் போதுமான பலமிருக்கவில்லை; அவ்வேளை நின்று எதிர்ப்பதும் புத்திசாலித் தனமாக இருக்கவில்லை. மக்கள் இருந்தார்கள்; எதிரியின் இலக்கு மக்கள். எதிரியின் போர்க்களம் யாழ்மண். களத்தில் இருந்து முதலில் மக்களின் பின் வாங்கல். எதிரி அவர்களை வெளியேறாதபடி தடுக்க முயற்சித்தான். முயற்சி தோல்வியடைய மக்கள் வெளியேறிக் கொண்டனர். இப்பொழுது எங்களின் போராளிகள் சில அடிகளாக பின்வாங்கிக் கொண்டிருந்தனர்;

அதே மேற்சொன்ன மானின் புத்தியுடனும் பிடிவாதத்துடனும்;

அது மிகவும் கெட்டிக்கார மான்;

அது முரட்டு மானாக வளர்ந்துவிடும்.

போராளிகள் உறுதியுடன் நடந்தார்கள். தொடர்ந்து நடந்தார்கள். அவர்கள் கடல் கடந்து வன்னியின் வயல்களில் நடந்தார்கள். காடுகளில் நடந்தார்கள். உப்புவயல் வெளி கடல்வெளி எங்கும் நடந்தார்கள்.

நடக்க நடக்க அவர்களின் கால்கள் உரமேறிக் கொண்டன. அவர்கள் தங்கள் சொந்த நிலத்திலேயே நடந்தார்கள்.

2000 ம் வருடம் முற்கூறு. மான் மீண்டும் ஓநாயைச் சந்திக்க தயாரானது.

அது மிகவும் கெட்டிக்கார மான்;

அது முரட்டு மானாக வளர்ந்து விட்டது;

முழு வளர்ச்சியடைந்த முரட்டு மான். ◆

# 3ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 29.05.1973

வீரச்சாவு 02.11.1999

காலம் தன்வழியே நகர்கின்றது.
காற்றும் அதன்வழியே
காவியங்களைச் சுமந்தபடி
தலைமுறைகளை உயிர்த்தெழ வைக்கிறது.
வரலாற்றின் அத்தியாயங்களில்
வாழ்பவர்களின் உணர்வுகள் மட்டுமே
சாகா வரம் பெற்றதென
புதிது புதிதாக, ஆயிரமாயிரமாக
உயிர்த்துக் கொண்டே இருக்கிறது.
அதற்குள் நீயும்.... உன் நினைவுகளும்
நித்தம் நித்தம்
எத்தனையோ அர்த்தங்களை விதைத்த வண்ணம்
இன்னமும் அப்படியே ....
ராகவா! உன் ராச்சியம் அழியவேயில்லை.
அது மேலும் மேலும் விஸ்தாரமாகி...
உன் ஆளுமைக்குள் என்றும் நாங்கள் ...
உன் சுவடுகளைத் தொடர்ந்த படியே....!

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி

## லெப். கேணல் ராகவன்

[சின்னையா சுஜேந்திரராஜா]

இரணைஇலுப்பைக்குளம், வவுனியா

தகவல்:
குடும்பத்தினர்
சி.யோகராசா
இரணை இலுப்பைக் குளம்,
வவுனியா.

[2577]

Registered as a NewsPaper


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் iv

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி - 15 01-11-2002 வெள்ளிக்கிழமை ஓசை 256

வெளிவந்துவிட்டது!
தரம் 9
மாகாண மட்ட பொதுப்பரீட்சை முற்றிலும் எதிர்பார்க்கும் வினாக்கள், விடைகளுடன்
வெளியீடு: I.P.E.JAFFNA
கிடைக்குமிடம்: சகல அறிவமுது பொத்தகசாலை.
(2580)



அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அமைச்சர் பீரிசுக்கு கைலாகு கொடுக்கிறார்.



மூத்த தளபதி கேணல் கருணா அமைச்சர் மிலிந்த மொறகொடவிற்கு கைலாகு கொடுக்கிறார்.

## தாய்லாந்து நேற்றைய பேச்சுக்களில்

# கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் முக்கிய விடயமாக ஆராய்வு!

## நல்லுறவை ஏற்படுத்த முடிவு

**விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையே தாய்லாந்தில் நேற்று இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது. அங்கு தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே நல்லிணக்க சூழ்நிலையை ஏற்படுத்துவது தொடர்பான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. இது தொடர்பாக இரு தரப்பும் அடிக்கடி சந்தித்துப் பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.**

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான இரண்டாம் கட்டத்தின் முதல் நாள் பேச்சுவார்த்தை தாய்லாந்து நேரப்படி மாலை 3.00 மணிக்கு ஆரம்பமானது.

பேச்சுவார்த்தைகள் நடைபெறும் றோஸ்கார்டினிலுள்ள நட்சத்திரஹோட்டலை விடுதலைப் புலிகளின் பிரநிதிகளும், சிறிலங்கா அரசாங்கத்தின் பிரதி நிதிக

(ivஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு அரசியல் ஸ்திரநிலை குறித்து இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படும்

(பாங்கொக்)

இன்றைய பேச்சுவார்த்தையின் போது சிறிலங்கா அரசியலில் ஸ்திர நிலை பற்றி பேசப்படும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் அரசியல் ஸ்திர நிலை கேள்விக் குறியாக மாறிவரும் நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசியல் ஸ்திரத் தன்மை அவசியம் என்பது

(ivஆம் பக்கம் பார்க்க)

## றோஸ்கார்டின் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கை

### - பெருமளவு ஊடகவியலாளர்கள் வருகை

தாய்லாந்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் றோஸ்கார்ட்டின் மலை வாசஸ்தலப் பகுதியில் நேற்று பலத்தபாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெருமளவு தாய்லாந்துப் பொலிசார் இப்பகுதியில் நிலை கொண்டிருந்தனர். அத்துடன் அப்பகுதியில் உள்ள ஏரியில் தாய்லாந்து கடற்படையின் சிறப்புப் பிரிவினரும் நீரடி நீச்சல் பிரிவினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை பேச்சுவார்த்தைகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக முக்கிய செய்தி ஊடகங்களிலிருந்து நூற்றுக்குமதிகமான செய்தியாளர்களும் ஐரோப்பிய,அமெரிக்க, தென்கிழக்காசிய ஊடகவியலாளர்களும் ஏனைய ஊடகவியலாளர்களும் அங்கு திரண்டிருந்தனர்.

### - வவு.வில் ஆயுதப்படையினரின் -

## பெண் மீதான பாலியல் வல்லுறவை கண்டித்து இன்று மௌன ஊர்வலம்

வவுனியா கல்லாண்ட குளம் பகுதியில் கடந்த 22ஆம் திகதி சிறிலங்கா ஆயுதப்படையினரால் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வவுனியாவில் இன்று மௌன ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

செல்வி ப.லூசியா அபிராம் பிள்ளை என்ற பெண் ஊர்காவல் படையினராலும், இராணுவத்தினராலும் பாலியல் வல்லுறவுக்கு

(ivஆம் பக்கம் பார்க்க)

## செயலணிக்குழு அமைப்பது குறித்து முக்கியமாக ஆராயப்படும்

### - அன்ரன் பாலசிங்கம்

செயலணிக்குழு அமைப்பது, அது தொடர்பான அதிகாரம் என்ன? அதில் யார் யார் அங்கம் வகிப்பர்? இது எவ்வாறு செயற்படும்? என்பது குறித்து இப்பேச்சுவார்த்தைகளில் ஓர் முடிவு எடுக்கப்படும் என நேற்று பேச்சுவார்த்தை ஆரம்பிக்கமுன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சில கேள்விகளுக்கு பதிலளித்த அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன்பாலசிங்கம் அவர்கள்

(ivஆம் பக்கம் பார்க்க)



புலிகள் தரப்புப்பிரதிநிதிகளும், அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகளும் சந்திக்கையில்...

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்ற 3663 இலக்கமுடைய பேருந்தில் 20-10-2002ஆம் திகதி பொன்னம்பலம் முருகதாஸ் (கிரிகேசன்) என்பவருடைய பிறப்புச்சான்றிதழ், திருமணப்பத்திரம், திருமணப்படங்களும் முக்கிய பொருட்களும் அடங்கிய பாக் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது த.பொ.மே.நிறுவன ஜெயபுர வட்டச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2570)

### பெற்றுக்கொள்ளவும்

முத்துப்பிள்ளையார் வண்ணச் சோலை, யோகபுரம், மல்லாவியில் அமைந்துள்ள பிரபா மணிக்கூடு திருத்தம் செய்து கொடுக்கும் இடம் யாழ்ப்பாணம் செல்ல இருப்பதால் திருத்தம் செய்யத்தந்த மணிக்கூடுகளை 12-11-2002க்கு முன்னராகப் பெற்றுக்கொள்ளவும். (2408)




நூலக நிகழ்வினையொட்டி கிளி/இந்துக்கல்லூரியில் இடம் பெற்ற புத்தகக் கண்காட்சி (சோதி)

## பனைசார் கைப்பணி உற்பத்தி நிலையம் ஸ்கந்தபுரத்தில் திறப்பு

(அலுவலக நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பனைசார் கைப்பணி உற்பத்தி நிலையம் ஒன்று அண்மையில் ஸ்கந்தபுரத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனமும் பனை அபி விருத்திச் சபையும் இணைந்து இதனை அமைத்துள்ளன.

ஆரம்ப நிகழ்வாக பனை அபி விருத்திச் சபை இணைப்பாளர் ஏ.வீ.கே. மாணிக்கம் தலைமையில் மங்கல விளக்கினை கரைச்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தி யோகஸ்தர் திரு. எஸ்.கந்தசாமி, கிராமசேவையாளர் எஸ். மகேந் திரம் ஆகியோர் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை அக்க ராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமாவளவன் ஏற்றிவைக்க, தொடர்ந்து உற்பத்தி யாளரின் கைப்பணி உற்பத்திக் கான மூலப் பொருட்களை நிர் வாக உத்தியோகஸ்தர் கந்தசாமி அவர்களும் பொருண்மிய மேம் பாட்டு நிறுவன பனை-தென்னை வளப் பொறுப்பாளர் திரு. அருள் அவர்களும் வழங்கி உற்பத்தியை ஆரம்பித்து வைத்தனர்.


## விற்பனைக்குண்டு

கீழ்க்காணும் விபரங்களையுடைய ஊர்தி, உந்துருளிகள் விற்பனைக்குள்ளன. கொள்வனவு செய்ய விரும்புவோர் நிதித் துறை, உடைமைப் பகுதியில். அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**அந்திவானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு.**

பார்வையிடப்படும் நாள்: 05-11-2002 - 08-11-2002 வரை

E.L.F. ISUZU 150

| | | | |
|---|---|---|---|
| யமகா | 100 | சுப்பர் கப் | 50 |
| மேற் | 50 | கொண்டா | C90 |
| பிறஸ்கப் | 50 | கொண்டா | C90 |

(2162)

தனியார் சிற்றூர்தி (மினிபஸ்) உரிமையாளர் கழகம் - வன்னி

## புதிய இயக்குநர் அவைத் தெரிவுக்கான பொதுக்கூட்டம்

தனியார் சிற்றூர்தி (மினிபஸ்) உரிமையாளர் கழகத்தில் உறுப்புரிமை பெற்ற உரிமையாளருக்கான பொதுக்கூட்டம் வரும் 17-11-2002 ஆம் நாள் ஞாயிறு பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி தமிழீழப் போக்குவரவுக்கழக மண்டபத்தில் திரு.சி. சுரேந்திரன் தலைமையில் இடம்பெறும். ஊர்தி உரிமையாளர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**நிகழ்ச்சி நிரல்:-**

- ☐ அகவணக்கம்
- ☐ வரவேற்புரை
- ☐ தலைமையுரை
- ☐ சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
- ☐ ஆண்டு அறிக்கை வாசித்தல்
- ☐ கணக்கறிக்கை செலுத்துதல்
- ☐ சிறப்பு விருந்தினர் உரை
- ☐ உரிமையாளர் கருத்துக்கள்
- ☐ இயக்குநர்அவை தெரிவு
- ☐ நன்றியுரை

**ம. பிரசாத்நாயகம்,** செயலாளர், தனியார் சிற்றூர்தி உரிமையாளர் கழகம், வன்னி.

(2573)

## சாவு அறிவித்தல்

## இராமகிருஷ்ணன் கிரிதரன்

(யாழ். மதுரா ஜீவல்லறி, விசுவமடு தமிழ்மதி நகைப்பூங்கா)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமகிருஷ்ணன் கிரிதரன் லண்டனில் 26.10.2002 அன்று அகால மரணமாகிவிட்டார். அன்னார், இராமகிருஷ்ணன் கண்மணி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரரும், சுகுமாரி, பாலச்சந்திரன் (ரெலிக்கொம் நிறுவனம்), நேசமலர், இராசேந்திரம் (ப.நோ.கூ.சங்கம்- நீர்வேலி) சீனதயாளன் (லண்டன்), சிறிதரன் (நிதர்சனம்), கிருஷ்ணகுமார் (சிவகாமி ஸ்ரோர்ஸ்- திருநெல்வேலி), செல்வி, பூமகள் ஆகியோரின் சகோதரரும், பவளகேசரி (வினோ நகைப்பூங்கா), மகாலிங்கம் (வியாபாரம்), ஜெயநிதி, குமார், பாலச்சந்திரன் (ஆசிரியர்- யாழ். சாவகச்சேரி மகளிர் கல்லூரி), திருமதி திலகம் இராசேந்திரம், திருமதி குமுதினி சிறிதரன், லோஜனா சீனதயாளன் (லண்டன்), வனஜா கிருஷ்ணகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் இன்று 01.11.2002 வெள்ளிக்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்: இ.பாலச்சந்திரன் (ரெலிக்கொம் நிறுவனம், யாழ்ப்பாணம்)

(சி-6779)


## போசாக்கற்ற அறுவர் கண்டுபிடிப்பு

கண்டாவளை கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தின் போசாக்கு நிலையப் பணியாளர்களால் தருமபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை போசாக்கற்ற நிலையில் காணப் பட்ட ஆறு பேர் இனம் காணப் பட்டு போசாக்கு நிலையத்தில் இணைக்கப்பட்டு போசாக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களில் மூவர் சிறுவர்கள், மூவர் பாலூட்டும் தாய்மார்கள் என போசாக்கு நிலைய நிர்வாகி தெரிவித்தார். (14)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் அழிவு

(விசுவமடு)

கண்டாவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளால் அழிவு ஏற்பட்டு வருகிறது. 2002-2003 காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கண்டாவளைப் புளியம்பொக் கணை கிராமங்களில் நெற்ப யிர்கள் கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்பட்டு வருகிறது.

இதனால் கவலையடைந்துள்ள நெற்செய்கையாளர்கள் இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## படிப்பகம் திறப்பு

(பூநகரி)

பூநகரிப் பிரதேசம், சாமிப்புலம் கிராமத்தில் நேற்று முன்தினம் கப்டன் விஜி மாவீரர் படிப்பகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி படிப்பகத்தை நல்லூர் ஆலங்கேணி வலயப் பொறுப் பாளர் ஜெகன் திறந்துவைத்தார். (06)

- காஞ்சிரங்குடா படுகொலை -

## கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிகள் இராணுவம் பாவிக்கும் ரகம்

திருக்கோயில் காஞ்சிரங்குடா பகுதியில் கடந்த 9ஆம் திகதி இடம் பெற்ற துப்பாக்கிச்சூடு மற்றும் படுகொலைச் சம்பவங் களின் போது கண்டெடுக்கப்பட்ட ரி.56ரக இரண்டு துப்பாக்கிகளும் சீனத் தயாரிப்பாகும். இவை இராணுவத்தினரும், பொலிசாரும் பயன்படுத்துகின்ற ரகத்தை ஒத்தவையென இராணுவ ஆயுதங்களைக்கையாள்வதில் நீண்ட அனுபவம் கொண்ட லெப். கேணல். கனஜி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை, கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப விசாரணை அறையில் மூவர் கொண்ட விசாரணைக்குழு முன்பு இடம் பெற்ற வேளை சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். லெப். கேணல். கனஜி விஜேசேகர தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது: காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாமிற்கு அருகில் கண் டெடுக்கப்பட்ட இந்த ரி-56 ரகத் துப்பாக்கிகள் ஏ.கே-47 ரகத்தை ஒத்தவை. இதன் முன்குழாய்ப் பகுதி 3அங்குலம் வரை குறைக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிகளின் நீளம் குறைக்கப்பட்டுக் காணப்படுவதால், உடம்பிற்குள் மறைத்தும் சிறிய பைகளில் மறைத்தும் கொண்டு செல்ல முடியும்.

துப்பாக்கியின் நீளம் குறைக்கப்பட்டுள்ளதால் குறுகிய தூரத்தில் நின்று ஒருவரைச் சுட முடியும். இத்துப்பாக்கியின் வடிவமைப்பு ஒன்றுக்கு மேற்பட்ட துப்பாக்கிகளின் கூட்டுச் சேர்க்கையே என்றார்.


## ஈராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 12 04 1981



கடலன்னையின் மடியில் 02 11 2000

## கடற்கரும்புலி மேஜர் இலக்கியன்

(சிவசாமி- ஹரிகரன்)

பசீலன் வீதி, முள்ளியவளை.

02-11-2002 நாளை (சனிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**முகவரி:**
**பசீலன் வீதி, 3ம் வட்டாரம், முள்ளியவளை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(2157)

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மண்ணுலகில 18 ☐ 11 ☐ 1975



விண்ணுலகில் 06 ☐ 10 ☐ 2002

## சோதிலிங்கம் கவிலராசன்

**(நட்டாங்கண்டல் - மல்லாவி)**

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட தொலைபேசி, தபால் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் எதிர்வரும் 05-11-2002 செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள தம்பி சோதிலிங்கம் கவிலராசன் அவர்களின் 31ஆம் நாள் கிரியைகளில் கலந்து கொண்டு தம்பியின் ஆத்மசாந்திக் காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிக அன்புடன் அழைக்கின்றோம்.

நட்டாங்கண்டல், மல்லாவி.

**சோ. இதயராசன** (ஆசிரியர்) அண்ணன்.

(சி-7450)

# யாழிற்காய் விழுதெறிந்து நின்ற ரோஜாவின்
# 1ம் ஆண்டு நினைவலைகள்

யாழில்
10
✵
02
✵
1979



யாழிற்காய்
11
✵
11
✵
2001

# லெப்.கேணல் சிவனேசன்

(வெள்ளை/புறுஸ்/ஜக்கோல்)

(செல்லத்துரை புருஷோத்மன்)

*யாழ்ப்பாணம்.*

*(தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவன்)*

கருப்பிரழுகற்ற எழுந்திட்ட
கரும் பூவே!
மண்மூடிப் போனாலும்,
மனதகற்ற இயலாத, நெகிழ்வலைகளாய்
பின்னிவரும் நினைவுகளை
பின்னிறுத்த இயலாமல்
நெஞ்சினுள் புதையலிட்டோம்
இன்நாளில்

இவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட கப்டன் பருதியப்பன்,
கப்டன் தூயோன், கப்டன் ரூபன் ஆகியோரையும் இன்நாளில் நினைவு கூறுகின்றோம்.

குடும்பத்தினர்.




நேற்று முன்தினம் மாளிகாவத்தையில் நடைபெற்ற மோதலில் கலகக்காரர் பொல்லுகளுடன் திரிவதையும் அடித்து நொருக்கப்பட்ட கடையையும் படங்களில் காணலாம்.

# உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு தேவையானவற்றை தயார்ப்படுத்துவதே நோக்கம்

## - தாய்லாந்திலிருந்து அமைச்சர் பீரிஸ்

(பாங்கொக்)

ஒஸ்லோவில் நவம்பர் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தேவையான விடயங்களை தயார் செய்வதே நேற்று ஆரம்பமாகியிருந்த பேச்சுவார்த்தைகளின் நோக்கம் என அரச தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்

தற்போது சர்வதேசரீதியில் சமாதான நடவடிக்கைகளுக்குக் கிடைத்துள்ள ஒத்துழைப்பை பயன்படுத்தி நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான கூட்டமைப்பு இந்தப் பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்தப்படவுள்ளது. அதன் பொருட்டு கூட்டு செயலணியை அமைப்பது குறித்து ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படும் என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

இதே வேளை நேற்று ஆரம்பமாகியுள்ள பேச்சுவார்த்தையில் புலிகளின் கிழக்கு பிராந்திய தளபதி கேணல் கருணா மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கலந்து கொள்வதினால் கிழக்கின் நிலை குறித்தும் விசேடமாக ஆராயச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# காஞ்சிரங்குடாவில் தேநீர்க்கடை, நெல்விற்பனை நிலையம் தீக்கிரை!

(மட்டக்களப்பு)

திருக்கோவில் காஞ்சிரங்குடா ரூபஸ்குளச் சந்தியிலுள்ள கிருஷ்ணபிள்ளை சுப்பிரமணியம் (வயது 50) என்பவருக்குச் சொந்தமான தேனீர்க்கடையும், நெல்விற்பனை நிலையமும் செவ்வாய் இரவு இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதனால் இரண்டு இலட்சம் ரூபா சேதமேற்பட்டிருப்பதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடை உரிமையாளர் காஞ்சிரங்குடா சம்பவத்தை நேரில் கண்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக இவர் நிதர்சனம் தொலைக்காட்சிக்குச் செவ்வாயன்று பேட்டியளித்திருந்தார். இதன் எதிரொலியாகவே இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. தீக்கிரைச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து அரைக் கிலோமீற்றர் தூரத்தில் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படை முகாம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி தீவிபத்து சம்பவத்தினால் பொதுமக்கள் மத்தியில் மீண்டும் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

# திருமலைச் சம்பவத்தில் உயிரிழந்த, காயமடைந்தோருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மனிதாபிமான உதவி

(அலுவலக நிருபர்)

11.10.2002 அன்று திருமலையில் மேற்கொள்ளப்பட்ட கதவடைப்பின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்பு, துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் சிக்கி உயிரிழந்த, காயமடைந்த மக்களுக்கு த.பு.கழகம் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்கியுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்த திருமலை காந்திநகரைச் சேர்ந்த கோணமுத்து கோணலிங்கம், காந்திநகரைச் சேர்ந்த கிறிஸ்ரி மயூரன், அன்புவழிபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சந்திரன் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் வீதம் திருமலை த.பு.கழகம் இடர் காலக் கொடுப்பனவாக வழங்கியுள்ளது.

மற்றும் இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா மூவாயிரம் வீதம் 39 பேருக்கு இடர்காலக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 39 பேருக்கும் பதினேழாயிரத்து எண்ணூற்றி நாற்பது பெறுமதியான உடைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளிமாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் ஆளணிபற்றாக்குறையால் நெருக்கடியில்

(அலுவலக நிருபர்)

கிளி. மாவட்ட நீர்பாசனத் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நீர்ப்பாசனத் திணைக்கள வேலைத்திட்டத்தினை முழுமையாக மேற்கொள்ள முடியாது உள்ளதாக கிளி. மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கேட்ட போது, தொழில்நுட்ப உதவியாளர் 12 பேர் தேவை தற்போது இருவர் மட்டுமே கடமையாற்றுகின்றனர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 16பேர் தேவை தற்போது நான்கு பேர் கடமையாற்றி வருகின்றனர்.படவரைஞர் இரண்டு பேர் தேவை தற்போது ஒருவரும் இல்லை. இதனால் இதற்குரிய வேலைத்திட்டம் நேர்த்தியான முறையில் செய்யமுடியாது உள்ளது.லிகிதர் இரண்டு பேர் தேவை. தற்போது ஒருவரே கடமையாற்றி வருகிறார், தட்டெழுத்தாளர் இருவர் தேவை. ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகிறார். கஞ்சியக் கட்டடமும் இல்லை.களஞ் சியக் காப்பாளரும் இல்லை. களஞ்சியமும் இல்லை. எனக் குறிப்பிட்டார். போதிய வசதிகள் அற்ற நிலையிலே இறங்வருவ தோடு இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் மூலமாக தெரிவித்தும் எதுவித பயனும் இல்லை எனக் குறிப்பிட்டார். (ஆ)

# முஸ்லிம்களின் கருத்துக்களை முன்வைக்கவே பேச்சில் கலந்து கொண்டுள்ளேன்

## – அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டுச் செயலணிக் குழுவை அமைப்பது பற்றி பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைக்காக தாய்லாந்து சென்றுள்ள சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நோர்வே மற்றும் அரசாங்கத்தூதுக் குழுவினருடன் கலந்துரையாடியுள்ளேன். முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாகவே தான் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கிறேன்.

தாம் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது பற்றி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழுவில் பிரச்சினை ஏற்பட்டது. முஸ்லிம் மக்களின் கருத்துக்களை சமர்ப்பிக்கும் நோக்கத்துடனேயே அரசாங்க தூதுக்குழுவில் நான் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

வடக்கிலும், கிழக்கிலும் வாழும் முஸ்லிம் மற்றும் பிற சமூகங்களிற்கு நம்பிக்கையை இந்த சமாதானத் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிபிர் விமானத்தின் பகுதி இஸ்ரேலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது

குளியாப்பிட்டியில் அண்மையில் வீழ்ந்து நொருங்கிய கிபிர் விமானம் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்கு சிறிலங்காவுக்கு வந்த இஸ் ரேலிய விசாரணைக் குழுவினர் மூவரும் தமது நாடு திரும்பியுள்ளனர்.

சிறிலங்கா விமானப்படைக் கொமாண்டரின் சிபார்சில் நியமிக்கப்பட்டிருந்த கப்டன் ஹர்சா அபயவர்த்தனவும் இஸ்ரேலிய குழுவினருடன் விசாரணைகளில் ஈடுபட்டு வந்தவராவார். விமானத்தின் எரிபொருள் கட்டுப்பாட்டுப் பகுதியொன்றையும் பரிசோதனைக்காக எடுத்துச் சென்ற இஸ்ரேலிய குழு விபத்துக்கான அறிக்கைகளை விரைவில் சமர்ப்பிப்பார்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக் குறித்து விவாதித்தது போதும் உடன் முடிவெடுக்க வேண்டும்

## - ஐ.நா.சபையைக் கேட்கிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

ஈராக் மீது அடுத்தவாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

பயங்கர ஆயுதங்களை வைத்திருக்கும் ஈராக் மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா. சபையை அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது. ஆனால் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இது குறித்து ஐ.நா.சபையில் விவாதிக்கப்படுகிறது.

ஐ.நா.சபையில் விவாதித்தது போதும், முடிவெடுக்கும் நேரம் வந்துவிட்டது. உண்மை நிலவரத்தைப் புரிந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சில அடிப்படை முடிவுகளை எடுத்துள்ளோம். முடிவு பெறாத தீர்மானத்திற்கு நாம் காத்திருக்க முடியாது எனவும் கொலின் பவல் கூறியுள்ளார்.

இதேவேளை ஈராக்கிற்கு சட்டவிரோதமாக இராணுவத் தளபாடங்களை விற்பனை செய்த பொஸ்னிய பாதுகாப்பு அமைச்சரையும் இராணுவத் தளபதியையும் அந்நாட்டு அரசாங்கம் பதவி விலக்கியுள்ளது.

ஈராக்மீது ஐ.நாடுகள் சபை ஆயுதத்தடையை விதித்துள்ள சூழ்நிலையில் பொஸ்னியா பாதுகாப்பு அமைச்சர் மிக்-21 ரகவிமானம் ஒன்றை விற்பனை செய்திருக்கின்றார். இதனையடுத்து பொஸ்னியாவின் அதியுயர் பாதுகாப்புச்சபை கூடி ஆராய்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இவர்கள் இருவரும் தாமாகவே முன்வந்து இராஜிநாமாக் கடிதங்களைக் கையளித்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. பொஸ்னிய அரசாங்கம் இதற்கு முன்னர் விமானப்படைத் தளபதியையும் விமான உற்பத்திநிறுவன பணிப்பாளரையும் பதவி விலக்கியிருந்தது தெரிந்ததே.

# இஸ்ரேலில் கூட்டணி அரசிலிருந்து தொழிற்கட்சி வெளியேறியது

## - ஏரியல் ஷரோனின் அரசு பெரும்பான்மையை இழந்தது

(டெல்அவிவ்)


இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனின் கூட்டணி அரசில் இருந்து தொழிற்கட்சி வெளியேறியுள்ளது.

இதனால் கூட்டணி அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது.இஸ்ரேலிய வரவு - செலவுத் திட்டத்தில் யூத குடியேற்றங்களுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையை அடுத்தே கூட்டரசில் அங்கம் வகித்த தொழிற்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களான வெளிவிவகார அமைச்சர் சிமோன்பெரசும் பாதுகாப்பு அமைச்சர் பெஞ்சமினும் வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் பிரதமர் ஷரோன் பெரும்பான்மையுடன் வலதுசாரி அரசாங்கம் ஒன்றை அமைக்கலாம் அல்லது பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்க வேண்டும். பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதாயின் அடுத்த 90 நாட்களுக்குள் பிரதமர் ஷரோன் அதற்கான அழைப்பை விடுக்க வேண்டும். அவ்வாறாயின் திட்டமிட்டதைவிட 9 மாதங்களுக்கு முன் தேர்தலை நடத்தவேண்டியிருக்கும். 120 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் பிரதமர் ஏரியல் ஷரோனின் கட்சிக்கு தற்போது 55 ஆசனங்கள் மட்டுமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.



பேச்சுக்களில் பங்கேற்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள்.



பேச்சுவார்த்தை மேசையில்...

# கொழும்பு மத்தி, வடக்குப் பகுதிகளில் வன்முறைகள் தொடரலாம் என அச்சம்

## நேற்றுமாலைமுதல் மீண்டும் ஊரடங்கு

(கொழும்பு)

கொழும்பு வடக்கு, மற்றும் கொழும்பு மத்திய பகுதிகளில் வன்முறைகள் இடம்பெறுமோ என்று பெரும் பதற்றநிலை காணப்படுகிறது.

இன்று வெள்ளிக்கிழமையாக இருப்பதால் கொழும்பு வடக்கு, மத்திய பகுதிகளில் பாடசாலைகள் அனைத்தையும் மூடுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. வாகனப் போக்குவரத்துக்களும் நடைபெற மாட்டாதென தெரிவிக்கப்படுகிறது. வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மாளிகாவத்தையில் நேற்று முன்தினம் வன்முறையில் கொல்லப்பட்ட முஸ்லிம் நபரின் இறுதிச் சடங்கு நேற்று மாலை மாளிகாவத்தையில் இடம்பெற்ற வேளை அங்கு கூடிய முஸ்லிம்கள் அப்பகுதியில் நின்ற பொலிசார் மீது கற்களை வீசிக் கலகத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்துப் பொலிசார் இறப்பர் குண்டுகளால் சுட்டதில் இருவர் காயமடைந்தனர். கல்லெறிக்கு இலக்காகி பொலிசார் ஒருவரும் காயமடைந்தார்.

நேற்றும் கொழும்பு வடக்கு, மத்தி முஸ்லிம் பகுதிகளில் சில கடைகள் உடைக்கப்பட்டு சிங்கள மக்கள் சிலர் தாக்கப் பட்டுள்ளனர். இப்பகுதிகளில் கலகமடக்கும் பொலிசார், ராணு வத்தினர், விசேட அதிரடிப் படையினர் ரோந்து சுற்றிவரு கின்றனர்.

நேற்று நடைபெற்ற பத்தி முக்கியமான சந்திகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு பொலிஸ் தலைமையகத்தினால் உடனடி இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு ஜே.வி.பி.யும், சிஹல உறுமயவுமே பின்னணியில் இருப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மேலும் அவர் இது குறித்து விசாரணைகளை நடத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை மாளிகாவத்தை, மருதானை, தெமட்டகொடை, கசல்வத்தை, மோதர, கொட்டாஞ்சேனை, கிறான்பாஸ் ஆகிய பகுதிகளில் நேற்றுமாலை முதல் இன்று காலைவரை ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதிகளிலுள்ள மக்கள் வெளியே செல்லாது வீடுகளிலே தங்கியிருக்குமாறு கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே கேட்டுள்ளார்.

இந்த உத்தரவை மீறுவோருக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு படையினருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளதோடு வதந்தியைப் பரப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## விகாரை ஒன்றுக்கு கொழும்பில் பெற்றோல் குண்டு வீச்சு!

கொழும்பில் நேற்று விகாரை ஒன்றுக்கு பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

காலை 7.00 மணிக்கு கொச்சிக்கடை ஜம்பட்டா வீதியிலுள்ள விகாரை ஒன்றிற்கே பெற்றோல் குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. இதன் போது அந்த பன்சலையிலிருந்த புத்தர் சிலை உட்பட கட்டிடங்கள் மற்றும் பொருட்கள் சேதமடைந்துள்ளன.


**ஓராண்டு நிறைவு கண்ணீர் அஞ்சலி**

மண்ணகத்தில் 29 06 1975



விண்ணகத்தில் 01 11 2001

**அமரர் கோமுகி பிரபாகரன்**

ஆசிரியர் – காந்தரூபன் அறிவுச்சோலை

விடிகாலை வெள்ளி அன்று
அடிசாய்ந்து - அது
விழிநீரில் எமை நனைத் தோய்ந்தது
தமிழ் மொழியாலே - எம்
மனம் ஆய்ந்தது
அந்த நினைவாலே - நாம்
நொந்து ஓராண்டு நகர்ந்தது.

உங்கள் நினைவினை
சுமந்து நிற்கும்
காந்தரூபன் அறிவுச்சோலை பிள்ளைகள், மாமாக்கள், ஆசிரியர்கள், அம்மாக்கள்.

(2163)


### கிழக்கு மாகாண...

ளும் வந்தடைந்தனர். பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், சிறிலங்கா அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் கைலாகு கொடுத்ததையடுத்து பேச்சுக்கள் ஆரம்பமாகின.

நேற்றைய பேச்சுக்கள் மூன்று மணி நேரம் நடைபெற்றது.

இதேவேளை சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு முக்கிய அம்சமாகக் கருதப்படும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திர நிலை சம்பந்தமாக இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இவ்வாறு பேச்சு வார்த்தையில் அரசாங்கக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்:

அடுத்த மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள நிகழ்ச்சி நிரலில் உள்ள சகல அம்சங்கள் தொடர்பாகவும் யுத்த நிறுத்தத்தின் ஸ்திர நிலை மிக முக்கியமானது யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவது சகல தரப்பினருக்கும் நன்மை அளிக்கும். எனவே யுத்த நிறுத்தம் சம்பந்தமாக ஸ்திர நிலையை ஏற்படுத்தும் விடயம் தாய்லாந்து பேச்சுவார்த்தையில் முக்கிய அம்சமாக அமையும் என்றும் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

### செயலணிக்குழு...

தெரிவிக்கையில்;

சிறிலங்காவின் ஆளும் அரசு இன்று இரண்டாக இருக்கிறது. அதிகாரம் மிக்க சனாதிபதி ஆட்சி, பாராளுமன்றத்தில் பெரும் பான்மையை கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க அரசு. அதிகாரத்தைக் கொண்டுள்ள சனாதிபதி இலங்கைத்தீவிலே தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் அபிவிருத்தி அவர்களின் பொருளாதார விருத்தி ஆகியவற்றுக்கான இந்த சமாதான பேச்சுவார்த்தையில் இடையூறு விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். இது இந்தத்தீவில் இருக்கின்ற ஒரு அமைதி அல்லது மறுமலர்ச்சியை, பொருளாதார வளர்ச்சிப் போக்கை தடைசெய்வதாக அல்லது இடையூறு ஏற்படுத்துவதாக அமையும். இது ஒரு விரும்பத்தக்க செயல் அல்ல. இதற்கிடையில் சனாதிப தியின் அணுகுமுறை காரணமாக ரணில் விக்கிரமசிங்கவினுடைய அரசு கலைந்து புதியதொரு தேர்தல் ஒன்று ஏற்படக்சுடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இப்படியான ஒரு தேர்தல் ஏற்பட்டால், இலங்கையில் வாழ்கின்ற மக்கள் மிகப் பெரும்பான்மையான வாக்குகளை வழங்கி ரணில் விக்கிரமசிங்க அரசை ஒரு உறுதியான நிரந்தரமான அரசாக மாற்றி, இந்தத்தீவிலே அமைதி வழியிலான தீர்வை நிரந்தரமாக கொண்டுவர ஒரு மனுவை மக்கள் வழங்க வேண்டும், வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சந்திரிகாவின் சமாதானப் பேச்சுக்கான எதிர்ப்பு நடவடிக்கை அதிருப்தி அளிப்பதாகவும் தெரிவித்தார்.

### கொழும்பு...

அனைவருக்கும் தெரிந்த தொன்றே.

இந்நிலையில் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் இரண்டாம் நாளான கொழும்பின் அரசியல் ஸ்திரத் தன்மை பற்றி ஆராயப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நல்ல பயனளிக்கக்கூடிய வகையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சில உடன்பாடுகளை நாங்கள் கண்டுள்ளோம். இது பற்றிய விபரங்களை இந்தச் சுற்று பேச்சுவார்த்தையின் முடிவில் நடைபெற இருக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நாங்கள் மேலதிக விபரங்களைத் தெரிவிப்போம் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இன்றைய பேச்சுவார்த்தையில் இரு தரப்பினருக்கும் இடையிலான கூட்டுச் செயலணி பற்றி விவாதிப்போம் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

### பெண் மீதான...

உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து இந்த ஊர்வலத்தின் முடிவில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இம் மௌன ஊர்வலமானது காலை 9.00 மணிக்கு வவுனியா-கோவிற்குளம் சந்தியிலிருந்து ஆரம்பமாகி கச்சேரியைச் சென்றடையும். அங்கு பெண்கள் மீது தொடர்ச்சியாக இடம்பெறும் பாலியல் வல்லுறவுகளைக் கண்டித்து இதற்குத் தீர்வு காணுமாறு கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வவுனியா அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.

இம் மௌன ஊர்வலத்தை வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமும் கல்லாண்டகுளம் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடுகள் செய்திருந்தன. (10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நேர்நோக்கு

# தோல்வி கண்ட வழிமுறை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் படிப்படியாக முன்னேற்றகரமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்ட வேளையில் இது குறித்து ஆருடம் தெரிவித்த பொதுசன ஐக்கிய முன்னணியினதும், சிங்களப் பேரினவாதிகளினதும் எதிர்பார்க்கைக்கு எதிர்மாறாக பேச்சுவார்த்தை முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது.

முதலாம்கட்ட பேச்சுவார்த்தைகளின் போது முடிவு செய்யப்பட்ட விடயங்களை விரிவாக ஆராய்ந்து நடைமுறைப்படுத்த ஏதுவாக இருதரப்பும் தமது பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் குழுக்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியுள்ளனர். இது பேச்சுவார்த்தை சுமுகமாகவும் நம்பிக்கை தரக்கூடிய வகையிலும் முன்னேறிச் செல்வதை வெளிப்படுத்துகின்றது.

அத்துடன் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றும் இரு தரப்புப் பிரதிநிதிகளும் ஒரேவிமானத்தில் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்கின்றமையும் குறிப்பாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் கொழும்பு விமானநிலையமூடாக மேற்கொள்ளும் பயணங்கள் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் வாழும்சமாதானம்விரும்பும் மக்களிடையே நம்பிக்கை விதைகளைத் தூவி வருகையில் இந்தச் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளை, சிறிலங்காவின் அதியுயர்பதவி வகிக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டுவருவது. இம்மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி வருகிறது.

1994இல் சந்திரிகா அம்மையார் சனாதிபதியாகப் பதவியேற்ற வேளையில்,சிறிலங்கா இராணுவமும், இந்திய இராணுவமும் மேற்கொண்ட பெரும்படையெடுப்புக்கள் பின்னர் 1990முதல் 1994 வரை மேற்கொள்ளப்பட்ட பொருளாதார இராணுவ அழுத்தங்கள் என்பவற்றினால் பெரிதும் துன்பப்பட்ட நிலையில் தமிழ்மக்கள் இருந்தனர். இந்த அழுத்தங்கள் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்கிவிட முடியாத நிலையில் சனாதிபதி சந்திரிகா இந்தப்பிரச்சினைக்குச் சமாதான வழிமூலம் தீர்வுகாணப் போவதாகக் கூறி பதவிக்கு வந்திருந்தார்.

தொடர்ச்சியான யுத்தத்திற்கு விரயமாக்கப்பட்ட பணத்தை அபிவிருத்திக்குச் செலவிட்டு சிங்கள மக்கள் சந்தித்து வந்த பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்போவதாக அவர் கூறிவந்தார்.

ஆனால் பதவி ஏற்ற வேளையில் தமிழ் மக்களை அதே இராணுவ பொருளாதார அழுத்தங்களுக்குள்ளே வைத்துக்கொண்டு "சமாதானத்தை" ஏற்படுத்திவிட அவர் முயன்றார். யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது பொருளாதாரத்தடை, மீன்பிடித்தடை, போக்குவரத்துத்தடை, என்பவற்றைத் தளர்த்துவதற்கு இணக்கம் காணப்பட்ட போதிலும் கூட, அவற்றைச் சரிவரச் செயற்படுத்த அவர் முன்வரவில்லை.

குறிப்பாக யாழ் குடா நாட்டை முற்றுகைக்குள் வைத்துக்கொண்டு தான் விரும்பிய வாறானதொரு தீர்வைத் திணித்துவிடும் முயற்சியிலேயே அவர்தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அதாவது தமிழ் மக்கள் சந்தித்திருந்த நெருக்கடிகளிலிருந்து அவர்களை விடுவித்து சுமுகமானதொரு சூழலில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகள் முன்வந்த வேளையிலும், சுமுகநிலையை ஏற்படுத்த அவர் முன்வரவில்லை.

பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அவர் தானாகவே முன்வைத்த "பிராந்தியங்களின் ஒன்றியம்" என்ற கோட்பாடு படிப்படியாகச் சிதைவடைந்து கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாகியும் கூட அவரால் இது விடயத்தில் எதுவும் சாதித்து விட முடியவில்லை.

அவரால் தொடங்கப்பட்ட 'சமாதானத்துக்கான' யுத்தம் அவருக்கு வெற்றியைத் தரவுமில்லை சமாதானத்தை ஏற்படுத்தவுமில்லை.மாறாக சிறிலங்காவின் அனைத்து வளங்களையும், யுத்தத்தை நோக்கித் திருப்பி தொடர்ச்சியாக அவர் நடத்திய யுத்தம் தமிழ் மக்களை என்றுமில்லாத அவலத்திற்குள்ளாக்கியது மட்டுமல்லாது சிறிலங்காவையும், மீளமுடியாத படுகுழி நோக்கித்தள்ளியது. அவரது ஆட்சியதிகாரமும் ப றிபோனது. மக்கள் மத்தியில் 1994இல் அவர்குறித்து இருந்த மாயத்தோற்றம் முற்றாக அகன்று செல்வாக்கை இழந்துள்ள அவர் தனது நிறைவேற்று அதிகாரத்தைக் கூட சரிவரப் பயன்படுத்த முடியாது உலகிலிருந்து தனிமைப்பட்டுப்போயிருக்கின்றார்.

இன்று உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள சமாதான நடவடிக்கையில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக புலம்பும் அளவிற்கு அவரது நிலை சென்றுள்ளது.

இவற்றுக்குக் காரணம் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் விடயத்தில் அவர் காட்டும் வரட்டுத்தனமான பிடிவாதமாகும் அதாவது யுத்தம் மூலம் தீர்வு காண அவர் எடுத்த முயற்சியும் சமாதான வழிமுறையில் அவர் கைக்கொள்ள முயலும் போக்குமே அவரது இத்தோல்விக்குக் காரணங்களாகும். அதாவது கூடுதல் வளத்தைப் பாவித்து குறைந்த காலப்பகுதியில் யுத்தத்தில் வெற்றி கண்டுவிடலாம் என அவர் எடுத்த முடிவு எதிர்மாறான விளைவையே தந்துள்ளது.

பின்னர் அவரது ஆட்சிக்காலத்தில் நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டாலும், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து ஒரு சுமுக நிலையை ஏற்படுத்தி சமாதானச் சூழலில் பேச்சுக்களை நடத்த அவர் விரும்பாமை இந்த வழியில் கூட அவரால் முன்னேறிச் செல்ல முடியாத நிலையை ஏற்படுத்தியது.

ஆனாலும் கூட, இன்றும் அடிப்படைப் பிரச்சினைகளைப்பற்றி உடனடியாகப் பேசவேண்டும் என அவர் வலியுறுத்தி வருகிறார். இது பேச்சுவார்த்தையை எவ்வாறாயினும் குழப் பியடித்துவிட அவர் மேற்கொள்ளும் முயற்சியின் ஓர் அங்கமென்றே கூறாலா மேயல்லாது, அவர் சமாதான வழிமுறையில் கொண்ட விருப்பத்தினால் என்று எவருமே கூறிவிட முடியாது. ஏனெனில் அவர் தோல்விகண்ட வழிமுறையே வலியுறுத்துவதனாலாகும்.

**–வேலவன் ●**

# புதிய திட்டங்களுடன் கிளிநொச்சி விளையாட்டுத்துறை

கிருஷ்ணன்

கடந்த பன்னிரண்டு வருடங்களின பின் கிளிநொச்சி




உதைபந்தாட்ட லீக் கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தி சென்றமாதம் 28ம் திகதி நிறைவு செய்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த காலங்களில் பல்வேறு புறச்சூழல் காரணமாக இடை நடுவில் அது நடத்திவந்த சுற்றுப் போட்டிகள் கைவிடப்பட்டிருந்த நிலையில் மேற்படி போட்டியும் மழை காரணமாக கைவிடப்பட்டு விடுமோ எனப் பல்வேறு தரப்பாலும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதில் லக்கிஸ்ரார் அணி உழவர் ஒன்றிய அணியை 4:0 என்ற கோள் எண்ணிக்கையில் தோற்கடித்தும் இருந்தது.

இப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றிய கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அபிவிருத்திச் செயலாளர் திரு. அன்ரன் அன்பழகன் தெரிவிக்கையில்: இச்சுற்றுப் போட்டியின் வெற்றி என்பது மாவட்ட ரீதியாகக் கலந்துகொள்ளும் சுற்றுப் போட்டியில் கிளி. மாவட்ட அணி பெற்றுக் கொள்ளும் வெற்றியிலேயே தங்கியுள்ளது எனவும், 2002ம் ஆண்டு குறைந்தது நான்கு சுற்றுப்




போட்டிகளையாவது அனுசரணையாளர்களின் உதவியுடன் நடத்துவது எனவும், அடுத்த சுற்றுப் போட்டி எதிர்வரும் தைப் பொங்கலுக்கு நடத்தப்படும் எனவும் அதற்கு தயாராகுமாறும் தொடர் பயிற்சிகளில் ஈடுபடும் வண்ணமும் கழகங்களைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் மத்தியஸ்தர்களுக்கான சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பரீட்சை எதிர்வரும் மார்கழி மாதம் நடத்தப்படும் எனவும், இதற்கு 21 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த சாதாரணம் படித்த உதைபந்தாட்ட வீரர்கள் கலந்துகொள்ள முடியும் எனவும், ஆர்வமுடையவர்களை கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்குடன் தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுக்கொண்டார்.

சவுதிஅரேபியா, தென்கொரியாவைத் தொடர்ந்து யப்பானும், சீனாவும் தற்போது உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளும் ஆசிய நாடாக மாறியுள்ளது. இதற்குக் காரணம் இன்றைக்கு 13 வருடங்களுக்கு முன்னர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட தொடர் பயிற்சியே யாகும்.இதனையே இன்று இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் பின்பற்றுகின்றது.


இது இவ்வாறிருக்க கிளி உதைபந்தாட்ட லீக்கும் தெரிவு செய்யப்பட்டும் பாடசாலைகளிடையே 14 வயதிற்குக் கீழ், 16 வயதிற்குக் கீழ், 20 வயதிற்குக் கீழான போட்டிகளையும் தொடர் பயிற்சிகளையும் வழங்க முன்வந்துள்ளது. எனவே ஆர்வமுடைய பாடசாலைகளை தொடர்பு கொண்டு பதிவு செய்யும் படிகேட்கப்படுகின்றது.

அத்துடன் கிளிநொச்சிக்கான பயிற்சி மைதானங்கள், உபகரணங்களுடனான பயிற்சி, நிலையங்கள், என்பவற்றை உருவாக்க கிளி. அரச அதிபர் திரு.தி. இராசநாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார். இதனடிப்படையில் கனகபுரம்மைதானம் பயிற்சி நிலைய மைதனமாக அபிவிருத்தி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி மைதானமாக கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தை உபகரணவசதியுடனான பயிற்சி மண்டபம் ஜிம்னாசியம் நானூறு மீற்றர் ஓடுபாதை, உதைபந்தாட்டக்களம், என்பவற்றுடன் உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக கிளி. கல்விவலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ம.பத்மநாதன் தெரிவித்திருந்தார். இவை எமது மாவட்ட உதைபந்தாட்ட தரவளர்ச்சிக்குரிய ஊன்று கோல்களாக அமையும் எனத் திடமாக நம்பலாம். ▼


## 1ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 17 * 04 * 1974



தாயக மடியில் 11 * 11 * 2001

**கப்டன் பருதியப்பன்**

(செல்லப்பா சிவகுமார்)

(திதி- 01-11-2002)

காணாத தொலைவிற்குள்
கண்ணுறங்கும் சோதரனே!
வீணாகப் போகாது
உந்தனது கனவுகளே!
பருதி! உன் நினைவுகளை
ஆறாமல் சுமக்கின்றோம்
ஓராண்டாய் சேமித்த
கண்ணீர்ப்பூ சொரிகின்றோம்.

என்றும் உன் பிரிவால்வாடும்
அப்பு, அம்மா,
பெரியண்ணா குடும்பம்,
அண்ணாமார்,
அக்காமார், தம்பிகள், தங்கைகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

பலாலி கிழக்கு,
பலாலி. (2574)

# 6 ம் ஆண்டு நினைவு வணக்கம்



**லெப்.கேணல் நாதன்**
கந்தையா பேரின்பநாதன்
அரியாலை,
யாழ்ப்பாணம்.



**கப்டன் கஜன்**
கந்தையா கஜேந்திரன்
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

## வீரச்சாவு 26–10–1996

உயிர் வற்றிய மனிதம்
விழிகளில் ஜீவன் தேக்கி
மௌனப் புலம்பலுடன்
வைகறை வரம் தேடி
தவம் செய்து கிடக்கும்
மானிடத் தேடலில்
இந்த மரணங்கள்
மறுபடியும் உயிர்க்கும்!
-கப்டன் கஜன்-

புலம் பெயர்ந்த மண்ணிலும்
தாய்நிலம் விடிய
வையமெல்லாம்
சுதந்திரப்பாடல் இசைத்துத்
திரிந்த இந்த விடுதலைப்
பறவைகள் பாரிஸ் நகரத்து
வீதியில் கடந்த 26.10.1996
அன்று கொடிய
கொலைக்கரங்களால்
வீழ்த்தப்பட்டார்கள் ...
விதையாய்..

-அன்புத்தம்பிகள், குடும்பத்தினர்-


பதிப்புலகின் புதுப்பொலிவில்

# அந்திவானம் பதிப்பகம்

சிறந்த உங்கள் சேவைக்காக
நேரச்சு பதிப்புகள்

வேணாவில், புதுக்குடியிருப்பிலும் யாழ்சாலை, கிளிநொச்சியிலும்

அழகு மிளிரும் அச்சுப்பதிப்புகளின் சிகரமாக
இயங்கிவரும் ஒப்பற்ற பதிப்பகம்
தனது பின்வரும் சேவைக்களை உங்களுக்குத் தரக்காத்திருக்கின்றது!

நேரச்சு
(OFF SET)
துணியச்சு
திரையச்சு
(Screen Printing)
அச்சக வேலைகள்
முத்திரை
(Ruber Stamp)

ஒரே இடத்தில், முதல்த்தரத்தில்,
குறித்த தவணையில், குறைந்த விலைகளில்,
கண்கவர் வண்ணங்களில்,
உடனுக்குடன் தேவைகளை பூர்த்தி செய்திட,
தரம் நாடுவோர் தவறாது நாட வேண்டிய
தன்னிகரற்ற பதிப்பகம்!

கணினி வேலைகள்
நிழற்படி (Photostar)
மென்தாட்காப்பிடுகை (Laminating)
கல்லச்சு (Roneo)
தட்டச்சு
பாடசாலை
உபகரணங்கள்

அந்திவானம் பதிப்பகம்

Design by P.K


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.